பொது சன நூலகம்
0 7 MAY 2002
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

விலை ரூபா: 14.00 பக்கங்கள்:-(08+16) Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI






சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 23 திங்கட்கிழமை (06.05.2002) தொலைபேசி 3378 ஒலி 138

## வாகரைச் சம்பவத்திற்கு புலிகள் கண்டனம்

# யுத்த நிறுத்த மீறல்கள் இயல்பு நிலையை பாதிக்கும்

அன்பு வாசகர்களே! ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் சங்கு நாதம் + வலம்புரி விலை ரூ. 14மட்டும் கேட்டு வாங்குங்கள்

## விடுதலைப் புலிகள் அறிக்கை

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு வாகரைக் கடற்பிரதேசத்தில் ஸ்ரீலங்காக் கடற்படையினர் கடந்த புதன்கிழமை மீனவர்களின் வள்ளங்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலும் இரண்டு முஸ்லிம் மீனவர்கள் கொல்லப்பட்டமையும் யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறும் கடுமையான செயல் என்று கண்டித்து விடுதலைப் புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.**

கடந்த புதன்கிழமை வாகரை கடற்பரப்பில் மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் சம்பவமானது யுத்த நிறுத்த உடன்படிக்கையை பாரதூரமாக மீறிய சம்பவமென விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப் பணிமனை "ஸ்ரீ லங்கா கடற்படையின் பாரதூரமான யுத்த நிறுத்த மீறல்" என்று தலைப்பிட்டு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த 1ம் திகதி வாகரைக் கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த சிங்கள, முஸ்லிம், தமிழ் மீனவர்கள் மீது கடற் படையினர் தாக்குதல் நடத்தி அவர்களின்

(02ம் பக்கம் பார்க்க)

## அரசின் சமாதான முயற்சிக்கு ரொனிடிமெல் பூரண ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு தாம் பூரண ஆதரவு வழங்குவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ரொனி டிமெல் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வெலிகம ஹறங்காராம விகாரையில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நாட்டில் அமைதியையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் முகமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து

(02ம் பக்கம் பார்க்க)

# வாகரை மீனவர் விவகாரம் விபரங்கள் கிடைக்கவில்லை

## கண்காணிப்புக் குழுத்தலைவர் பி.பி.ஸி க்குப் பேட்டி

(லண்டன்)

மட்டக்களப்பு வாகரைக் கடற்பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்த கண்டன அறிக்கையை நான் இன்னமும் படிக்கவில்லை. அத்துடன் தாக்குதல் சம்பவத்தில் அகப்பட்ட மீனவர் பற்றி எந்த விவரமும் என்னிடம் இல்லை என்று நோர்வேயின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் பி.பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு வாகரைக் கடற் பிரதேசத்தில் இடம்பெற்ற மீனவர்களின் தாக்குதலுக்குள்ளான சம்பவத்தைக் கண்டித்து விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே பி.பி.ஸி செய்திளாளர் கேட்ட போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் அந்த அறிக்கை தொடர்பாக பி.பி.ஸி செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளித்த

(02ம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கில்

# 3000 தமிழ் ஆசிரியர்கள் உடன் நியமிக்கப்படுவர்

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு மிக விரைவில் 3000 ஆசியர்கள் நியமனம் பெற உள்ளார்கள் என்று வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில், சுகாதாரம் கல்வி தொடர்பாக இடம்பெற்ற "அதே இடத்தில் தீர்வு வழங்கும் சேவையை" ஆரம்பித்து வைத்துப் பேசிய அமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் பேசும்போது மேலும் தெரிவித்திருப்பதாவது;

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போது தமிழ் மொழி மூலம் 6500

(02ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்து

ின்னமும் படிக்கவில்லை. அத்துடன் ...க்குதல் சம்பவத்தில் அகப்பட்ட ...னவர் பற்றி எந்த விவரமும் என் ...டம் இல்லை என்று நோர்வே


வாகரைக் கடற் பிரதேசத்தில் இடம் பெற்ற மீனவர்களின் தாக்குதலுக்குள்ளான சம்பவத்தைக் கண்டித்து விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை

விடுதலைப் புலிகளின் அந்த அறிக்கை தொடர்பாக பி.பி.ஸி செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளித்த

(02ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டால் இந்தியாவின் பாதுகாப்பு பலப்படும்

## முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால்



(கொழும்பு) இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் இந்தியாவின் பாதுகாப்பும் அமைதியும் பலப்படுத்தப்படும் என்று முன்னாள் இந்தியப் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஐ.கே. குஜ்ரால் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் தெற்காசிய பிராந்திய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.

மாநாட்டில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

தற்போது நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளில் இந்தியா பங்கேற்கும் என்று நான் நம்பவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(வ)

# சமாதான முயற்சிகள் குறித்து சார்க் நாடுகளுக்கு விளக்கம்

## வெளிவிவகார அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு விளக்கமளிக்க உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு அடுத்தவாரம் மாலைதீவிற்கு விஜயம் செய்து சமாதான முயற்சிகள் தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை சமாதான முயற்சிகள் குறித்து ஏற்கனவே இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு வெளிவிவகார அமைச்சர் விளக்கிக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

# நோர்வேத் தூதுக் குழு விரைவில் கொழும்புவரும்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான முயற்சிகளை முனனெடுத்து வரும் நோர்வேத் தூதுக் குழு மிக விரைவில் கொழும்புக்கு வந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்திக்கவுள்ளது.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கீசன் தலைமையில் கொழும்பு வரும் இக்குழுவினர் விடுதலைப் புலிகளின் தடை நீக்கம், தாய்லாந்தில் இடம் பெறும் பேச்சுவார்த்தை குறித்து பிரதமருடன் கலந்தாலோசிப்பர்.(ந)

# அரசியல் துறை கோட்டச் செயலகம் இன்று திறப்பு

(யாழ்ப்பணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல்துறை கோட்டச் செயலகம் வதிரி- நெல்லியடியில் இன்று காலை 1.00 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

திறப்புவிழா வைபவத்தின்போது ஈகச் சுடர் ஏற்றுதல், தேசியக் கொடி ஏற்றுதல், அக வணக்கம், தமிழ்த் தாய் வணக்கம், பெயர்ப் பலகைத் திரைநீக்கம் செயலகம் திறந்துவைத்தல்

(02ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் தடை நீக்கத்தை எதிர்த்து

# ஆர்ப்பாட்டத்திற்கு பிக்குகள் ஏற்பாடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாதெனக்கோரி எதிர்வரும் 11ம் திகதி சனிக்கிழமை புத்தபிக்குகள் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றையும் பொதுக் கூட்டத்தையும் நடத்தவுள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டாமென சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை நேரில் சந்தித்து கோரவுள்ள நிலையில் பிக்குகளின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

# யாழ்ப்பாணத்தில் யூனியன் அஷ்யூரன்ஸ்

## இன்று திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு மக்களின் நன்மை கருதி யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிற்றெட் இன்று இல.139,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் உள்ள கட்டிடத்தில் திறந்து வைக்கப் படவுள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிறரெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி சரத்விக்கிரமநாயக்கா பொதுமுகாமையாளர் (விற்பனை) ரமல்யாசிங்க ஆகியோர் இன்று நண்பகல் 12.05 மணியளவில் திறந்துவைக்கவுள்ளனர்.

(ந)

# இந்துக்குருமாருக்கு அந்தணரல்லாதோர் அறிவுரை கூறுகின்ற நிலை மாறவேண்டும்

## சர்வதேச இந்துமத குருபீடாதிபதி வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

நமது முன்னோர்களால் கடைப்பிடித்து காப்பாற்றப் பட்ட குருமார்களின் தனித் துவம் தற்போது மருவி வரு கிறது.

குருமார்கள் வேத பாடங் களையும் ஆகம கிரியைகளை யும்கற்றால்மட்டும்போதாது. சமய தத்துவங்கள், புராணங் கள், இதிகாசங்கள், சைவ சித்தாந்தங்கள், ஜோதிடம் போன்ற அனைத்திலும் பூர ணத்துவம் பெற வேண்டும்.

குருமார்களுக்கு, அந்தண ரல்லாதவர்கள், அறிவுரை கூற எண்ணும் நிலை மாற வேண்டும். இந்துமத குரு மார்களின் தனித்துவம் என் றுமே பேணப்பட வேண்டும்

இவ்வாறு, சர்வதேச இந்து மத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார், கடந்த புதன்கிழமை சர்வதேச இந்துமத குருபீடத்தின் யாழ். மாவட்டஅமைப்பாளர் களின் ஏற்பாட்டில் சங்கானை யில் அமைந்துள்ள யாழ். மாவட்டச்செயலகத்தில்நடை பெற்ற இந்து மத குருமார்க ளின் கலந்துரையாடலின் போது உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரை யாற்றுகையில்;

குருமார்கள் தமது கடமை களை உணர்ந்து திறம்பட செயற்பட வேண்டும். தங் களை எந்தக்கணத்திலும் பணத்திற்காகவோ விசேட சலுகைகளுக்காகவோ சில அரசியல்வாதிகளின் அதிகா ரத்திற்கு அடிமைப்படுபவர் களாகவோ மாற்றிக்கொள் ளக் கூடாது.

இந்நிகழ்வில்யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் சங் கானை சிவப்பிர்ம ஸ்ரீ-சிவ நித்தியானந்தசிவாச்சாரியார் மாவை ஆதீனம் மஹாராஜ ஸ்ரீ-சு.து. ஷண்முகநாதக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(உ)

## விசேட அ.அ படையினரால் பார்வை

(நெல்லியடி)

யாழ். செயலகத்தில் இயங்கி வந்த விசேட அடையாள அட்டை வழங்கும் பிரிவு கடந்த வியாழக்கிழமை முதல் மூடப்பட்டபோதிலும்,

விசேட அடையாள அட் டையைக் காட்டுமாறுபடையி னர் பொதுமக்களை வற் புறுத்தி வருவதாக கூறப் படுகிறது.

இதேவேளை, கடந்த6ஆண் டுகளாக மேற்படி பிரிவில் கடமையாற்றி வந்த பலர் நிர்க்கதிநிலைக்குத் தள்ளப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக் கது. (உ-247)

## வருடாந்த மஹோற்சவம்

(இணுவில்)

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயவருடாந்த மஹோற்சவம் நாளை செவ் வாய்க்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து ஒன்பது தினங் கள் திருவிழா நடைபெற்று பத்தாம்நாளான எதிர்வரும் 16 ஆம் திகதிவியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும்இடம்பெற வுள்ளது. (உ-8,49)

## இராசி பலன்

06-05-2002

(சித்திரை 23, திங்கள்)
நவமி காலை 6-40
சதயம் பி. இ. 3-27
நல்லநேரம் 7-26 - 8-56
இராகுகாலம் 11-56 - 1-26

**மேடம்**
மனமகிழ்ச்சி, தெய்வசிந்தை, பணவரவு, காரியவெற்றி

**இடபம்**
முயற்சி கைகூடும், தொழில் மேன்மை, கடின உழைப்பு, நண்பர்களால் உதவி

**மிதுனம்**
உடல் களைப்பு, அலைச்சல், கடின உழைப்பு, காரிய தாமதம்

**கடகம்**
போசன சுகம், காரியத்தடங்கல், உடல் அலுப்பு, தேவையற்ற மனக் கசப்பு

**சிங்கம்**
அபூர்வ சந்திப்பு, முயற்சி கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, தூரப்பயணம்

**கன்னி**
காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி ஆரோக்கியம், எதிர் பாராத பயணம்

**துலாம்**
காரியத் தடங்கல், மனக் கவலை, தொழில் மந்த நிலை கௌரவக் குறைவு

**விருச்சிகம்**
பகைவர்களால் நன்மை, ரோகபயம், உறவினரால் நன்மை, முயற்சி தாமதம்

**தனுசு**
அன்னியர் சந்திப்பு, கூட்டு முயற்சி, தொழில் வெற்றி, ஆரோக்கியம்

**மகரம்**
தொழில் மந்தம், பொருள் விரயம், கௌரவக் குறைவு மதிப்பு இழப்பு

**கும்பம்**
பொருள் வரவு, கூட்டு முயற்சி, பெரியோர் ஆசி, தெய்வ சிந்தை

**மீனம்**
பிதா சிந்தை, சுபசெலவு, பொருள் விரயம், காரிய தாமதம்

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது.)

வளவன்

## கிராம உத்தியோகத்தர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கிராம உத்தியோகத்தர்க ளுக்கான நிர்வாக ஒழுங்கு கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நாளை யாழ் செயலக கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

இரு தொகுதிகளாக நடை பெற இருக்கும் இக்கலந்து ரையாடல் மு.ப 10.00 மணி க்கு நெடுந்தீவு, ஊர்காவற் றுறை, வேலணை, தெல்லிப் பழை, சங்கானை, உடுவில் சண்டிலிப்பாய், ஆகியபிரதேச கிராம உத்தியோகத்தர்களுக்கும் பி.ப 2 மணிக்கு பருத்தித் துறை, கரவெட்டி, மருதங் கேணி, கோப்பாய், சாவகச் சேரி, யாழ்ப்பாணம், நல் லூர் ஆகிய பிரதேச கிராம உத்தியோகத்தர் களுக் கும் நடைபெறும்.

இக் கலந்துரையாடலுக்கு மேற் குறிப்பிட்ட பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் அனைவரையும் தவறாது சமு கமளிக்கும்படியும் அத்துடன் தமது பிரதேசத்தில் இராணு வத்தின் பாவனையில் உள்ள கோவில்கள், வீடுகள், பாட சாலைகள் போன்றவற்றின் விபரங்களையும், இதுவரை யில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப் படாத பிரதேசங்கள் பற்றிய விரிவான தரவுகளையும் கொண்டுவருமாறு மேலதி அரச அதிபர் கு. வைத்திலிங் கம் கேட்டுள்ளார்.

இதேவேளை மேற் குறிப் பிட்ட பிரதேச செயலர் பிரிவுரீதியான சமுர்த்தி உத் தியோகத்தர்களுக்கான கலந் துரையாடல் நாளை மறுதி னம் இதேஒழுங்கில் நடைபெ றவுள்ளது. (த-5)

## பண்ணிசைப் போட்டி முடிவுகள்வெளியாகின

(இணுவில்)

இணுவில், ஸ்ரீ பரராஜசேக ரப் பிள்ளையார் ஆலய வரு டாந்த உற்சவத்தையொட்டி திருநெறிய தமிழ் மறைக் கழகம் நடத்தியபண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியி டப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களை யும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

ஆரம்ப பிரிவு
த. தவர்ஜனா- இணுவில் மத்திய கல்லூரி உ. கிருஷிகா தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அ. மதுபாஜினி- இணுவில் மத்திய கல்லூரி

கீழ்ப் பிரிவு
சே. சோபிகா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாட சாலை செ. பிரபூர்ணா-தெல்லி யூனியன்கல்லூரி ஜெ. சந்துரு கேஷன்-தெல்லி. மகாஜனாக் கல்லூரி

மத்தியபிரிவு:-
தெ. பவனுஜா- வேம்படி மகளிர் கல்லூரி, பி. வாசுகி- மானிப்பாய் மகளிர் கல்லூரி, ஸ்ரீ. துளசி- மானிப்பாய் மக ளிர் கல்லூரி.

மேற்பிரிவு:-
வ.நிருஷா- மானிப்பாய் மகளிர் கல்லூரி, சு.கபிலன்- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, அ.அமிர்தலோசன்-இணுவில் மேற்கு வட்டுவினி,

(உ-49)

## கண்காணிப்புக்குழு அதிகாரி வடமராட்சி மீனவ சமாச பிரதிநிதிகளுடன் சந்திப்பு

(மந்திகை)

யுத்த நிறுத்த கண்காணிப் புக் குழுவின் கடல் விவகாரங் களுக்குப் பொறுப்பான அதி காரி நேற்று முன்தினம் வட மராட்சி கடற் றொழிலாளர் சமாசத்தில் மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சமாசப் பிரதி நிதிகளுடன் கலந்துரையாடி யுள்ளார்.

மீனவர்கள்கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு படையினரால் விதிக்கப்பட்டுள்ள நேர, தூரக்கட்டுப்பாடுகள்தொடர் பாகவும் மற்றும் கடற் றொழிலில் ஈடுபடுவதற்கான பாஸ் நடைமுறைகளினால் எதிர் நோக்கும் சிரமங்கள் தொடர்பாகவும் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு அதிகாரி யிடம் சமாசப் பிரதிநிதிகள் விரிவாக எடுத்துக் கூறினர்.

இதேவேளைபருத்தித்துறை நகரில் சிவில் நிர்வாகம் அமைந்துள்ள பகுதியில் இருக் கும் ஆலயங்கள், பாடசாலை களுக்கு செல்லும் பொது மக் களின் அடையாள அட்டை களை படையினர் பரிசோத னைக்கு உட்படுத்துதல் மற் றும் ஏனைய கட்டுப்பாடுகள் தொடர்பாகவும் அவர்கள் கண்காணிப்புக்குழு அதிகாரி யிடம் முறையிட்டுள்ளனர்.

(மற்றொரு செய்தி 6ம் பக்கத்தில்) (த-23)

### யுத்த நிறுத்த

படகுகளை மூழ்கடித்துள்ள னர்.

இந்தச்சம்பவத்தில் இரண்டு முஸ்லிம் மீனவர்கள் உயிரி ழந்தனர். 36 மீனவர்கள் மயிரிழையில் உயிர்தப்பியுள்ள னர்.

கடற்படையினரின் இந்தப் பாரதூரமான யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறலானது எமக்கு பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது;

மீனவர்களின் படகுகளை மூழ்கடித்து இரண்டு மீனவர் களையும் கொன்றுவிட்டு விடு தலைப்புலிகளின் ஆயுதக் கப் பலை தாம் தாக்கியழித்த தாக கடற்படையினர் திரித் துக்கூறமுற்படுவது எமக்கு பெரும் அதிர்ச்சியையும் ஆச் சரியத்தையும் ஏற்படுத்தியுள் ளது.

கடற்படையினரின் இவ்வா றான யுத்தநிறுத்த மீறல் தொடருமாயின் அது மெது வாக உருவாகிவரும் இயல்பு நிலையைப் பாதித்து மிக மோசமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

இந்த யுத்தநிறுத்த மீறல் சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு விடம் எடுத்துக்கூறியுள்ள தாகவும் இது தொடர்பாக உடனடி விசாரணைகள் நடத் தப்படவேண்டுமெனவும் விடு தலைப்புலிகள் அந்த அறிக்கை யில் கோரியுள்ளனர். (த)

### 3000 தமிழ் ஆசிரியர்

ஆசிரியர்களுக்கு வெற்றி டங்கள் உள்ளது இதில் மூவாயிரம் ஆசிரியர்களைஉட னடியாக நியமனம் செய்வத ற்கான அங்கீகாரம் பெறப்ப ட்டுள்ளது.

உடனடியாக நியமனம் பெறவுள்ள மூவாயிரம் ஆசிரியர்களுள் தொண்டர் ஆசிரியர்கள், க.பொ. உயர்தர த்தில் சித்தி யெய்தியவர்கள் மற்றும் பட்டதாரிகளும் அட ங்குவர் என்றும் தெரிவித்தார்

இதேவேளைவடக்குக் கிழ க்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையில் 50வீத வெற்றிடங்கள் உடன் நிரப்பப்படும் என்றும் வன் னிப் பகுதிகளில் நிலவும் கல்விக் குறைபாட்டை நிவர் த்திசெய்ய 143 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது என் றும் வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் க. சண்முகலிங்கம் தெரிவித் துள்ளமையும் இங்கு குறிப்பி டத்தக்கது (வ)

விலகி பொதுஜன ஐக்கியமுன் னணிக்கு ஆதரவளித்து வந் தேன்.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணியினால் நாட்டில் சமாதானத்தையோ பொரு ளாதார அபிவிருத்தியையோ ஏற்படுத்த முடியவில்லை.

இந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட் டில் நிரந்தரசமாதானத்தை யும் பொருளாதார அபிவிருத் தியையும் ஏற்படுத்துவதற்கு மேற்கொண்டுவரும் சகல நடவடிக்கைகளுக்கும் தனது பூரண ஆதரவு என்றும் இருக் கும் என்று அவர் மேலும் கூறினார். (த)

அவர் இலங்கைக் கடற்படை யினருடன்கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவரும் சென்ற வேளை சம்பவம் இடம்பெற் றது எனினும் அது தொடர் பான உறுதியான ஆதாரம் எதுவும் எங்களிடம் இல்லை என்றார்.

யுத்தநிறுத்த கண்காணிப் புக்குழு உறுப்பினர்கள் இன் னமும் அதிகமாக நியமிக்கப் படவுள்ளனர். இம்மாத முடி வுக்குள் அவர்கள் உரியஇட ங்களில் நியமிக்கப் படுவார் கள் என்றும் அவர் தெரிவித் தார் (ம)

## ஹொக்கிப் போட்டி

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் 7 பேர் கொண்ட ஹொக்கி சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்று பி.ப. 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது. (த)

## நீர்பெற சிரமம்

சாவகச்சேரி கோயிற் குடி யிருப்புப் பகுதியில் உள்ளவீட் டுக் கிணறுகள் சிலவற்றில் இன்னமும் அகற்றப்படாது மிதிவெடிகள், மற்றும்கண்ணி வெடிகள் இருப்பதாக கருதப் படுவதால், மீளக்குடியமர்ந்த மக்கள நீரைப் பெற சிரமப் பட்டு வருகின்றனர்.

(உ-124)

### கோட்டச் செயலகம்

உட்பட சிறப்புரைகள் என் பன இடம்பெறவுள்ளன.

இவ்விழாவில் அனைத்து தமிழ்மக்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்புவிடுக் கப்பட்டுள்ளது. (வ

பதவி வெற்றிடம்

★ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
★ பத்திரிகை விநியோகிப்போர்

07.05.2002 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி

15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# அப்பர் காட்டிய வழியில் ஆண்டவனை வேண்டி

# சிறுமைகள் நீக்கிப் பெருமையுடன் வாழ்வோம்

(இன்று திருநாவுக்கரசுநாயனாரின் குருபூஜை தினம்)

பண்டிதர்

**தி. பொன்னம்பலவாணர்**

**சை**வத்தமிழ் மக்கள் பெருமை அடைவதற்கும் சிறுமைகளிலிருந்து மீள்வதற்கும் சமய குரவர் நால்வருமே வழிகாட்டிகளாவர். இவர்கள் காட்டிய வழியில் சென்றால் நலம்பல எளிதில் அடையலாம் சிறுமைகள் நீங்கிச் சிறப்புறலாம்.

மிகக் கொடிய அநீதிகள் அரசனால் இழைக்கப்பட்டபோது அப்பர் சுவாமிகள் புலம்பவில்லை பிறரைக் குறை கூறவில்லை. அரசனையோ அரசனைச் சார்ந்தவர்களையோ இரக்கவில்லை. சிவபெருமானை வணங்கினார். பஞ்சாட்சரத்தைச் செபித்தார். பெருமையும் மகிழ்வும் அடைந்தார். கொடுமைகள் இழைத்த மன்னன் தன்னை வணங்கிய போது அவனுக்குத் திருநீறு வழங்கினார். தனக்குக் கொடுமைபுரியக் காரணமான சமண குருமாரைக் கோபிக்கவுமில்லை- வெறுக்கவுமில்லை அவர்களைத் தண்டிக்கும்படி அரசனுக்குக் கூறவுமில்லை

கொடுமைகள் பெருமையாயின

அப்பர் சுவாமிகள் செய்த அற்புதங்களுக்கெல்லாம் காரணம் அவர் சிவபெருமானை வணங்கியமையேயாகும். அற்புதம் செய்து தன்னைப் பிறர் மதிக்கச்செய்ய வேண்டுமென எக்காலத்தும் அப்பர் கருதியதில்லை. கொடுமைகளைக் கண்ட போது அவர் சிவபெருமானைப் பாடினார். கொடுமைகள்பெருமைக்குரியனவாக மாறின.

பழையாறை சிவாலயம்

பழையாறை என்ற ஊருக்குச் சென்ற அப்பரடிகள் சமணர் தம் ஆதிக்க வலிமையால் சிவாலயம் ஒன்றை மறைத்து அதனைத் தமக்குரிய இடமாக வைத்திருப்பதை அறிகின்றார். உடனேசிவபெருமானை வேண்டி உண்ணாவிரதமிருக்கின்றார். சிவபெருமான் அப்பரின் வேண்டுதலை ஏற்று அரசன் கனவிலே தன் ஆலய அடையாளங்களையும் சமணர் செய்வதையும்அப்பரடிகள் வணங்கக் காத்திருப்பதையும் உணர்த்துகின்றார். உடனே அரசன் செயற்படுகிறான். சிவாலயம் 'பழையாறை வடதளி' என்பது மன்னனால் வெளிப்படுத்தப்படுகின்றது. அரசனே நித்திய பூசை முதலியவற்றுக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்கின்றான். திருநாவுக்கரசர்சென்று வணங்கி மகிழ்கின்றார்.

இதே போல அப்பூதியடிகளின் பணிகளை அறிந்து அவரிடம் சென்று அவரது பெருமையை அறிகின்றாரேயன்றிதன்பெருமையை அப்பர் காணவில்லை.

அப்பர் வழி

இப்படிப்பல செயல்களின் மூலம் நம் வாழ்வுக்கு அப்பர் வழிகாட்டியுள்ளார்.

எங்களுக்கு உள்ள துன்பங்களால் எப்படி நாம் மனம் சலியாது சிவபெருமானைத் துதிக்க வேண்டும் பஞ்சாட்சர செபம் செய்ய வேண்டும் என்பதையும் கீரிமலை, மாவிட்டபுரம், கேதீச்சரம்முதலிய ஆலயங்கள் பூசைநடை பெற நாம் என்ன செய்யவேண்டும்மென்பதையும் நமக்கு அப்பர் சுவாமிகள் வாழ்ந்து காட்டியிருக்கிறார்.

அவரைச் சிந்திக்கத் தூண்டும் அவரது குருபூசையை முன்னிட்டேனும் அப்பர் காட்டிய வழியில் வாழ முயல்வோம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை

(யாழ்பபாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று காலை 9.00 மணியளவில் நல்லூர் ஸ்ரீ சட்டநாத சுவாமி தேவஸ்தானத்திலும்,

மாலை 4.00 மணியளவில் கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்திலும் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர். (உ).

## பாவனையாளர் சிரமம்

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைகள் சிலரின் பொழுது போக்கு நிலையங்களாக மாறி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதனால் தமக்குத் தேவையான அத்தியாசியப் பொருட்களை பெறுவதிலும் பங்கீட்டுப் பொருட்களை உரிய முறையில் பெறுவதிலும் பலத்த சிரமங்களையும் இடையூறுகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதாகப் பாவனையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (உ-79)

## விபரம் சேகரிப்பு விரைவில் முடிவுறும்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யு. என். ஏச். சி. ஆர். நிறுவன அனுசரணையுடன் புனர்வாழ்வு அமைச்சினால் திரட்டப்பட்டு வந்த இடம்பெயர்ந்தோர் பற்றிய விபரங்கள் சேகரிக்கும் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளன. (உ-232)

# ஆன்மீக நிலைக்களனாக விளங்கிய ஆலயங்கள் இன்று வர்த்தக மையங்களாக மாறுகின்றன

## இந்து கலாசார அமைச்சர் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

இந்துக் கோயில்கள் பல இன்று ஆன்மீகத்தையும் சமயத்தையும் போதிக்காமல் வர்த்தகநிலையமாக மாறிவருகின்றன. இதுசைவமக்களெல்லாம்வெட்கப்படும் செயலாகும். எனவே சம்பந்தப்பட்டதரப்பினர் பிழைகளையும் முரண்பாடுகளையும் உணர்ந்து தம்மைத் தாமே திருத்திக்கொள்ள வேண்டும் என இந்து விவகாரஅமைச்சர் தி. மகேஸ்வரன் சீற்றம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற சைவமாநாட்டில் உரையாற்றும்போதே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனைச்சேர்ந்த ஆத்மகணானந்தஜி தலைமையில் இடம்பெற்ற அந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது; யுத்தசூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக பல இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மாறிக்கொண்டு இருக்கின்றார்கள்.

பொலிவிழந்த ஆலயங்கள்

அத்துடன் அரியாலைமுதல் வன்னிவரை இந்துக்கோயில்கள் பொலிவிழந்து காணப்படுகின்றன. ஆனால் அதே பிரதேசத்திற்குள்ளே காணப்படுகின்ற பல கிறிஸ்தவ தேவாலயங்கள் புதுப்பொலிவோடும் கம்பீரத்தோடும் காணப்படுகின்றன. அத்துடன் கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்பான நிர்வாக முறை காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

அத்துடன் பல ஆலயங்கள் வர்த்தக நிறுவனங்களாக மாறிவிட்டன. மாறிக்கொண்டும் இருக்கின்றன. எமது முன்னோர்கள் ஆலயம் மூலம் மக்களுக்கு எவ்வளவோ சேவைகளைச் செய்தார்கள். சைவத்தையும் வளர்த்து சமூகப்பணியையும் செவ்வனே செய்துவந்தனர்.

அறப்பணிகள்

குறிப்பாக இந்தியாவிலே இன்றும் ஆலயங்களின்மூலமாக பல அறப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலயங்களில் தமது வருமானங்கள் முழுவதனையும் செலவிடாமல் குறிப்பிட்ட விதத்தினை மக்கள் சேவைக்காக வழங்குகின்றன.

ஆனால் எமது யாழ்ப்பாணத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆலயங்களைத் தவிர ஏனையவை சமூகப் பணியை நினைத்தே பார்ப்பதில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

இன்றும்பல இந்து கோயில்களில் இராணுவத்தினர்நிலை கொண்டுள்ளனர். இது சைவ மக்கள் அனைவரையும் புண்படுத்தும் செயலாகும். இராணுவத்தினரை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது எடுக்கப்பட்டு வருகின்றன. எல்லா ஆலயங்களிலும் பூசை நடைபெறும் நாள் அதிகதொலைவில் இல்லை.

இனிவரும் காலங்களிலே நாம் கூட்டம்கூடி காலத்தைப் போக்குவதைவிட ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டுஅதில் இளையதலைமுறையினரையும் ஈடுபடுத்துவது எமது சமூகத்திற்கு ஆரோக்கியத்தையும் பெருமையையும் ஏற்படுத்தும் என்றார். (க-19-06)

# பலே திருட்டு ஆசாமிகள் வசமாய் மாட்டினர்

(மாத்தறை)

மாத்தறைப் பிரதேசத்தில் நீண்டகாலமாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்டுவந்த இருவர் அண்மையில், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இதுவரை 108 சைக்கிள்களை திருடியுள்ளமைவிசாரணையின் போது தெரியவந்துள்ளது:

மாத்தறையைச் சேர்ந்த கே.எச்.சுரங்க டபிள்யூ. எச். பியசிறி ஆகிய இருவருமே மாத்தறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர்களாவர். (உ-3)

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு பெருகுகிறது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சியின் உறுப்பினர்கள் 60 பேர் ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தாங்கள் கட்சி மாற்றம் செய்தமை தொடர்பாக உடுவெல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் கே.வி. லால் கருத்து தெரிவிக்கையில்;

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின் போது தமக்கு எந்த விதமான சலுகைகளோ அன்றி, தமது தொகுதி மக்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்ற காரணத்தாலேயே தாம் இவ்வாறான முடிவு எடுத்திருப்பதாகவும்,

ஜனாதிபதி சந்திரிகா-பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் போலி என்று கூறிவரினும், அப்போலியிலும் உண்மை உண்டென்பதை அறியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இம் மாத நடுப்பகுதியில் கொழும்பு மத்தியைச் சேர்ந்த 150 ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் கட்சியை விட்டு விலகவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

# நாட்டைப் பிளவுபடுத்தும் நடவடிக்கையைதடுத்துநிறுத்துங்கள்

## ஜனாதிபதியிடம் வலியுறுத்து

(கொழும்பு)

ஓய்வுபெற்ற நீதியரசர் ராஜா வனசுந்தர தலைமையில் தேசியக் கூட்டுக்குழுத் தலைவர் எஸ். எல். குணசேகர ஆகியோரை உள்ளடக்கிய தூதுக் குழுவொன்று, அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து, அரசியல் யாப்பின்படி அவருக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் நாட்டை பிளவுபடுத்துவதற்கு அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளை பயன்படுத்துவதை தடுத்து நிறுத்துமாறு கேட்டுள்ளது.

இது தொடர்பாக, தேசிய கூட்டுகுழு வெளியிட்டுள்ள அறிக்கையில்; இலங்கை மண்ணிலிருந்து ஈழம் என்னும் ஒரு அரசை அமைப்பதற்கு ஏற்ற வகையில் விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை பயன்படுத்துகின்றனர்.

ஒப்பந்தத்தின்படி இடைக்கால நிர்வாகம் பற்றியோ, புலிகள் மீதான தடைநீக்கம் பற்றியோ நடவடிக்கையெதனையும் எடுப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்கவில்லை.

பிரதமரின் விட்டுக்கொடுப்புகளை பயன்படுத்தி ஒரு இடைக்கால அரசையும் அமைத்து, தம்மீதான தடைகளையும் நீக்கிவிட்டால் அதன் பின்னர் புலிகள் வடக்குக்-கிழக்கு பகுதிகளைஆக்கிரமித்து வைத்துக்கொள்ள முடியும். இதனை ஜனாதிபதி அனுமதிக்கக்கூடாது என்று கேட்கப்பட்டுள்ளது. )உ)

## அரசியல் கூட்டமைக்க எதிர்க்கட்சிகள் முடிவு

(கொழும்பு)

நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகள் என்ற வகையிலும், பொதுவான புரிந்துணர்வை கருத்தில் கொண்டும், பொதுஜனஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் அரசியல் கூட்டணியொன்றை அமைக்கவுள்ளன.

சிலமுக்கியமான விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசனை நடத்துவதற்காகவே இக் கூட்டணி அமைக்கப்படவுள்ளதாக இரு கட்சிகளினதும் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்த கருத்து தொடர்பாக ஆராயவே இக் கூட்டணி அமைக்கப்படவுள்ளது. (உ-8)

## நிவாரண அனுமதிப் பத்திரம்

(மந்திகை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்தோர் நிவாரணம், மற்றும்சமுர்த்தி மீனவ நிவாரணம்பெறுவோருக்கான சித்திரை மாத நிவாரணம் அனுமதிப்பத்திரங்களைவழங்கப்பட்டு வருவதாக பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (உ-23)

# வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வை கட்டியெழுப்ப ஐ. நா. அபி. நிறுவனம் உதவும்

## இலங்கை வந்த விசேடகுழு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மக்களின் பொருளாதார மேம்பாட்டை விருத்தி செய்யவும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைப்புச் செய்யவும், இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்தவும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிறுவனங்கள் உதவுமென்று இலங்கை வந்துள்ள ஐ.நா விசேட குழு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களின் மதிப்பீட்டறிக்கை, ஐ. நா செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்படும்என்று இக்குழுவின் தலைவர் எடோவாட் ஏ.வட்டேஷ் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் வடக்கு, கிழக்கு பகுதிகள் மட்டுமல்ல நாடு முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளது;

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்தி மனிதாபிமானத் தேவைகளை வழங்க வேண்டும்.

இவர்கள் பொருளாதாரத்தை ஈட்டுவதற்கான வழிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றும் இத் திட்டங்களுக்கான நிதியுதவியை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி,சர்வதேச அபிவிருத்தி திட்டம்,உதவி வழங்கும் நாடுகளுடன் தொடர்பு கொண்டு நிதியுதவியை பெற்றுக் கொடுக்கவுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டம், மின்னிணைப்புகள், தொலைத் தொடர்பு சேவைகள் போன்றவற்றை விஸ்தரித்தல், வைத்திய வசதிகளை மேற்கொள்ளல் ஆகிய திட்டங்களை நீண்ட, குறுகிய கால திட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-3)

## உலக செஞ்சிலுவை தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் உலக செஞ்சிலுவைத் தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு யாழ். கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா தலைமையில் கூட்டமும், கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா, சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிடப் பிரதிநிதி சிசிலிகுறோஸ், யாழ். பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இத் தினத்தை முன்னிட்டு பிரிவுகளில் சிரமதானம், இரத்ததானம்,மரம் நாட்டும் வைபவம்,வைத்திய முகாம் ஆகிய நிகழ்வுகளுக்கு ஒழுங்குகள், மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-03)

## கோட்ட அலுவலகம் இன்று திறப்பு

(மந்திகை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் துறையினரின் கோட்ட அலுவலகம் இன்று மு.ப.10.00 மணிக்கு நெல்லியடி வதிரியில் திறந்துவைக்கப்படவுள்ளதாக வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா அறிவித்துள்ளார். (க-23)

## ஆசிரியர் இடம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் நிரந்தர நியமனம் பெற்று யாழ். மாவட்டத்தில் தற்காலிகமாகக் கடமை புரியும் ஆசிரியர்கள் மீண்டும் தாம் நிரந்தரமாகக் கடமையாற்றிய பாடசாலைக்கே இடம் மாற்றப்படுவார்கள் என மாகாண கல்விப்பணிப்பாளர் ஐ. எம். இஸ்சதீன் தெரிவித்துள்ளார். (க-10)

## சீமெந்து இறக்கப்படுகின்றது

(மந்திகை)

யாழ்.குடாநாட்டுக்கு வேண்டிய இரண்டாயிரம் மெற்றிக்தொன் சீமெந்துடன் பருத்தித்துறை துறைமுகம் வந்தடைந்த கோமாரி கப்பலில் இருந்து சீமெந்து இறக்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

அத்துடன், இந்துருவலி, கிருந்த ஆகிய கப்பல்களில் இருந்து பொருட்கள் இறக்கும் பணி மழை காரணமாகத் தாமதமடைந்திருப்பதாக தெரியவருகிறது. (உ-23)

வவுனியா மாவட்ட அமைப்பாளர்

## முஸ்லிம்களை புலிகளுக்கு காட்டிக் கொடுத்தார்

### ம.வி.முன்னணி பா.உ.சாடல்

(கொழும்பு)

வவுனியா மாவட்ட அமைப்பாளர் தனது மேதின உரையின் மூலம் முஸ்லிம் மக்களை தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு காட்டிக் கொடுத்து விட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஞ்ஞாறுக தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் மீண்டும் யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படுமாயின், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து போராடத்தயார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் தெரிவித்த கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையிலேயே அவர்மேற் கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக, முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மௌனமாக இருப்பது தொடர்பாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர் என்ற வகையிலேயே தான் இவ் வெதிர்ப்பை தெரிவிப்பதாகவும், தேசியஐக்கியத்தை வளர்ப்பதற்காக தமிழ் சிங்கள மக்கள் பாடு பட்டுவரும் இவ் வேளையில், இவர் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டிருப்பது கண்டனத்துக்குரியது என்பதுடன்,

முஸ்லிம் மக்கள் மத்தியில் தமது கருத்தை பகிரங்கமாக வாபஸ் பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (க-8)

## அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயத்தைச சேர்ந்த பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் வலயத்திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது.

சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம், கைதடி, நுணாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றிற்கே அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

அதிபர் தரத்திலுள்ள ஆசிரியர் சேவையில் வகுப்பு 1, வகுப்பு 2.1, வகுப்பு 2.2 தரத்தைச் சேர்ந்தவர்கள் எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன்பு இதற்கு விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (உ-23)

## ஆசிரியர் வெற்றிட விபரங்கள் சேகரிப்பு

(மந்திகை)

வடமராட்சிக் கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் குறித்த விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம், கல்வி உயர்கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம், மேற்படி விபரங்களை அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிபர்களை, வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-23)

## வடக்கு-கிழக்கில் மீளக்குடியமரும் சிங்கள மக்களுக்கும் இழப்பீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் மீளக்குடியேறும்சிங்கள மக்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்என வன்னிக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் நூர்டீன் மசூர் தெரிவித்துள்ளார்.

மீளக்குடியேறும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 1இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் மீளக்குடியேறும் சிங்கள மக்களின் பாதுகாப்பும், சேமநலன்களும் உறுதிப்படுத்தப்படும்என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்திருப்பதாக கொழும்பு பேஜ் என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-8)

## வீசிய கடும் காற்றினால் வாழைகள் பல முறிவு

(கோப்பாய்)

நேற்றுமுன்தினம் திடீரென யாழ். குடாநாட்டில் வீசிய கடுங்காற்றினால் கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலிப் பகுதியில்பெருமளவு வாழைகள் முறிந்துள்ளன.

இதனால் நேற்று,நீர்வேலியில்இயங்கும் வாழைக்குலைச் சந்தையில் என்றுமில்லாத அளவு பெருமளவு வாழைக்குலைகளைக்காண முடிந்தது.

அத்துடன்,உரியபருவத்தையடையாத வாழைக்குலைகள் மிகவும் குறைந்த விலைக்கு ஆடு மாடுகளின் உணவுத் தேவைக்காக கொள்வனவு செய்யப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. (உ-79)

## கடந்த ஆண்டு உலகம் முழுவதும் 31 ஊடகவியலாளர்கள் கொலை

(கொழும்பு)

கடந்தவருடம் 31 ஊடகவியலாளர்கள் உலகில் கொல்லப்பட்டதுடன் 480 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கு முன்னைய வருடத்தைவிட கைதிகளின் தொகை 50 வீதத்தால் அதிகரித்துள்ளது என கடந்த வெள்ளிக்கிழமை உலக பத்திரிகையாளர் சுதந்திரதினத்தையொட்டி கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, 716 ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர் இது 40 வீதத்தால் அதிகரித்துள்ளது.

378 செய்தித்தடை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன இது 28 வீதத்தால் அதிகாரித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் செய்திகளைப் பயமின்றிவெளியிட்டதால் ஏற்பட்ட விளைவுகளாகும்.

இலங்கையில் பாராளுமன்றம், நீதிமன்றம் ஆகியவற்றில் சில தகவல்கள் வெளியிடத்தடைகள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-3)

## சமாசம் இடமாற்றம்

வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் இன்று திங்கட்கிழமை முதல் பருத்தித்துறைதேசியசேமிப்பு வங்கிக்கு அருகில் இயங்கவுள்ளதாக சமாசத் தலைவர்தெரிவித்துள்ளார். (உ-23)

## இடைக்கால நிர்வாகம் தொடர்பான கிழக்கு மக்களின் கருத்தை அறியவேண்டும்

### பௌத்த மதகுருமார் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தும் முன் கிழக்கு மாகாண மக்களின் கருத்தை அறியும் வாக்கெடுப்பு முடிந்தளவு விரைவில் நடத்தப்படவேண்டும் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு கோரும் றிட் மனுவொன்று பௌத்த குருமார் உள்ளிட்ட கிழக்கு மாகாண பிரசைகள் சிலரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்களான சேருவில ராஜமகாவிஹாரைபிரதமகுரு சரணசித்த தேரர் உள்ளிட்ட பிரசைகள் எதிர்மனுதாரர்களான சட்டமா அதிபர், அமைச்சர் அலிக்அலுவிஹார, அமைச்சுச் செயலாளர் ஆகியோரை குறிப்பிட்டுள்ளனர்.

1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், தமிழர் தாயகத்தில் ஒரு சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற, சமதர்மத் தமிழீழ அரசு அமைக்கப்படுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி மக்களாணையைக் கோரியிருந்தது. ஆனால் கிழக்குமாகாண மக்கள் இதனை நிராகரித்திருந்தனர்.

இந்த நிராகரிப்பை புறக்கணித்து விட்டு அரசும் புலிகளும் போர் நிறுத்த ஒப்பந்தமொன்றை செய்துள்ளனர்.

ஏப்ரல் 10ஆம் திகதிய புலிகளின் தலைவர்பிரபாகரனின் செய்தியாளர் மகாநாட்டின் பின்னர், கிழக்கு மாகாண மக்களின் கருத்துக்களை அறியாமல் வடக்கு-கிழக்கு இணைந்த இடைக்கால நிர்வாகம் அமைவது நிச்சயமானது என்று தெரிகிறது. இது கிழக்கு மாகாண மக்களின் நலன்களுக்கு பாதகமானதாகும்.

பிரபாகரனின் செய்தியாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பற்றி மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர்கள் கூட கவலை தெரிவித்திருந்தனர் இவ்வாறு அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இப்போதுள்ள நிர்வாகக்கட்டமைப்பில் மாற்றங்கள், திருத்தங்கள் செய்வதை அனுமதிக்கக் கூடாது என்று நீதிமன்றத்தை மனுதாரர்கள் கேட்டுள்ளனர்.(உ

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# கோயில் காளை போய் வண்டிக் காளை வந்தது

ஐயப்பூரில் ஒரு விஷ்ணு கோயில் இருக்கிறது. அதற்கு கோவிந்தஜி கோயில் என்று பெயர். அந்தக் கோயிலைச் சேர்ந்த பூசாரிகள் முதலில் பிரம்மசாரிகளாக இருந்தார்கள். எனவே அப்போது அவர்களிடம் ஆத்மபலம் மிகுதியாக இருந்தது. ஒருமுறை ஐயப்பூர் அரசன் அவர்களைத் தன்னிடம் வரச்சொல்லிக் கூப்பிட்டனுப்பினான். ஆனால் அவர்கள் போகவில்லை. 'அரசனை இங்கேவந்து எங்களைப் பார்க்கச்சொல்' என்று பதில் அனுப்பினார்கள்.

சிறிது காலத்திற்குப் பிறகு அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். அதன்பிறகு அர்ச்சகர்களை அழைக்கும் அவசியமே அரசனுக்கு நேரவில்லை. ஏனென்றால் தாங்களாகவே அவர்கள் அரண்மனையில் போய் நிற்பார்கள். 'மகாராஜாவே, ஆசீர்வாதம் செய்ய வந்திருக்கின்றோம். கோவிலில் சுவாமிக்குச் சாத்திய புஷ்பங்களை இதோ கொண்டுவந்திருக்கின்றோம். இவற்றைத் தாங்கள் தயைகூர்ந்து ஏற்று அங்கீகரிக்க வேண்டும்' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். இப்படி அரசனிடம் அடிக்கடி வரவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. 'இன்று வீடு கட்டவேண்டும், இன்றைக்குக்குழந்தைக்கு அன்னப் பிராசனம் நடைபெற வேண்டியிருக்கிறது, இன்று குழந்தைக்கு வித்தியாரம்பக் கிரியை, மற்றொருநாள் பெண்ணுக்கு கல்யாணம்' இப்படியாக அடிக்கடி அவர்களுக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டது. எனவே, அவற்றுக்காக அவர்கள் ராஜசபைக்கு அடிக்கடி நடக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது.

பிறருக்குக் கீழே அடிமைகளாக இருந்து வேலை செய்வதன் பயனை நீங்களே நன்கு உணர்வீர்கள். ஆங்கிலமும் மேனாட்டுப் பயிற்சியையும் பெற்ற இளைஞர்களில் பலர், மற்றவர்களின் கீழ் வேலை செய்து தங்கள் எஜமானர்கள் கொடுக்கும் 'பூட்ஸ்' உதைகளை வாய் பேசாமல் பெற்று அனுபவித்திருக்கிறார்கள். இவ்வளவு அவமதிப்புகளுக்கும் அவர்கள் ஏன் உட்படுகிறார்கள் என்பது தெரியுமா? இவைகளுக்கெல்லாம் அடிப்படையாக உள்ள ஒரே காரணம் பெண்ணாசை ஒன்றுதான். ஆகவே, இவ்வளவு அவமானம் காமமும் காஞ்சனமுமே மனிதனைக் கட்டுப்படுத்துகின்றன. அவை அவனுடைய சுதந்திரத்தையே பறித்துவிடுகின்றன. பெண்ணிற்காகவே ஒருவன் இன்னொருவனுக்கு அடிமையாகித் தன் சுதந்திரத்தை இழக்கின்றான். அந்த இழிந்தநிலையில் உள்ள அவனால் தன் விருப்பப்படி நடக்க முடியாது.

நன்றி
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்.

### சமாதான உடன்பாடு குறித்து

# வெளிநாட்டில்வாழும்இலங்கையர்க்கு விளக்கமளிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசுக்கும்- புலிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகள் குறித்து, வெளிநாடுகளிலுள்ள இலங்கை மக்களுக்கு விளக்கிக் கூறப்படவுள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களூடாக இந் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த அமைச்சரவைக்கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும்,

சர்வதேச சமூகத்திற்குத் தமது சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிப்பதற்கு முன்னர், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற பிரதமரின் ஆலோசனைக்கமைவாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## ஆட்டோ குடை சாய்ந்தது

(மந்திகை)

முச்சக்கர வண்டி குடைசாய்ந்ததில் அதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தமூவர் படுகாயமடைந்துள்ளனர்.

வியாழனன்று நண்பகல் குஞ்சர்கடையடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புலோலி கிழக்கு மாதனையைச் சேர்ந்த ந. சிவசுப்பிரமணியம் (வயது 63) அவரின் மனைவியானசி.வசந்தாதேவி (வயது 61), மகள் சி. சுமதி (வயது 18) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-23)

## சுற்றுலா விடுதி விவகாரம் சூடு பிடிக்கின்றது

(மானிப்பாய்)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள சுற்றுலா விடுதியை தற்போது வடமராட்சி கற்கோவளம் பகுதியில் அமைக்க நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை எதிர்த்து மணற்காட்டுப்பகுதிமக்கள்போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும்,

இந்தச் சுற்றுலா விடுதியை மணற்காட்டுப் பகுதியில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி வடக்கின் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா மற்றும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோருக்கும் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-232)

## தென்மராட்சி பிரதேச செயலர் ஓய்வு பெறுகிறார்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலராக இதுவரை பணியாற்றிய பு. சுந்தரம்பிள்ளை ஓய்வு பெற்றுச் செல்வதைத் தொடர்ந்து இன்று கரவெட்டி பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் அந்த இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் பணிகளையும் மேற்கொள்வார் எனத் தெரியவருகின்றது. (க-77)

## பிரேதப் பெட்டி ஊர்வலத்திற்கு கண்டனம்

(கொழும்பு)

ஜே.வி.பி யின் மேதின ஊர்வலத்தில் பிரேதப்பெட்டிகளை காவிச் சென்றமை மயானது. அதன் கோரமும் கொடுமையும்நிறைந்த கடந்த காலத்தை குறித்துக் காட்டுவதாகும்.

கிராமவாசிகள் கொல்லப்பட்டு வீதிகளில் வீசப்பட்டு, பிரேதப் பெட்டிகளில் எடுத்துச் சென்று உரிய முறையில் அடக்கம் செய்யப்பட முடியாமலிருந்த அவல நிலையை இது நினைவுக்கு கொண்டு வருகிறது.

இவ்வாறு கொழும்பு மத்தி பிரேமதாச நிலையத்தில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார். (உ)

## குடும்ப அட்டை மீளாய்வு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் குடும்ப அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு புதிய குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (உ-23)

## 'கெயர்' அதிகாரிகள் இன்று யாழ் வருகின்றனர்

(மந்திகை)

சர்வதேச தொண்டு நிறுவனமான 'கெயர்' நிறுவன அதிகாரிகள் குழுவொன்று இன்று யாழ். குடாநாட்டுக்கு வரவுள்ளது.

6 பேர் கொண்ட இக்குழு, பி.ப.2 மணிக்கு வடமராட்சி சுப்பர் மடம் பகுதியிலுள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதுடன்,

அப்பகுதியில் கெயர் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களையும் பார்வையிடவுள்ளனர்.

தவிர, ஏனைய பகுதிகளில் தமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களையும் இவர்கள் பார்வையிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ- 23)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கண்காணிக்க மேலும் 25பேர் வரவழைக்கப்படுவர்

(கொழும்பு)

பிரதமராலும் பிரபாகரனாலும் கைச்சாத்திடப்பட்டிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை, கண்காணிக்கும் குழுவிற்கு மேலும் 25 உறுப்பினர்கள் ஐரோப்பாவிலிருந்து வரவழைக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

கொழும்புக்கு மிகவிரைவில் வரவுள்ளஇவர்கள், தமதுபணிகளினை இங்குள்ள கண்காணிப்பாளர்களுடன் இணைந்து மேற்கொள்வார்கள்.

தமதுபணிகளை செம்மையாக செய்வதற்கு போதிய உறுப்பினர்கள் இல்லை என இங்கு பணியிலுள்ளவர்கள் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்தே இவர்கள் 25 பேரும் விரைவில் வரவுள்ளனர்,

கண்காணிப்புக் குழுவின் சுயாதீனம்குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தப்போவதாக பொதுஜனஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ்பெனாண்டோபுள்ளே தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## முகமாலையில் தேநீர் சாலைகள் இன்றி பயணிகள் பெரும் அவதி

(மந்திகை)

முகமாலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள படையினரின் சோதனைச் சாவடி அமைந்துள்ள பகுதிகளில் தேநீர் சாலை இன்றி பயணிகள், அங்கு கடமையாற்றும் ஊழியர்கள், பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதேவேளை பொருட்களை ஏற்றிப் பறித்தல், வீதிதிருத்த வேலைகளில் ஈடுபட்டிருக்கும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கும் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-23)

## பயன் தரு மரக்கன்று நாட்டல்

எதிர் வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை அனுட்டிக்கப்படவுள்ள சர்வதேச செஞ்சிலுவைத் தினத்தையொட்டி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவு கிளையினரால் நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு கிழக்குப் பகுதிகளில் பயன் தரும்மரக்கன்றுகள் நாட்டப்படவுள்ளன. (உ-250)

## கட்டடம் இடிந்து வீழ்ந்து சிறுவன்காயம்

குண்டுவீச்சில்சேதமடைந்த கட்டடத்தில் ஏறிய சிறுவன், கட்டடம் இடிந்து விழுந்ததில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கடந்த சனியன்று நண்பகல் கச்சாய் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கரவெட்டியைச்சேர்ந்த க.சூரியகுமார் (வயது-13) என்ற சிறுவனே காயமடைந்துள்ளான். (உ-23)

### வடமராட்சி அரசியல்துறை

## அலுவலகத்திற்குஅதிகளவு மக்கள் படையெடுப்பு

(மந்திகை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் வடமராட்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளதையடுத்து நாளொன்றிற்கு நூற்றுக் கணக்கானோர் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு அங்கு சென்று வருகின்றனர்.

இவ் அலுவலகத்தில் மக்கள் தம் முறைப்பாடுகளைச் செய்வதற்கு தனியான பிரிவொன்றும் இயங்கி வருகின்றது. (உ-23)

## சிந்தனைக்கு விருந்து

### அருத்தமுள்ளபாடல்களால் ஆனந்தம் கொண்டோம்

கருத்தின்றி எழுத்துகளைச் சொல்போற் கூட்டிக்
கனைப்பதுவும் கதறுவதும் பாட்டென் கின்றார்
பெருத்தபல இசைக்கருவிச் சத்தத் தோடே
பிணைந்திவைகள் காதுகளைப் பிளக்கும் சற்றும்
பொருத்தமிலா தெம்பண்பா டழிக்கும் இந்தப்
புன்மைநிலை என்றொழியும் என்றிருந்தோம்
அருத்தமுடன் உணர்ச்சிநிறை பாட்டுக் கேட்க
அமைந்ததுகண் டானந்தம் கொண்டோம் இன்றே

- பழையவன்

# 150 பேருடன் சென்ற நைஜீரிய விமானம் குடிமனைப் பகுதியில் விபத்துக்குள்ளானது

## பயணித்த எவரும் உயிர்தப்பவில்லை

(லாகூர்)
150பேருடன்சென்றவிமானம் விபத்துக்குள்ளாகி குடியிருப்புப் பகுதியில் வீழ்ந்துநொருங்கியதில் அதில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

நைஜீரியாவில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் அந்நாட்டு பி.ஏ எஸ். என்ற தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது.

மக்கள் நெருக்கமாகவாழும் பகுதியில் இவ்விமானம் விபத்துக்குள்ளானதால் அங்குவசித்த மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து காணப்படுகிறது.

விமானம் ஒடு பாதையில் இறங்க முயற்சித்தவேளைகட்டடம் ஒன்றில் மோதி தலைகுத்தாக விழுந்துவிபத்துக்குள்ளாகியுள்ளதுஎன்றும், சிதைவுகளின் மத்தியில் நேற்றுவரை இரண்டுபேரின் சடலங்கள் மாத்திரம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## பயங்கரவாதிகளின் சூட்டிற்கு ஐவர் பலி

(ஸ்ரீநகர்)
ஜம்முகாஷ்மீரில் 5பேரை பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்றுள்ளனர்.

அண்மையில்இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் மேலும் 4பேர் படுகாயமடைந்துள்ளனர். (க-07)

## அபுசாகிப் தீவிரவாத அமைப்பு பிரமுகர் கைது

(மணிலா)
பிலிப்பைன்ஸ் பொலிஸார், அபுசாகிப் தீவிரவாத அமைப்பின் முக்கிய பிரமுகர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

அபுசாகிப் தீவிர வாதிகள் நடமாடுவதாக கிடைத்த தகவலின் பேரில், கிராமங்களில் இடம் பெற்ற தேடுதலின் போதே கட்டார்யக்கு என்ற இந்த முஸ்லிம்பிரமுகர் கைது செய்யப்பட்டுள்ளார். (உ-7)

# உலக தரிசனம்

## ஆப்கானில் இருந்துஅல்கெய்டாக்கள் சிலர் பாகிஸ்தானுள் புகுந்தனர்

(இஸ்லாமாபாத்)
ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் அல்கெய்டாதீவிரவாதிகள்நுழைந்துள்ளதாக பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தானுக்குள் நுழைந்துள்ள அல்கெய்டாக்களை அமெரிக்காவின் உதவியுடன் கண்டுபிடிக்க முழு அளவில் முயற்சிப்பதாகவும்,

பாகிஸ்தானுக்குள் நுழைவதற்கான சகல பாதைகளும் மூடப்பட்டுள்ளதுடன் அவர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்ட அளவிலேஇருக்கும் என்றும் முஷாரப் தெரிவித்துள்ளார்.

4 தொடக்கம்10 பேர்வரையில் மாத்திரமே அல்கெய்டாக்கள் பாகிஸ்தானில் நடமாட வாய்ப்பிருப்பதாகவும் முஷாரப் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-7)

## அத்துமீறல் தொடர்ந்தால் பதிலடி கொடுக்க வேண்டிவரும்

### இந்தியாவுக்கு முஷாரப் எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் இந்தியா நடத்திவரும் கடுமையான போர்ப் பயிற்சிகள் தனக்கு அதிருப்தி அளிப்பதாகஉள்ளதாகபாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பெர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மேற்படி பகுதியில் இந்தியப் படையினர் தமது படைப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

இதுபற்றி கருத்து வெளியிட்டபாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் இந்தியாவின்சகல நடவடிக்கைகளையும் தான் கூர்ந்து கவனித்து வருவதாகவும்,

இந்தியா மேலும் அத்துமீறி நடந்து கொண்டால் தமது பதில் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டி வரும்என்றும்தெரிவித்துள்ளார். (உ-7)

## மக்கள் பெருக்க வீதம் முஸ்லிம்கள் முதலிடத்தில்

(கொழும்பு)
2001ஜூலை 17ஆம் திகதி குடிசனமதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் நடத்திய மதிப்பீட்டின் படிமக்கள் பெருக்க வீதத்தில் முஸ்லிம்கள் முதலிடத்தில் நிற்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

சண்டைப்பிரதேசங்கள் தவிர்ந்த 18 மாவட்டங்களில் மட்டும் நடைபெற்ற மதிப்பீட்டின் படி அம்பாந்தோட்டை தவிர்ந்த ஏனைய 17 மாவட்டங்களிலும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

1981-2001க்கு இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்களின் வளர்ச்சி 2.36சத வீதமாகவும், சிங்களவர்களின் வளர்ச்சி 1.2 சத வீதமாகவும் தமிழர்களின் வளர்ச்சி 0.96 சதவீதமாகவும் இருந்ததாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாணயக்கார தெரிவித்தார்.

முஸ்லிம்களின்எண்ணிக்கை அதிகரிப்பு மிகக் கூடுதலாக புத்தளம் மாவட்டத்தில் காணப்பட்டுள்ளது. இங்கு8.8 சதவீதம் அதிகரிப்புகாணப்பட்டதாக மதிப்பீடுதெரிவித்துள்ளது. மதிப்பீட்டின் படி முழுமக்கள் தொகை 18.73 மில்லியனாகும். (உ)

## மீன்பிடிக்க விதித்த கட்டுப்பாடுகள் தளரும்

(மந்திகை)
வடமராட்சிக் கடல்பரப்பில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் படிப்படியாக நீக்கப்படும்என 524 வது- படையணியின் கட்டளை அதிகாரி யுத்தநிறுத்த கண்காணிப்புகுழுவின் கடல் விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியிடம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கடல்தொழிலாளர்கள் மீன்பிடிப்பதற்கு படையினரால் மேற்கொண்டு வரும் கட்டுப்பாடுகள் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கண்காணிப்புகுழு அதிகாரியை சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். (உ-23)

## ஆற்றில் மூழ்கிய படகில் இருந்த 100 பேர் உயிருடன் மீண்டனர்

(டாக்கா)
பங்களாதேஷில் நேற்று முன்தினம் இரவு நீரில்மூழ்கிய படகில் இருந்து சுமார் 100 பேர் வரை உயிருடன் கரை சேர்ந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

படகு நீரில் மூழ்கியதைத் தொடர்ந்து, படகு நிறுவன அதிகாரி பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

படகு ஆற்றில் மூழ்கியதற்கு, வேறொரு கடற்கலமோ அல்லது படகோட்டியின் கவனயீனமோ காரணம் இல்லை என்பதையும் மோசமான காவநிலையே காரணம் என்பதையும் அவ்வதிகாரி ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இதே வேளை, நேற்று நண்பகலுக்குமிடையில் ஆற்றில் மூழ்கிய படகை மேலே கொண்டுவர முடியும் எனத் தெரிவித்த போதும் படகு மீட்கப்பட்டதாக தெரிய வரவில்லை.

நேற்று முன்தினம் இரவு பங்களாதேஷின் தென் கிழக்கு நகரின் மெஹ்னா ஆற்றில் சுமார் 30 அடி நீளமானஇரண்டடுக்குக்கொண்ட மேற்படி படகு 500 பேருடன் மூழ்கியமை தெரிந்ததே. (உ-7)

## உலகின் முதலாவது பூ சீனாவில் பூத்தது

(பீக்கிங்)
உலகிலேயே முதலாவது பூ சீனாவிலேதான் பூத்துள்ளது என்றும் சுமார் 14 கோடி ஆண்டுகளுக்கு முன் பூத்துள்ளது என்று சீன விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார்.

சீனாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள நயோனின் மாகாணத்தில் தண்டு, இலைகள், கனிகள் போன்ற வற்றுடன், நன்கு பேணிப்பாதுகாத்த தாவரப் புதைப் படிவம் ஒன்று அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்படிவம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு இதுவே உலகில் முதலில் பூத்த பூ என்றும் மிகவும் முழுமையான பூ என்றும் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் தனது ஆய்வுக் கட்டுரையின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த பூச்செடிக்கு ஆர்ட்டிப்பிரக்டஸ் சிமன்சி என்று பெயரிடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-07)

## மூன்று நாட்களில் 390 மாவோ தீவிரவாதிகள் நேபாளத்தில் கொலை

(காத்மண்டு)
நேபாளத்தில் கடந்தமூன்று தினங்களில் 390 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மன்னர் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளர்ச்சிகள் மேற்கொண்டு வரும் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்களைஅரசபடைகள் அங்கு தீவிரமாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல்களின்போது, பெருந்தொகை ஆயுதங்களும் மீட்கப்பட்டிருப்பதாக அரசதரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. (உ-7)

## வீதித்தடையை நீக்க கோரி விரைவில் போராட்டம்

(மந்திகை)
பருத்தித்துறை மருதன் கேணி வீதியில் நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள வீதித்தடையை நீக்கி பொதுமக்கள் போக்கு வரத்துக்குஅனுமதிக்குமாறு கோரி, அப்பகுதியில் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்துவதற்கானஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

மேற்படி வீதித் தடையை நீக்கி அப்பகுதி மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடவும், மீளக்குடியமரவும் வகை செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே போராட்டம் விரைவில் நடத்தப்படவுள்ளது. (உ-23)

## திருநாள் திருப்பலி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் மறுநாள் திங்கட்கிழமைகாலை 7.30மணிக்குத் திருநாள் திருப்பலியும் திருச்சொரூபபவனியும் இடம் பெறவுள்ளது.

ஒவ்வொரு மாலைத் திருப்பலியிலும் இந்தியாவில் இருந்து வருகைதந்த அருட்திரு லூர்துராஜா மறையுரையாற்றவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-2,7)

## வாசிப்புத் திறனை வளர்க்க ஏற்பாடு

(நெடுந்தீவு)
நெடுந்தீவு மேற்கு மங்கையற் கரசி வித்தியாலய மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்தவும், தேடல், கிரகித்தல் திறன்களைவளர்க்கவும், பாடசாலை நூலகத்திற்குப் பொருத்தமான நூல்கள் சேகரிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து பழைய மாணவர் சங்கம் செய்து வருகிறது. (உ-250)

நூலகம் மாநகராட்சி யாழ்ப்பாணம்

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும் படுபயனும் பார்த்துச்செயல்.

-குறள்

# வலம்புரி

## பணிக்கு மட்டுமா?

யாழ் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் என் பார்வைப் பகுதியில் உதவிக் கணக்காய்வாளர்களாக கடந்த ஐந்து வருடங்களாகக் கடமையாற்றியவர்கள் இன்று உதவியற்றவர்களாக- தமது கோரிக்கைகளைச் செவிசாய்ப்போரின்றி மறியற் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வுகளைச் செய்து முடிக்க இயலாத காலத்தில் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர்களின் அங்கீகாரத்துடன் போட்டிப் பரீட்சை நடத்தி அதில் சித்தியெய்தியவர்களை உதவிக் கணக்காய்வாளர்களாகத் தெரிவு செய்து பணி முடிக்கப்பட்டது. உதவிக் கணக்காய்வாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது பணியை செவ்வனே செய்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களினதும் மிகையிலிருந்த கணக்காய்வுகளைச் செய்து முடித்தனர்.

ஆயினும் அவர்களின் நிரந்தர நியமனங்கள் குறித்து அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. இதனால் இன்று யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வாசற் கதவுகளை அடைத்து மறியற் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

திணைக்களங்களில் வேலைப்பளுக்கள் குவிந்திருக்கும் போது அதனை நிவர்த்திப்பதற்காக ஆசை வார்த்தைகள் காட்டிவிட்டு வேலை வாங்கிய பின் அவர்களை நடுத்தெருவில் நிற்கவிடும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இன்றைய இளம் சமூகம் ஆற்றலைகிறது.

பணியை நிறைவேற்றுவதற்காக நியமனங்களை வழங்கும்போது நியமனம் பெறுபவர்களின் எதிர்காலம் குறித்தோ அவர்களின் நலன்கள் குறித்தோ நடவடிக்கை எடுக்காமல் எனக்கு நிரந்தரம் நான், எனது குடும்பம் என்ற சுயநலத்தோடு இருக்கின்ற உயர் அதிகாரிகளின் திருக் கூத்தினால் அலுவலகத்தில் இருந்து உற்சாகமாக பணிசெய்ய வேண்டியஇளைஞர்களும் யுவதிகளும் காலை முதல் மாலைவரை மறியற் போராட்டத்தில் ஈடுபடும் துர்ப்பாக்கிய நிலையைக் காண்கிறோம்.

# எதிர்க் கட்சியினரின் வேறு வேறு கருத்துக்கள்

# சமாதான விடயத்தில் சுயரூபம் வெளியாகிறது

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா புலிகளின் இடைக்கால நிர்வாகம், புலிகளின் தடையைநீக்கம்வட-கிழக்கில் படையினரை வாபஸ் பெறுதல் பற்றி சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று மகாநாயக்க தேரர்களுக்கு கடிதம் எழுதியுள்ளதாகச் செய்திகள் வெளி வந்துள்ளன. இதனோடு சமாதான விடயத்தில் அவரது சுயரூபமும் வெளிவந்துள்ளது.

**சமாதானத்தை விரும்பவில்லை**

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டு வரும்சமாதான முயற்சிகளை ஜனாதிபதி அடியோடு விரும்பவில்லை என்பது விடயமறிந்த வட்டாரங்களுக்கு ஏற்கெனவே நன்கு தெரியும்.

ஜனாதிபதி முன்பு விடுதலைப்புலிகளோடு சமாதானத்திற்காக மேற்கொண்ட முயற்சிகளை எதிர்க்கட்சித் தலைவராக ரணில் விக்கிரமசிங்கா இருந்தபோதுகுழப்பும் விதத்தில் இழுத்தடித்தார் என்ற உண்மையையும் மறக்கவோ மறுக்கவோ முடியாது:

ஆனால் சமாதானக் கொள்கையை முன்வைத்து ஆட்சிக்கு வந்த சந்திரிகாயார் குழப்பினாலும் சமாதான வழியில் உறுதியோடு சென்று அதில் வெற்றி கண்டிருக்க வேண்டும்!

**பொது மக்கள் விருப்பம்**

ஆனால் அரசியல் ஆதாயங்களில் அவர் மோசம் போய் 'சமாதானத்திற்கானயுத்தம்' என்ற அபத்தமான ஒருகோட்பாட்டை முன்வைத்து பகிடிக்கிடமானவராகி அதேவேளை பெருங்குற்றவாளியாகி நாட்டில் பேரழிவுகள் தாண்டவமாட வழிவகுத்தார்.

இப்போது சிங்கள மக்களில் பெரும்பான்மையானவர்களும் தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்களும் சமாதானம் இந்நாட்டில் மலர வேண்டும் என்றபேரவாவுடன் அந்தப் பொன்னான நாளை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

அதற்காகவே ஒரு ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்து இன்று ஆட்சி பீடத்தில் ஏற்றியுள்ளார்கள்.

மக்களின் சமாதான எதிர்பார்ப்பிற்குக் குறுக்கே பேரினவாதம் எடுபடாது என்பதால் தெற்கில் பேரினவாதிகள்சமாதானம் வேண்டும் என்பதை ஈனக்குரலில் சொல்லி விட்டு, அதை சுக்கு நூறாக்கும்விதத்தில் உணர்ச்சியூட்டும் கருத்துக்களையும், ஆர்ப்பாட்டங்களையும் செய்து சிங்கள மக்களை திசை திருப்ப முனைகிறார்கள்.

ஜனாதிபதி சமாதானத்தை விரும்பவில்லை. ஆனால் வெளிப்படையாக அதைத் தெரிவிக்கவில்லை. திரைமறைவில் எதிராக செயற்படுகிறார் என்றுசெய்திகள்உறைக்கக் கூறிவந்தன.

**கதிர்காமரின் அந்தரங்க ஆலோசனை**

சமாதான அமைதிப்போக்கில் ஒரு குறுக்கீடான சலசலப்பை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதியின்அந்தரங்க ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் சில மாதங்களுக்கு முன் தமிழகம் சென்று முதல்வர் ஜெயலலிதாவின் காதில் மந்திரத்தை முணு முணுத்து விட்டுவந்தார்.

அந்த மந்திரமே ஜெயலலிதாவைச் சன்னதம் கொள்ளச் செய்து பிரபாகரனைக் கைது செய்ய இந்தியஇராணுவத்தை இலங்கைக்குஅனுப்ப வேண்டும் என்ற தீர்மானத்தை தமிழக சட்ட சபையில் தீர்மானிப்பதற்கு வழி சமைத்தது என்று பேச்சு அடிபடுகிறது.

ஆனால்சந்திரிகா சமாதானத்திற்கு தாம்எதிர்ப்பில்லை தமது ஒத்துழைப்பு என்றும் இருக்கிறது என்று நோர்வே சமாதானக்குழுவிற்கும்,வேறு வெளி நாட்டு இராஜதந்திரிகளுக்கும் வாக்குறுதியளித்தார்.

சமாதானத்தைக் குழப்புவதற்கு மிக மோசமாக இனவாதம் பேசி வரும்ஜே.வி.பி. கூட சமாதானத்திற்கு நாம் எதிரியல்ல என்றுதான் ஒருவசனத்தை ஈனக்குரலில் சொல்கிறது. அந்த ஜே. வி. பியை ஜனாதிபதி மெல்ல தட்டிக் கொடுப்பதோடு, பொ. ஐ. முன்னணியில் சமாதானத்திற்கு எதிராக உள்ள சிலரையும் அந்த வழியில் செயற்பட ஆசீர்வாதம் செய்வதாகவும் விடயமறிந்த அரசியல்வாதிகள் கருத்துக் கூறினார்கள்.

**இந்தியப் பயணம்**

ஆனால் ஜனாதிபதி தன்னை சமாதானத்திற்கு விரோதியாக வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை. ரணில் தனது சமாதான முயற்சிக்கு அன்று ஆதரவு அளிக்காது குழப்பி விட்டாரே என்ற நினைவு அவர் மனதில் அக்கினியாக எரிந்து கொண்டிருக்கிறது.

அண்மையில் அவர் இந்தியாவிற்கு பறந்து சென்று இந்தியப்பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங், சோனியாகாந்தி மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்து உரையாடினார்.

அவ்வாறு அவர் உரையாடுவதன் மூலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பொ. ஐ. மு.ஆதரவாளர்களுக்கும், தனது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் திட்டமிட்டு நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறது. பலரைச் சிறையிலும் அடைத்துள்ளது என்று அவர்களுக்குமுறையிட்டு சர்வதேச ரீதியில் இப்போதைய அரசிற்கு அவப்பெயரை உண்டாக்கலாம். அடுத்த இலங்கையில் சமாதானத்திற்காக எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் பற்றி இந்தியாவை நாடி பிடித்துப் பார்க்கலாம் என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது.

இந்தியத்தலைவர்கள் தாம் இலங்கையில் சமாதானம் மலர்வதை விரும்புவதாக அவரிடம் நாசூக்காகக் கூறியதை

**கபிலர்**

செய்திகளில் படித்தோம்.

கடந்த ஆண்டு விமான விபத்தில் உயிரிழந்த முன்னாள் இந்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியாவின் நினைவுப் பேருரையை ஜனாதிபதி சந்திரிகா புதுடில்லியில் நிகழ்த்தும் போது பல்லினத் தன்மை கொண்ட ஒரு தேசத்தைக் கட்டமைக்கின்ற முக்கிய பணியில் சுதந்திரமடைந்த காலத்தில் இருந்தே நாங்கள் தவறு செய்து விட்டோம். அதன் விளைவுதான் சிறுபான்மைத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் என்று விளாசினார்.

**அனுராவின் ஆர்ப்பரிப்பு**

இவ்வாறு அவர் அங்கு சொல்மாரி பொழிந்துகொண்டிருக்கும் போது அவரது கட்சியில் அண்மையில் தாவிக் கொண்ட தம்பியான அனுரா பண்டாரநாயக்கா கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெற்ற கூட்டத்தில் ஜே. வி. பியுடன் சேர்ந்தது சமாதானத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கண்டனக் கூட்டத்தில் பேசுகையில், வடக்கு-கிழக்கை பிரபாகரனுக்கு ரணில் தாரை வார்த்துக் கொடுத்து விட்டார் என்று கூக்குரலிட்டார்.

ஜனாதிபதியின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்தவரும் எதிர்க் கட்சித்தலைவருமான மகிந்த ராஜபக்ஷ சண்டே லீடருக்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் புலிகளின் தடையை நீக்கினால் அது சிங்கள பௌத்தர்களின் உணர்வுகளைப் பாதிக்கும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார்

இதுபோல் சமாதான முயற்சிக்கு சிக்கலை ஏற்படுத்தக் கூடிய கருத்துக்களை அப்பேட்டியில் அவர் முன் வைத்தார். அதேவேளை சமாதான முயற்சிகளில் ஜனாதிபதியின் நிலைப்பாடே எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்று வலியுறுத்திய அவர் சமாதானம் குழம்பக் கூடாதுஎன்றும்பக்குகுவமாக ஒரு வசனம் சொன்னார்.

மொத்தத்தில் சமாதான முயற்சிகளில் ஜனாதிபதியின் உண்மையான தோற்றம் எமக்கு இப்போது தெளிவாகப் புலப்படுகின்றது.

**எதிர்க்கட்சித் தலைவர் ஆதங்கம்**

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஜே. வி. பி- சமாதானத்திற்கு எதிராக நடத்தப் போகும் கூட்டத்தில் தன்னைப் பங்கு பற்றாது தடுப்பதற்கு சந்திரிகா சிறு கட்சியின் தலைமையில் நடக்கும் கூட்டத்தில் கலந்து கொள்வது அழகல்ல என்று காரணம் கூறினார் என்றும், தனக்குத் தெரியாமல் தனது தம்பி அநுராவை அக்கூட்டத்தில் பங்கு பற்ற அனுமதித்தார் என்றும் குமுறி சந்திரிகா மீது குற்றம் சுமத்தியுள்ளமை சுவாரஸ்யமான ஒரு சங்கதி!

ஜனாதிபதி சந்திரிகா தனது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு நெருக்கடி கொடுத்து சிறையில்அடைத்து வருகிறது என்று இந்தியத் தலைவர்களுக்கு அழாக்குறையாக எடுத்துரைத்தார்.

**நிஹால் கருணரத்ன**

இலங்கை திரும்பிய பின் தனது பாதுகாப்புப் பிரிவின் தலைமை அதிகாரியும் பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் கருணரத்னாவிற்கும் ககினோ உரிமையாளர் டம்மிகா பெரெராவிற்கும் தொடர்பிருப்பதாகவும், டம்மிகா பெரெரா விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை கடத்தி கொடுத்தவர் என்றும் அவருக்கும் கருணரத்னாவிற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் ஆவேசமுடன் குற்றம் சாட்டினார் என்பது இன்னொரு சுவையான விடயம்!

கருணரத்னா பல குற்றங்கள் மீது தடுத்து வைக்கப்பட்டு இப்போது பிணையில் விடுதலையாகியுள்ளார்.

அரசியல்வாதிகள் தமது பதவிகளைக் காப்பாற்றவும், இழந்து போனதைத்தாவிப் பிடிக்கவும் நேரத்துக்கு நேரம் ஒவ்வொரு கருத்தைக் கூறலாம். சமாதானத்தையும் குழப்பலாம்.

ஆனால் இரத்தக்களரி, அவலச்சாவு, சோகத்தின் புலம்பல் கள்பசி, பிணி, அகதிவாழ்க்கை நோய் இப்படி ஒரு பரிதாப உலகத்தில் மக்களைத் தள்ளிவிட்டு தாம் சுகபோகம் அனுபவிக்க நினைக்கக் கூடாது. அதற்கு மதத்தலைவர்களையும் கவசமாக்க முயலக் கூடாது.

## தினசரி தியானம்

### கேடு

கேடிலியை நாடுபவர் கேடிலாரே.

வெள்ளைத் துணியில் வீழ்ந்த புள்ளிமுன் நின்று புலப்படுவது போன்று என் உள்ளத்தில் உதிக்கும் சிறு குற்றமும் எனக்குத் தென்படுக.

தகவிலான் ஒருவன் தன்னிடத்துள்ள சிறு குற்றத்தைக் குற்றமாக மதிப்பதில்லை. பிறரிடத்திலுள்ள பெருங் குற்றத்தைக் காட்டித் தருவதைவிடத் தன்னிடத்துள்ள சிறிய கேட்டைக் களைவது மேல். கேட்டில் பெரியது சிறியது என்ற பாகுபாடு கிடையாது. சட்டியினுள் சிறு துவாரமிருந்தாலும் அது சமைப்பதற்கு உதவாது. தன் குற்றம் களையாதவன் குணவான் ஆகான்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# வர்த்தகரின் கண்களில் மிளகாய்த் தூள்வீசி 5இலட்சம் ரூபா கொள்ளை

கண்களுக்கு மிளகாய்த் தூளை வீசி 5இலட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற வர்த்தகர்களின் கண்களுக்கு மிளகாய்த்தூள் வீசி பணம்பறித்த இந்தச் சம்பவம் இம்புல்கொட சந்தியில் இடம் பெற்றுள்ளது.


அக்குரஸ்ஸ பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (உ-3)

யூனியன் அஷ்யூரன்ஸ்

இலங்கையின் காப்புறுதித்துறையில் முதன்மையானவர்கள்

# யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிற்ரெட்

## இன்று முதல் யாழ்.குடாநாட்டில்





06-05-2002 இன்று மதியம் 12.05 சுபவேளையில்

பிரதம நிறைவேற்று அதிகாரி

**திரு:- சரத்விக்கிரமநாயக்கா**

பொதுமுகாமையாளர் (விற்பனை)

**திரு. ரமல்யாசிங்க**

ஆகியோரினால் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

## யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிற்ரெட்

நாடளாவிய ரீதியில் 42 கிளைகள் யாழ்நகரில்

**43 ஆவது கிளை:-**

-நிகரற்ற பாதுகாப்பை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிற்ரெட் யாழ். மக்களோடு கரத்தை இணைக்கிறது.

தந்தையின் பாதுகாப்புடன் கூடிய அன்புக்கு நிகரான சேவை.

இனி யாழ் மக்கள் தனியாக இல்லை.

யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிற்ரெட் உண்மையான பாதுகாப்பு. இன்றே உங்களையும், உங்கள் மழலைச் செல்வங்களையும், உங்கள் சொத்துக்களையும் இலக்கம் 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிற்ரெட்டில் காப்புறுதி செய்து கொள்ளுங்கள். மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தில் அல்லது எமது முகவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் தேவைகளுக்கு 021-3753 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.




## உங்கள் பாதுகாப்பே எங்கள் இலக்கு.




ஆயுள் முழுவதும் உங்களைக் காப்போம்



அலுவலர்களுக்கான பயிற்சி

*யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிற்ரெட்,*
*139, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**UNION ASSURANCE**

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் Sankunatham பக்கங்கள் - 16

0 7 MAY 2002

# சங்கு நாதம்

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை:- 22 திங்கட்கிழமை (06.05.2002) தொலை பேசி 3378 நாதம்:- 11

# சமாதான முயற்சிகளை குழப்ப ஜனாதிபதி – ஜே.வி.பி கூட்டு முயற்சி




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# சமாதான முயற்சிகளை குழப்ப ஜனாதிபதி — ஜே.வி.பி கூட்டு முயற்சி

உலகிலுள்ள வியாதிகளை தொற்றும் தன்மையுள்ள நோய், தொற்றாத் தன்மையுள்ள நோய் என இரண்டு வகைப்படுத்தி மருத்துவ உலகம் ஆராய்கிறது. இதில் தொற்றும் தன்மையுள்ள நோயை முற்றாகக் குணப்படுத்த




லாம். ஆனால் தொற்றாத் தன்மை வாய்ந்த நோயை முற்றாகக் குணப்படுத்த முடியாது. மாறாகக் கட்டுப்படுத்தலாம்.

இலங்கை இனப்பிரச்சினை தொற்றாத் தன்மை வாய்ந்த நோய்க்குச் சமமானது. உதாரணத்திற்குக் கூறுவதாயின் புற்று நோய்க்கு ஒப்பானது. புற்று

## விதுரன்

நோயை மாற்ற முடியாது. கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும். அவ்வாறு கட்டுப்படுத்துவதற்கு ஒரே ஒரு வழிமுறை உண்டு. அதுதான் சத்திரசிகிச்சை. இலங்கை நாட்டைப் பொறுத்தவரையிலும் அதனை சத்திர சிகிச்சைக்குட்படுத்தி இரண்டாக வேறுபடுத்துவதன் மூலம் நோயின் தாக்கத்தை குறைக்க முடியும். இல்லையேல் எங்கோ ஒரு பக்கத்தால் புற்று ஏற்படவே செய்யும். சத்திர சிகிச்சையும் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் உண்டு. நோய் கூடுதலாகப் பரவிவிட்டால் சத்திர சிகிச்சையும் பலனளிக்காது என்பது காலம் கடந்து உணர்ந்து கொள்ளும் உண்மையாகும். இலங்கைத் திருநாடு இத்தைகய ஓர் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போதுதான் ஒருவர் தீர்த்து வைப்பேன் என்கிறார். மற்றவர் விடமாட்டேன் என்று அடம்பிடிக்கிறார். இத்தகைய வெட்டுப்பாடுகள் இலங்கையின் இன விவகாரத்தில் புதியனவல்ல எனினும் சமாதானத்தின் தேவை உணரப்பட்ட இக்காலகட்டத்தில். நாடு குட்டிச்சுவராக தேய்ந்து கொண்டிருக்கும்போது யுத்தப் பிரியர்களாக சிங்கள அரசியல் வாதிகள் இருப்பது தமக்கென உலகிலிருக்கும் ஒரே பௌத்த நாடு இலங்கைதான் எனக் கூறுகின்ற உரிமையையும் அவர்கள் இழக்க நேரிடும். இலங்கையின் இனவிவகாரம் இப்போது சர்வதேசமயப்படுத்தப்பட்டுவிட்டது. உலக நாடுகள் உடனடியாக பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கி உள்ளன. இந்த அழுத்தம் விடுதலைப் புலிகளுக்கும் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது.

உலகநாடுகள் இலங்கை மீது தமது பார்வையைச் செலுத்தியமைக்குக் காரணம் தமிழினம் நசுக்கப்படுகிறது என்றோ, அல்லது மனித உரிமை மீறல்கள் அங்கு மலிந்து விட்டது என்றோ அல்ல.

இலங்கையில் தமிழர் சார்புடைய விடுதலைப் புலிகள் அமைப்பானது சர்வதேசத்திற்கு அச்சுறுத்தலை தரவல்ல அமைப்பாக வளர்ந்து வருகிறது. அதைத் தடுப்பது அவசியம் என்ற நோக்கில் சர்வதேசம் இலங்கைப் பக்கம் தன் பார்வையை ஊடுவிட்டுள்ளது.

### இலங்கை -இந்திய அரசியல் வேறுபாடு

இலங்கை அரசியலுக்கும், இந்திய அரசியலுக்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு. இலங்கையில் எதிர்க்கட்சிகள் எதிர்க்கும் கட்சிகளாகவே உள்ளன. ஆனால் இந்தியாவில் எதிர்க்கட்சிகள் உரிய நேரத்தில் ஆதரவையும் எதிர்க்க வேண்டிய கட்டத்தில் தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்துகின்றன.

க்கார்கில் பிரச்சினை ஆரம்பித்த போது பாரததேசம் இன-மொழி-மத-அரசியல் வேறுபாடின்றி நாமெல்லோரும் பாரததேசத்தவர்கள் என்ற அடிப்படையில் பாகிஸ்தானிற்கெதிரான தமது போராட்டத்தை முடுக்கிவிட்டனர். அதனால் பாகிஸ்தான் மண்கவ்வியது.

இத்தகைய நிலை இலங்கையில் அடையவே முடியாது. இங்கு நாடு என்பதற்கு மேலாக ஆளுங் கட்சி நல்லதை முன்வைத்தாலென்னா தீயதை முன்வைத்தாலென்ன அதனை எதிர்க்கவேண்டும் என்பதே எதிர்க் கட்சியின் இலக்காக இருக்கிறது. இதனை தற்போதைய எதிர்க் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்ன்ணி மட்டுமே, கடைப்பிடிக்கிறது என்பதுமில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியை பிடித்த போது அக்கட்சி கொண்டுவந்த உத்தேச அரசியலமைப்பைத் தீயிட்டுக் கொளுத்தி மகிழ்ந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டமைப்பான ஐக்கிய தேசிய முன்னணி சமாதான



முயற்சியை முன்னெடுக்கும் போது அதற்குத் தடைக்கல் போடுவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி தயாராகிவிட்டது.

### அரசியல் சாணக்கியம்

இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற கருத்தை தேர்தலில் முன்வைத்து வெற்றியீட்டிய பெருமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையே சாரும். எனினும் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாது போனதால் மக்கள் ஆதரவு அவரிடம் இருந்து பிரிந்துபோனது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதியிடம் இருந்திருக்கலாம். ஆனால் அதற்கு அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு ஜனாதிபதிக்குக் கிடைக்கவில்லை. அதே நேரம் நடைமுறைக்கு ஒவ்வாத சமாதானத்திற்கான யுத்தமென்ற அவரின் கோட்பாடும் நடைமுறைச் சாத்தியம் அற்றுப் போயிற்று.

இத்தகைய சூழ்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டது. இது ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதனையாக இருந்த போதிலும் ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வேதனையாகவே அமைந்துவிட்டது.

இத்தகைய போக்கு ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுத்தது. பாராளுமன்ற ஆட்சி ஐக்கிய தேசிய முன்னணிக்குக் கிடைத்ததும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விரும்பியோ, விரும்பாமலோ யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார். இது அவரது சமாதான முயற்சியின் முக்கிய மைல்க்கல் எனலாம். இதனால் சண்டை என்பதோ, உயிர் அழிவு என்பதோ நிறுத்தப்பட்டுவிட்டது. ஒரு புறத்தில் சண்டையும், மரணங்களும் நடக்கும்போது மறுபுறத்தில் சமாதானப் பேச்சை எவ்விதத்திலும் முன்னெடுக்க முடியாது. இந்த உண்மையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உணராத போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உணர்ந்திருந்தார். இதனால் அவர் தனது சமாதான முயற்சியின் ஆரம்பக் கட்டத்தில் வெற்றியைத் தக்க வைத்துவிட்டார்.

### ரணில் சென்ற அதே பாதையில் சந்திரிகா

ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினைத் தீர்விற்கு உத்தேச அரசியல்யாப்பைக் கொண்டு வந்தபோது அது தமிழர்களுக்கு உரிமையைக் கூடுதலாக வழங்குவதாகக் கூறி அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கா பௌத்தமகா நாயக்கர்களிடமும். தேரர்களிடமும் ஓடிச் சென்று இது குய்யோ, முறையோ சிங்கள தேசத்தில் தமிழர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கிறார் சந்திரிகா. நீங்கள் பௌத்தத்தோடு மட்டும் நின்றுவிட்டால் பௌத்த தேசம் என்னாவது. உடன் தடுத்து நிறுத்துங்கள் என்று மன்றாடினார்.

அவரின் மன்றாட்டத்தின் பயனாக பௌத்த துறவியொருவர் உத்தேச அரசியல் யாப்பை எதிர்த்து நடுவீதியில் உண்ணா நோன்பு இருந்தார். இவற்றின் காரணமாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுத் திட்டம் அரங்கேறாமல் அடங்கிப்போனது.

அன்று ரணில் விக்கிரமசிங்கா பௌத்த மகாநாயக்கர்களின் காலில் விழுந்து கெஞ்சியபோது தனக்கும் பிரதமராக இருக்கும் வாய்ப்புக் கிடைக்குமென அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

இப்போது காலம் மாறிவிட்டது. ரணில் பிரதமர் ஆனார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அவர் ஏற்படுத்தினார். சமாதானப் பேச்சுக்கு வசதியாக விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதே பாக்கி. இந்நிலையில் இப்போது ஜனாதிபதி சந்திரிகா பௌத்த மகாநாயக்கர்களிடம் ஓடிச் சென்று அந்தோ ரணில் புலிகளின் தடையை நீக்கப் போகிறார். விடுதலைப் புலிகளின் தடையை நீக்கினால் தமிழர்களுக்கு நாடு கொடுத்தது போன்றதுதான். இதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று அடி தொழுது மன்றாடுகிறார். எப்படி இருக்கிறது நிலைமை?. இனப்பிரச்சினைக்கு யார் தீர்வுகாண முனைந்தாலும், நாடுபிரிபடப் போகிறது, தமிழர்களுக்கு தனிநாடு கிடைக்கப்போகிறது என்பதே எதிர்க்கட்சியினரின் பிரச்சார மந்திரமாக அமைந்துவிட்டது.



### ஜனாதிபதியின் பாரிய திட்டம்

பிரதமர் ரணில் தலமையிலான அரசு பதவி ஏற்றகையோடு முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளை மௌனமாக இருந்து அவதானித்த ஜனாதிபதி இப்போது மெல்ல மெல்ல தனது எதிர்ப்பை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளார்.

சமாதான முயற்சிகள் தானாகவே இயற்கையடைந்து விடுமென நம்பியிருந்த ஜனாதிபதிக்கு தனது எதிர்பார்ப்பின்படி நிலைமை நடக்காது என்பது புலனாகிவிட்டது. இந்நிலையில் இனியும் பொறுமையாக இருந்தால் அது நிரந்தர சமாதானத்திற்கு வழி வகுத்து விடும் என்பது. அவரின் அச்சம். இதனால் சமாதானத்திற்கான தனது முதலாவது எதிர்ப்புக் கருத்தை கடந்த மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

அதாவது பிரதமர் ரணிலும். விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது வெறும் போலித்தனமானது. அவ் ஒப்பந்தம் ஒரு போதும் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதில்லை என்றவாறு ஜனாதிபதி தனது மேதின உரையை ஆற்றியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து பௌத்த மகா நாயக்கர்களுக்கும், பௌத்த பிக்குமார் சங்கத்திற்கும் கடிதங்கள் எழுதி வருகிறார். அக்கடிதத்தில், சமாதான முயற்சி என்ற பெயரில் நாடு பறிபோகப்போகிறது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக்கூடாது இதுவே ஜனாதிபதியின் கோரிக்கை.

தம்மீதான தடையை நீக்காமல் விடுதலைப் புலிகள் ஒருபோதும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்கள் என்பது சந்திரிகா குமாரதுங்காவிற்கு நன்கு தெரியும். அரசு முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சி வெற்றிபெறுவது புலிகளின் தடையை நீக்குவதிலேயே தங்கியுள்ளது. எனவே புலிகளின் தடை நீக்கத்தைத் தடுத்து நிறுத்திவிட்டால் சமாதானப் பேச்சு சாத்தியமற்றுப் போய்விடும். யுத்த நிறுத்தம் என்பதும், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பதும் திருவிழாக் காலத்துக் கடைகள் போன்றது. திருவிழா முடிந்ததும் கடைகளும் மூடப்பட்டுவிடும். நிரந்தர சமாதானம் என்பது அரசும் புலிகளும் ஒரே மேசையில் இருந்து பேசி ஓர் இணக்கப்பாட்டிற்கு வருவதன் மூலமே ஏற்படமுடியும். இது ஜனாதிபதிக்கு நன்கு தெரிந்த விடயம். இதனால் சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்பக்கூடிய ஒரே ஒரு இடம் இருக்கிறதெனில், அது விடுதலைப் புலிகள் மீது விதித்த தடையை நீக்காமல் இருப்பதே. அதிலும் புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாதென ஜனாதிபதி வெளிப்படையாகக் கேட்பாராயின் அது அவரின் சமாதான விரோதத்தை வெளிப்படுத்திவிடும் அல்லவா? அதனால் ஏதோ தான் சமாதானத்தின் பால் ஈர்ப்புக் கொண்டவர் போலவும், பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது புலிகள் மீதான தடையை நீக்கலாமென ஓர் நியாயமான கோரிக்கையை முன் வைப்பதுபோலவும் ஜனாதிபதி காட்டிக் கொண்டிருக்கிறார்.

### பிரதமர் முந்திவிட்டார்

ஜனாதிபதியின் இத்திட்டத்தை ஏற்கனவே உணர்ந்து கொண்டவர் போல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நடந்து கொண்டார். அதாவது விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டாமெனக் கூறுபவர்கள் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வரும் வழிமுறைகளைக் கூற வேண்டும் என்பது பிரதமரின் நியாயமான வாதம். புலிகளின் மீதான தடையை நீக்காதுவிட்டால் அவர்கள் ஒரு போதும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரமாட்டார்கள் என்பது உலகறிந்த உண்மை. எனவே பிரதமர் ரணில் கேட்டுக் கொண்ட கேள்விக்கு எவராலுமே பதில் கூறிவிட முடியாது. இந்நிலையில் புலிகளின் மீதான தடை நீக்கப்படுவது உறுதியாகிவிட்டது.

### ஜே.வி.பி.யுடன் கூட்டு

சமாதான முயற்சிகளை தடுத்து நிறுத்துவதில் முனைப்புடன் இருக்கக் கூடியவர்களில் ஜே.வி.பி.யினரும் குறிப்பிடத்தக்கவர்கள். சிங்கள மக்கள் மத்தியில் மூன்றாவது சக்தியாக அதிவேகமாக வளர்ந்து வருபவர்கள் அவர்கள் ஜனாதிபதிக்கும். ஜே.வி.பியினருக்குமிடையே ஓர் உள்ளார்ந்தமான உறவு இருப்பதை அரசியல்வாதிகள் மறந்திருப்பினும் அந்த உறவின் தாக்கம் சமாதான எதிர்ப்பில் பிரதிபலிக்கப்போவது திண்ணம். அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்ற ஜே.வி.பி.யின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதனை நடைமுறைப்படுத்தியவர் ஜனாதிபதி. அதேபோல் தேர்தல், பொலிஸ் ஆணைக் குழுக்களை அமைப்பதற்கும் ஜனாதிபதி ஒத்துக் கொண்டவர்.

ஜே.வி.பி.யின் கோரிக்கைகள் இறுக்கமானதாக இருந்த போதிலும் அதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டது குறுங்கால நோக்கம் கருதியல்ல. எதிர்காலத்தில் ஐ.தே. கட்சி ஆட்சி அமைக்கும் போது நல்லதொரு பாடம் கற்பிக்கவே . அதற்கு ஜே.வி.பி.யின் உதவி அவசியம் என்ற அடிப்படையிலேயே ஜனாதிபதி செயற்பட்டுவந்தார். அதற்குரிய காலம் இப்போது வந்துவிட்டது.

சமாதான முயற்சியைக் குழப்புவதே ஜனாதிபதியினதும்-ஜே.வி.பி.யினதும் இலக்காகும். இதற்காக இருதரப்பும் திரை மறைவில் கூட்டுத்திட்டத்தை தயாரித்துள்ளன.





மில்க்வைற் சோப் இண்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

லாலா
சோப்
மாணவர்களே!
வெற்றி பெறும் 15 பேருக்கு
குலுக்கல் முறையில் பரிசுகள்
லாலா அச்சுவேலி

ராஜா
(யாழ்ப்பாணம்)
4வது வாரமாக
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
TAMILAN
தினசரி 10.30, 2.30, 5.30
[C/3953]




அன்பு மாணவர்களே!
ஐந்தாம் தரப் புலமைப்பரீட்சை மாதிரி வினாத்தாளை
ஒவ்வொரு புதன்கிழமையிலும்
வலம்புரியில்
எதிர்பாருங்கள்

# வள்ளுவத்தில் அரசியல் சாணக்கியம்

“யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை” எனப் பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதியார். பாரதியார் சுதந்திர தாகம் கொண்டு தாம் பிறந்த நாட்டிற்குத் தம்மாலான அரசியல் உணர்வினை ஊட்டினார். இப்புலவரின் தீர்க்க தரிசனம் பலித்தது. அவ்வாறான புலவரையே தெய்வமாகக் கொண்டவர் தெய்வப்புலவர் வள்ளுவர், வள்ளுவத்தில் உள்ள அரசியல் கருத்துக்கள், நுணுக்கங்கள் மிகவும் தந்திரமாகவும், சாணக்கியமாகவும் காணப்படுகின்றன. சுதந்திர அரசு களுக்குத் தலைமை வகிப்பவர்கள் எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இவர் தனது தந்திரங்களிற் கூறிவைத்துள்ளார்.

ஆராய்ந்து செயற்படும்பொழுது கூட்டாக, ஒற்றுமையாக ஒரே இனத்தவர் என்ற உணர்வுடன் கூடிச் சேர்ந்த இனத்துடன செயலைப்பற்றி நன்றாகத் தேர்ந்து தாமும் எண்ணிப்பார்த்துச் செய்கின்றவர்க்கு அரியபொருள் ஒன்று மில்லை என்று கூறுகின்றார்.

*“தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் - செய்வார்க்கு*
*அரும்பொருள் யாதொன்றும் இல்.”*

எனவே உனது வலிமையையும், பிறர்வலிமையையும் சரியாக அறிந்து கொள்ளவேண்டும் என வலியுறுத்தி வந்த வள்ளுவர் தம்முடைய வலிமை இவ்வளவு என்று அறியாமல் ஊக்கத்தால் முனைந்து தொடங்கிப் பின்பு தன் நோக்கத்தையடைய முடியாமல் இருக்கக் கூடாது. எனவேதான் செய்யக் கருதும் செயலின் வலிமையையும், தன் வலிமையையும், பகைவனுடைய வலிமையையும் ஆராய்ந்து செயற்பட வேண்டும் என்று கூற வந்த வள்ளுவர்,

*“வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்.”*

*“உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின்- ஊக்கி*
*இடைக்கண் முரிந்தார் பலர்.”*
என்று கூறுகிறார்.

இவ்விடத்தில் பாஞ்சாலியின் துகிலுரிந்த காட்சியை நாம் நினைவு கூர்வது நன்று. துரியோதனனது வலிமையை அறியாது பின்வருவதை முன் எண்ணாது உணர்ச்சியால் எரிமலையான வீமன் அருச்சுனனை நோக்கிச் சொல்வான்

*“இதுபொறுப்ப தில்லை தம்பி*
*எரிதழல் கொண்டு வா*
*கனியை வைத்திழந்தான் அண்ணன்*
*கையை எரித்திடுவோம்”*

அறியாதுரைத்த அண்ணன் வீமனின் ஆவேசத்தில் அருச்சுனன் தன்னை இழந்தானோ? அவன் காலம், இடம், வாய்ப்புக் கருதித் தருமத்தின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு அண்ணனை அமைதிப்படுத்தினான்.

*“தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்*
*தருமம் மறுபடிவெல்லும் எனும் இயற்கை*
*மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்*
*கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்*
*தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்.”*

இவ்வுண்மை குறளை வலிவு செய்வதைக் காணலாம்.

வள்ளுவன் கருத்தின்படி பகைவ னிடம் பலம்கூடியதாக இருந்தாலும் படைகள் கூடியதாக இருந்தாலும் அவனையும் வெல்ல முடியும் என்று திடங்கொள்கின்றார். ஆனால் காலமறிந்து செயல்பட வேண்டும். காக்கை தன்னை விட வலிய கோட்டானைப் பகலில் வென்றுவிடும். அது போல் பகையை வெல்லக் கருதும் அரசர்களுக்கு அதற்கு ஏற்ற காலம் வேண்டும் என்கின்றார்.

*“பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும் பொழுது.”*



இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெற்ற வேளையில் ஜெர்மனிய சர்வாதிகாரி ஹிட்லர் வெற்றிப் பெருமிதத்தில் தத்தளித்த வேளையில் ரஷ்யா மீது படையெடுத்து முன்னேறிக் கொண்டு சென்றார். ரஷ்யர்கள் தக்க பனிக்காலம் வரும்வரையும் காலம் பார்த்துப் பின்னோக்கிச் சென்று, பனிக்காலம் தொடங்கியவுடன் சர்வாதிகாரி ஹிட்லரின் படைகளை முறியடித்து மாபெரும் வெற்றிவாகை சூடினார்கள். இந்நிகழ்ச்சி குறளை முன் கூட்டிச் செல்வதைப் பார்க்கலாம். காலம் வருவதற்கு முன்பு, ஏற்ற காலமும் வேண்டிய கருவிகளும் செய்யும் செயலை முடிப்பதற்கு, கிடைப்பதற்கு முன்பாக அறிவுடை யார் பகைவர் தீங்கு செய்த அப்பொழுதே, உடனே புறத்தில்சினம் கொள்ளமாட்டார். வெல்வதற்கு ஏற்றகாலம் வரும்வரையும் பார்த்து அகத்தில் சினம் கொள்ளுவர்.

## இலக்கிய நயம்

*“பொள்ளென ஆங்கே புறம்வேரார் - காலம்பார்த்து*
*உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.”*
என்கின்றார்.

இவ்வாறு தெரிந்து செய்து, வலியறிந்து, காலம், இடம் அறிந்து செயற்பட்டால் வெற்றிகிட்டும் என்று கூறிவிட்டு, இவைகளை நன்கு தெளிவாக அறிதல் வேண்டும் என்று கூறுகின்றார். அறியவேண்டியவற்றை அறியாதிருந்தால் பேதமையில் நீங்காதவர்களாகவே இருப்பார்கள். பேதமைகளை அறிவதற்கு, அறிய வேண்டியவற்றை அறியாதிருப்பவரை அன்புடைமை காரணமாக நம்பித்தெளிதல், தெளிந்தவர்க்கு எல்லா அறியாமையையும் கொடுக்கும் என அறிவுறுத்துகிறார்.

*“காதன்மை கந்தா அறிவறியார்த் - தேறுதல்*
*பேதைமை யெல்லாம் தரும்.”*

ஆனால் ஒருவன் நன்கு தெளிவடைய வேண்டுமானால், அறிவுரை தருபவரைப் பற்றி நன்கு ஆராய வேண்டும். ஒருவனை ஆராயாமல் தெளிவடைதலும் ஆராய்ந்து தெளிந்த ஒருவனிடமே ஐயப்படுதலும் ஆகிய இவை நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

*“தேரான் தெளிவும் தெளிந்தான்கண் - ஐயுறவும்*
*தீரா இடும்பை தரும்.”*

மேற்கூறிய குறளின் இலக்கணத்திற்கு இலக்கியமாக மனோன் மணியத்தின் கதா பாத்திரமான ஜீவகபாண்டியனை நாம் காண்கிறோம். உடனிருந்தே கொல்லும் வியாதியான குடிலன் என்ற கொடுமதியாளனின் நட்பைப் பெறமுன் தன் குலகுருவாகிய சுந்தரமுனிவருடன் கலந்து ஆராய்ந்து பார்த்திருந்தால் இத்துணை அவலங்கள் அவன் வாழ்வில் நிகழ்ந்திருக்கா. இதனை நாம் சிந்தித்தல் அவசியமாகும்.

இவ்வாறு சிந்தனைத்தெளிவு ஏற்பட்ட பின்பும் செயலில் இறங்கிய பின்பும், எந்நேரத்திலும் மக்கள் ஊக்கமிழக்கக்கூடாது என்று வலியுறுத்துகின்றார். உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும் யானை தன்பெருமையை நிலை நிறுததும். அதுபோல் ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளர மாட்டார் என்கின்றார்.

*“சிதைவிடத்து ஓல்கார் உரவோர் - புதையம்பிற்*
*பட்டுப்பா டூன்றும் களிறு.”*

அவ்வாறு பெருமையை நிலை நிறுத்தும் யானை பருத்த உடம்பை உடையது. கூர்மையான கொம்புகளை உடையது. ஆயினும் ஊக்க முள்ளதாகிய புலி தாக்கினால் அதற்கு அஞ்சும் தன்மையது என்று தமது உதாரணங்கள் மூலமாக ஊக்கம் அவசியம் என்று வலியுறுத்துகின்றார்.

*“பரியது கூர்ங்கோட்டது ஆயினும் - யானை*
*வெரூஉம் புலிதாக் குறின்.”*

எனவே வள்ளுவரின் கூற்றுக்கள் யாவும் அரசியல் சாணக்கியமான

செ.மெற்றாஸ்மயில்
(B.A) சிறப்பு

வையாகவே காணப்படுகின்றன. வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட செயல் உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

*“பொருள், கருவி காலம் வினை யிடனோடு - ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்.”*

செயலைச் செய்கின்றவன், செய்ய வேண்டிய முறை, அந்தச் செயலின் உண்மையான இயல்பை அனுபவத்தால் அறிந்தவனுடைய கருத்தைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கின்றார்.

*“செய்வினை செய்வான் செயல்முறை - அவ்வினை*
*உள்ளறிவான் உள்ளம் கொளல்.”*

உட்பகை உண்டான குடி அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்புபோல் வலிமை குறைக் கப்பட்டுத் தேய்ந்துபோகும் என்று எச்சரிக்கிறார்.

*“அரம்பொறாத பொன்போலத் தேயும் - உரம்பொறாது*
*உட்பகை உற்ற குடி.”*

மேலும் ‘எள்ளின் பிளவைப் போன்ற சிறிய அளவு உடையதே ஒரு குடியை அழிக்க வல்ல கேடு உட்பகையில் உள்ளதாகும்’ என அறிவுறுத்த வந்த மறைப் புலவர்,

*“எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்*
*உட்பகை உள்ளதாம் கேடு.”*
என்கின்றார்.

எனவே ஒற்றுமை, இலட்சிய வெற்றி, எண்ணும் எண்ணங்கள் நிறைவேறல், உயர்வான வாழ்வு பெறல், சுதந்திர திருஷ்டிகள் நிறைவேறல் ஆகியவை ஒற்றுமை இன்றேல் நிறைவேறாது என்று விதந்துரைத்த வள்ளுவர் கூற்றுக்குக் கைகொடுத்து நிற்கும் பாரதியாரும் பின்வருமாறு கூறுகின்றார்.

*“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே. நம்மில்*
*ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே.”*

---

## ஒரு மனித குமாரன் சிந்திக்கிறான்



ஒரு மனிதகுமாரன்
சிந்திக்கிறான்

இருண்டு கிடக்கும்
இதயக் கிழக்குகள்
விடிவதற்காகவும்

மனிதகுலத்தின் கண்ணீரை
சந்தோஷத்தின் சங்கையாய் மட்டும்
தரிசிக்கவும்

பச்சையம் இல்லாத
மனிதத்தாவரங்களும்
ஒளிச்சேர்க்கை செய்யும்
உத்தி காணவும்

ஒரு மனிதகுமாரன்
சிந்திக்கிறான்.

ஒரு மொட்டு
பூவாய் வெடிக்கும்
ரகசியச் சத்தத்தை
ஒலிப்பதிவு செய்ய முடியாதா?

அலைகளின் மொழிக்கு
ஓர்
அகராதி காண முடியாதா?

சூரியச் சிலந்தி பின்னும்
மேகவலைகளைத்

தன்
பேனாவை உயர்த்திப்
பிய்த்துவிட முடியாதா?

பூமாதேவியைப் பார்த்துக்
கண்ணடிக்கும் மின்னலைக்
கைதுசெய்ய முடியாதா?

என்ற
சின்னச் சின்ன ஆசைகளில்
சிம்மாசனமிட்டும்

ஒரு மனிதகுமாரன்
சிந்திக்கிறான்

அழகியல் அவனுக்கு
அந்நியமல்ல

கலைகளின் பெருமூச்சு
அவனுக்குச்
சங்கீதமே

கலைகள்
மனிதனைப் பதிவுசெய்யும்
மகத்துவம் பெறவும்

அந்த
மனிதகுமாரன்
சிந்திக்கிறான்

தனது இரத்தக் கையெழுத்தில்
எழுத்துப் பிழைகள்
எண்ணுவோரைக் கண்டு
சிரித்துக் கொண்டும்

சிலரின் கைகுலுக்கல்களுக்குப் பிறகு
தன்
விரல்களைச் சரிபார்த்துக் கொண்டும்

நாளையின் வானில்
கிழக்கில்
ஒரு
கிரணமாவோம்
என்ற நம்பிக்கையோடும்

சாட்சிகளில்லாத
ஊமைகளின் வழக்கில்
ஆஜராகத் துடிக்கும்
அவசரத்தோடும்

அவன்
சிந்தித்துக் கொண்டுதான்
இருக்கிறான்.

# பிறந்த நாள் பலன்கள்

## பெப்ரவரி

ஜனவரி 21ஆம் தேதியிலிருந்து பெப்வரி 19ஆம் தேதிக்குள் பிறந்தவர்களுகான பலன்கள்.

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் பொதுவாக வாழ்க்கையில் தனிமையில் இருந்து தவிப்பார்கள். இவர்கள் மிக எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்களாகவும், எதையும் பெரிதாகக் கருதுபவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் மற்றவர்களைக் கண்டவுடன், அவர்களைப் பற்றிமிக எளிதில் ஒரு முடிவுக்கு வருவார்கள். மற்றவர்கள் அனைவருமே மிக மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்துவதாகவும் தாம் மட்டும் அப்படியில்லை என்றும் எண்ணித்தேவையில்லாமல் நொந்து கொள்வார்கள்.

இவர்கள் தமக்கு மற்றவர்களிடம் உள்ள அன்பைச் செயலால் வெளிப்படுத்த மாட்டார்கள். ஆனால், இந்த அன்பு இவர்களுடைய மனத்தில் வேரூன்றி வளர்ந்து விட்டிருக்கும். இவர்கள், தமது நண்பர்களுக்காக முழு மனத்துடன், கடைசி வரையில் எந்த விஷயத்திலும் போரிடுவார்கள், ஆனால், இந்தச் செயல் இவர்கள் எண்ணத்தைப் பொறுத்தது. வேண்டுமென்றால், மற்றவர்களை வஞ்சம் தீர்த்துக் கொள்ளவோ, பழிவாங்கவோ மற்றவர்களைத் துன்புறுத்ளதவோ, சிறிதும் தயங்க மாட்டார்கள்!

பொதுவாக இப்படிப்பட்டவர்கள், எப்போதும் மிக எளிதில் கொதிப்படைவார்கள். இவர்களுடைய நரம்பு அடிக்கடி முறுக்கேறிவிடும். தமது மனநிலையை இவர்களால் கட்டுப்படுத்தவே முடியாது. நிமிர்ந்து ஏதாவது ஒரு செயலைத் துணிந்து செய்துவிட்டுப் பிறகு, தமது அவசர புத்தியை எண்ணி மிகவும் துன்பம் கொள்ளுவார்கள்.

பொது நலத்துக்காக இவர்கள் எப்போதும் தமது உதவியை அளிப்பதுடன், மற்றவர்களின் துன்பங்களை நீக்கவும் பெரிதும் பாடுபடுவார்கள்.

வாதாடும் போதும், பேசும் போதும் மிக வெற்றியுடன் ஆதிக்கம் செலுத்தும் இவர்கள் மற்றவர்கள் துன்புறுவதைப் புரிந்து கொள்ளவோ முயற்சி செய்ய மாட்டார்கள்.

இந்த மாதத்தில் பிறந்தவர்களும், விஞ்ஞானத்தில் பற்றுதல் கொண்டவர்களாகவும், ஏதாவது புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டும். விஞ்ஞானம் தொடர்பாக ஏதாவது ஆராய்ச்சி செய்துகொண்டே இருக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். இவர்கள் ஆர்வம் அனைத்தும் மின்சாரத் தொடர்பு உள்ளதாகவே இருக்கும்.

தொழிலிலும், பணத்திலும், இவர்கள் தமது மூளையைச் செலுத்தினால் பெரும் வெற்றியைப் பெறமுடியும். ஆனால், இப்படிப்பட்டவர்கள் தமக்காக உழைபபதைவிட மற்றவர்களுக்குக்காகத் தொழிலை வளர்ப்பதிலும் வளத்தைப் பெறுவதிலும் வாழ்க்கையைக் கழிப்பார்கள். இதனால் இவர்களுக்கென்று எதுவும் மிஞ்சாது.

அரிய வாய்ப்புக்கள் வந்தால், இவர்களுடைய உண்மையான திறமைகளையும் குணங்களையும் வெளிப்படுத்துவார்கள்.

விடாப்பிடியை இவர்கள் தளர்த்தினால் வாழ்க்கையில் இவர்கள் நினைத்த இடத்தை எதிர்ப்பு ஏதுமின்றி அடைய முடியும். மற்றவர்களுடன் சேர்ந்து ஒரு வேலையில் ஈடுபடும் போது, மற்றவர்கள் செய்யும் தவறுகளுக்கு இவர்கள் தாம் பொறுப்பு, என்ற பழி வந்து சேரும். மற்றப்படி ஒரு வேலை யில் இறங்கினால் இவர்கள் எப்போதும் வெற்றியுடனே செய்து முடிப்பார்கள். இதன் முடிவில் இவர்களுக்குப் பெயரும் புகழும் பார்க்கும் திறமை பெற்றிருப்பதுடன், கற்பனையும், புதியவற்றைக் கண்டுபிடிக்கும் ஆற்றலும் கொண்டவர்களாகவே விளங்குவார்கள்.

பொதுக்கூட்டங்களிலும், பெரிய மனிதர்களுடன் ஒன்று சேர்ந்திருப்பதிலும், பொதுச் செயல்களிலும் இவர்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு. விழாக்களிலும், கலைநிகழ்ச்சிகளிலும், இவர்களுக்கு மிகுந்த பற்று உண்டு.

ஒரு குறிப்பிட்ட சுற்றுப்புறத்தில், மற்றவர்கள் எண்ணாத, மற்றவர்களுக்குப் பிடிக்காத செயல்களைச் செய்வார்கள்.

(13ம் பக்கம் பார்க்கவும்)

# சலரோகம் (DIABEETES MELLITUS)

## இன்சுலின் ஊசி மாத்திரை பாவிப்பவர்களுக்கான பொது அறிவுரைகள்.

1. மருந்து எடுத்து அல்லது இன்சுலின் ஊசி ஏற்றி அரை மணி நேரத்துள் குறித்தளவு உணவை நேரந்தவறாமல் உட்கொள்ள வேண்டும்.

2. சிலநேரங்களில் உணவு உட்கொள்ளத் தவறினால் அல்லது மேலதிகமாக மருந்தை உட்கொண்டால் களைப்பு, பசி, மயக்கம், மாறாட்டம், தலைச்சுற்று, அதிகளவு வியர்த்தல், நெஞ்சுப்படபடப்பு, கண்பார்வை மங்கல் போன்ற அறிகுறிகள் தோன்றும். இப்படியான நேரங்களில் குளுக்கோஸ் அல்லது வேறு இனிப்பு வகைகளை உடனடியாக உட்கொள்ளல் அவசியம்.

3. நோயாளி சிறிதளவு குளுக்கோசை அல்லது இனிப்பு வகைகளை எப்பொழுதும் தன்னுடன் வைத்திருத்தல்.

4. வெளியே செல்லும் போது தான் ஒரு சலரோக நோயாளி என்வும் தான் உள்ளெடுக்கும் மருந்து வகைகளையும் அவற்றின் அளவுகளையும் எழுதிய அட்டை ஒன்றை எப்பொழுதும் எடுத்துச் செல்லல்.

5. நீங்கள் அதிக அளவில் வேலைகளில் ஈடுபட நேரிடினோ அல்லது விளையாட்டுக்களில் கலந்து கொள்ள நேரிடினோ எடுக்கும் மருந்தின் அளவைக் குறைத்தோ அல்லது உணவின் அளவை அதிகரித்தோ எடுத்தல் வேண்டும். இதன் மூலம் ஏற்படக் கூடிய பக்கவிளைவுகளில் இருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

6. உணவு உட்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் (உ-ம் வேறு நோயினால் பீடிக்கப்பட்டிருத்தல்) அல்லது உணவு தவறவிடப்படும் சூழ் நிலைகளில் (உ-ம் விரத காலங்களில்) அல்லது உணவு உட்கொள்ள நேரம் பிந்தும் சூழ் நிலைகளில் வைத்திய ஆலோசனையுடன் மாத்திரைகள், இன்சுலின் அளவில் மாற்றம் செய்தல்.

7. வீட்டில் உள்ளவர்களுக்கு மயக்க நிலை பற்றி தெளிவாக விளக்கமளித்தல்.

8. வேறு நோய்களிற்காக வைத்தியரிடம் செல்லும் போது தான் ஒரு சலரோக நோயாளி என வைத்தியருக்கு தெரியப்படுத்தல்.

9. நீங்கள்உணவுக் கட்டுப்பாடின்றி உண்பதன் மூலமோ அல்லது மருந்துகளை ஒழுங்கீனமாகப் பாவிப்பதன் மூலமோ உங்கள் குருதியில் குளுக்கோசின் அளவு அதிகமாகி அதன் பொருட்டு வயிற்றுப் பிரட்டல், நாவரட்சி, வாந்தி, மயக்கம் போன்றன ஏற்படலாம். அவ்வாறு ஏற்படின் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லுதல் வேண்டும்.

10. வேறு நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் நீங்கள் இன்சுலின் மருந்து பாவிக்கும் நோயாளி எனின் தொடர்ந்து இந்தஊசிமருந்தினை ஏற்றல் வேண்டும்.

11. உங்களிற்கு வாந்தி காரணமாகவோ அன்றி சமிபாடின்மை காரணமாகவோ உணவு உட்கொள்ள இயலாது இருப்பின் உடன் மருத்துவ ஆலோசனையை நாடவும்.

### சலரோக நோயிற்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருப் போர் கடைப்பிடிக்க வேண்டிய அம்சங்கள்

1 வைத்தியரின் ஆலோசனைப்படி குளிசையை அல்லது இன்சுலின் ஊசியை ஒழுங்காக எடுக்கவேண்டும்.

2. குளிசை அல்லது இன்சுலின் ஊசியை எடுத்தபின் கட்டாயம் உணவு உண்ண வேண்டும்.

3. ஒவ்வொரு நாளும் சலப் பரிசோதனை செய்து பெறப்படும் நிறத்தை கொப்பி ஒன்றில் குறித்து அடுத்தமுறை வைத்தியரிடம் செல்லும்போது அதைக் காட்ட வேண்டும்.

4. உணவுக் கட்டுப்பாட்டை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

5. தினமும் தேகஅப்பியாசம் செய்தல் வேண்டும்.

6. உடற்சுத்தம் மிக அவசியம். அதிலும் பாதங்களை கவனமாகப் வேணுவதுடன் பாதங்களை ஒவ்வொரு நாளும் அவதானிக்க வேண்டும்.

7. ஆறுமாதங்களுக்கு ஒருமுறை சிறுநீரகப்பாதிப்பை அறிந்து கொள்வதற்காக Microalbumin அளவுகள் சோதிக்கப்படல் வேண்டும்.

8. வருடம் ஒருமுறை கண் உட்பட உடல் பூரண பரிசோதனைக்கு உட்படுத்தப்படல் மிக அவசியம்.

9. கர்ப்பகாலத்தில் உருவாகிய சலரோகத்தை விட ஏனைய சலரோக நோய்கள் ஒருவரது வாழ்க்கைக் காலம் முழுவதும் காணப்படும். எனவே இதனுடன் வாழ அவர் தன்னை மனரீதியில் உறுதிப் படுத்த வேண்டும்.

### நீரிழிவு நோயாளர் - பாதங்களைப் பேண வேண்டிய முறை

நீரிழிவு நோயின் காரணமாக கால்களுக்கான இரத்த ஓட்டம் குறிப்பிடத்தக்க அளவிற்கு பாதிப்படைகிறது. பாதங்களில் உணர்ச்சியும் குறைவடைகின்றது. இதனால் பாதங்களில் இலகுவில் புண்கள் ஏற்படும் வாய்ப்புண்டு. அத்துடன் ஏற்படும் புண்கள் இலகு வில் குணமடையாது நீண்ட நாட்களுக்கு நீடிக்கும் அபாயமும் உள்ளது. இதன் விளைவாக கால்களை அகற்றவேண்டிய துர்ப்பாக்கிய நிலைகளும் ஏற்பட்டு விடுவதுண்டு.

எனவே உங்கள் பாதங்களை முகத்தை பாதுகாப்பது போல் பாதுகாக்க வேண்டும்.

1. நகங்களை ஒழுங்காகவும், விரல்களை காயப்படுத்தாத வகையிலும் கவனமாக வெட்டவும் பாதங்கள் சூடாக இருக்கும்போதே நகங்களை வெட்டவும்.

2. பாதங்கள் எப்பொழுதும் மிகவும் சுத்தமாகவும் உலர்வாகவும் இருத்தல் வேண்டும். முக்கிய கவனத்தை கால் விரல்களுக்கிடையில் செலுத்தவும்.

3. வெறுங்காலுடன் நடப்பதைத் தவிர்க்கவும். பாதங்களை உறுத்தாத பாதணிகளை எப்பொழுதும் அணிய வேண்டும். பாதங்களுக்கு உணர்ச்சி குறைவாயின் பூட்டக்கூடிய பாதணிகளை அணியவேண்டும்.

4. ஒவ்வொரு நாளும் பாதங்களில் ஏதாவது காயங்கள், கொப்புளங்கள் உள்ளதா என ஒழுங்காக அவதானிக்க வேண்டும். கொப்புளங்களை ஊசியினால் குத்தி உடைக்க முயலக்கூடாது.

5. காயங்களை துணிகளினால் இறுக்கமாகக் கட்டக்கூடாது.

6. பாதங்களில் சிறியபுண் ஏற்படினும் உடனடியாக வைத்திய ஆலோசனையினை நாட வேண்டும். அவ்வாறு வைத்தியரை நாடும்போது உமக்கு நீரிழிவு நோய் இருக்கின்றதென்பதை அவருக்கு தெரியப் படுத்தவேண்டும்.

### கர்ப்பமும் நீரிழிவுநோயும்

கர்ப்பிணிப்பெண்கள் இரண்டு வகையான தோற்றுவாய் உடைய நீரிழிவு நோயைக் கொண்டிருக்கலாம்.

1. சலரோகம் உடையவர்களில் ஏற்படும் கர்ப்பம் (OVERT DIABETES MELLITUS)

2. கர்ப்பம் காரணமாக ஏற்படும் சலரோகம் (GESTATIONAL DIABETES MELLITUS)

கர்ப்பமடைவதற்கு முன்னரே சலரோகம் இருப்பின் கர்ப்பமடையும் போது சலரோகம் பூரண கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.சலரோகம் கட்டுப்பாடின்றி இருப்போர் கர்ப்பமடையும்போது கருச்சிதைவு, சிசுமரணம், பருமனான குழந்தை பிறத்தல், முதலிய சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய்வரின் குழந்தை பிறந்தும் சிறிது காலத்தின் பின் பெரும்பாலும் இந்நோய் இல்லாமல் போய்விடும். சிலவேளைகளில் தொடர்ந்து இருக்கும்.

இருவகையினரும் கர்ப்ப காலத்தில் வைத்திய ஆலோசனைப்படி இன்சுலின் ஊசியைப் பாவிக்க வேண்டும். (வாயினால் உட்கொள்ளப்படும்) மாத்திரைகள் வழக்கமாக கர்ப்பகாலங்களில் பாவிக்கப்படுவதில்லை) குழந்தையின் வளர்ச்சிக்கு தேவையான எல்லா உணவையும் தாய் உண்ணலாம் .

### சலரோகநோய்ஏற்படாமல் கட்டுப்படுத்தல் (PRIMARY PREVENTION)

தாய் அல்லது தந்தை அல்லது இருவரும் நீரிழிவு நோயாளர்களாக இருப்பின் அவர்களின் பிள்ளைகளுக்கு இந்நோய் வரக்கூடிய வாய்ப்புக்கள் கூடுதலாக இருக்கின்றன. அவர்களின் பிள்ளைகளும் ஏனையோரும் பின்வரும் முறைகளைக் கையாண்டால் நோய் வராமல் இருக்கலாம். அல்லது நோய் வரக் கூடிய வயதைப் பிற்போடலாம்.

1. சீரான உணவுப் பழக்க வழக்கங்களைக் கடைப் பிடிக்கல்.

"உடல் தேவைக்குரிய அளவில் மாத்திரம் உண்ணுதல், சமச்சீர் உணவு எடுத்தல், நார்ப்பொருள் (FIBRES) கூடிய உணவு உண்ணல், பலவகை உணவுகளைச் சேர்த்தல், ஒரு வேளை அளவு உணவைப் பல வேளை பிரித்து உண்ணல்.

2. உயரத்திற்கு ஏற்ற நிறையைக் கடைப்பிடித்தல்.

3. உடற்பயிற்சியை மேற்கொள்ளல், (விரைவு நடை சக்திக்கு உட்பட்ட வரையில்)

4. மதுபானம், புகைப்பிடித்தல் முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.

5. உளநெருக்கீடுகளைக் குறைத்து உளச்சமச்சீர் பேணல்.

சலரோகத்தை முற்றுமுழுதாக குணமாக்க முடியாது.ஆனால் தகுந்த சிகிச்சை பெற்று நோயைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதனால்அதனால் ஏற்படும் தீயவிளைவுகளைப் பிற்போடலாம்.

ஒரு நபரிற்கு சலரோகம் தோன்றியிருப்பது எவ்வளவு விரைவாகக் கண்டறியப் படுகிறது என்பதிலேயே சிகிச்சையினுடைய முழு் வெற்றி தங்கியுள்ளது. எனவே 40 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் வருடமொரு முறையிலாயினும் தங்கள் சலம், குருதியை பரிசோதனை செய்து கொள்வது நன்று. அவ்வாறு செய்யும்போது, நீரிழிவு நோயாளி எனக் கண்டறியப்படுமிடத்து வைத்திய ஆலோசனைப்படி தகுந்த சிகிச்சை பெறுவாராயின் அவர் பயனுள்ள ஆரோக்கியமான வாழ்க்கையை வாழமுடியும்.

1. 'மருந்து என வேண்டாவாம் பாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்' (குறள் 942)

2. 'தீயன வன்றித் தெரியான் பெரிதுண்ணின் நோயன வின்றிப்படும்' (குறள் 947)

3. 'மாறுபாடு இல்லாத உணவு மறுத்துண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு'(குறள் 945) (உடலுக்கு மாறுபாட்டைச் செய்யாத உணவையும், தன் மனம் விரும்பியபடி அல்லாமல் நோய் வராத அளவில் உண்பானானால், அவனுக்கு பிணிகளால் துன்பமில்லை)

பொ.பிரதீபன்
4ஆம் வருடம்
மருத்துவ பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்.

(முற்றும்)

## மணமான ஆண்கள் பெற்றோரை மறந்து விடுவது ஏன்?

கமலன் ஊரெழு
ஃ பெண்களின் மன ஆழத்தை காண முயற்சித்தால்....?
❋ மந்திகை அல்லது மானிப்பாய் வைத்தியசாலையில் மருந்தெடுக்க வேண்டிவரும்.

ஜி.சகுந்தலா சுண்டுக்குளி
ஃ வெளி உலகில் நல்லவர்கள் போல் நடித்துக் கொண்டு, உள்ளுக்குள் தீ வைப்பவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர் வியாசர் அவர்களே?
❋ "உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார்" என்று இராமலிங்க வள்ளலார் அருமையாகக் கூறியிருக்கிறாரே.

த.அஜந்தகுமார் வதிரி
ஃ ஆசிரியர்களை மதிக்காது மிதிக்கின்ற மாணவர்களைப் பற்றி யாது கூறுவீர் வியாசரே?
❋ தன்னிடம் கற்ற மாணவனுக்கு பண்பு விருத்தியடையவில்லை என கரும்புள்ளிபோட்ட ஆசிரியரை அவன் மிதிக்காமல் வேறு என்ன செய்வான்.

நவசுதன் சாவகச்சேரி
ஃ வாழ்க்கையில் முன்னேற என்ன தொழில் செய்யலாம்?



❋ உடனடியாக முன்னேற வேண்டுமாயின் கடற்றொழில் செய்ய வேண்டும். மூன்று மாதத்தின் பின் முன்னேற நெல் விதைக்க வேண்டும் ஆயுட்கால அந்தலையிலாயின் பனை வைக்க வேண்டும்.

கௌசிகா கரணவாய்
ஃ மணமான ஆண்கள் பெற்றோரை மறந்து விடுவது ஏன்?



❋ தாங்கள் பெற்றோர் ஆகிவிடுவதால்.

சந்திரா கச்சாய்
ஃ வியாசர் அவர்களே! இலக்கியவாதி முதல் அரசியல் வாதிகள் வரை ஏன் நீரும் கூட பெண்களை தாழ்மைப்படுத்தி கூறி வருவது ஏன்?
❋ தாயே சந்திரா அவர்களே! பெண்களை தெய்வமாக மதிப்பவன் நான். பெண்களைத் தாழ்மைப்படுத்திப் பதில் எழுதுவதாக நீர் ஓர் கதையைக் கட்டி விட்டால் 'வலம்புரி-சங்கு நாதம்' நிர்வாகம் அந்தக் கணமே எனக்குத் துண்டு வெட்டி விடும். ஒரு பழியும் அறியாத என்னில் வீம்பு கூறி என் தொழிலுக்குப் பங்கம் விளைவித்து விடாதீர்.

லதாங்கி இணுவில்
ஃ இப்படித்தான் வாழ வேண்டும் எப்படியும் வாழலாம் இரண்டில் எது சரி கூறுங்கள் பார்க்கலாம்?
❋ எப்படியும் வாழலாம் என்பவர்கள் விரைவாக முன்னேறுகிறார்கள்

எம். முருகையா வேம்பிராய்
ஃ குளோனிங் முறைமூலம் குழந்தை உருவாக்கத்திற்கு இலங்கையில் சாத்தியமுண்டா?
❋ அப்புனே! முருகையா ஒழுங்காய்ப்பிறந்த குழந்தைக்கு நிம்மதியாக இருக்க இடமில்லை. இது வேறயா.

## ஐயா வியா! பின்லேடன் அமெரிக்காவிலாமே பயங்கர வாதத்திற்கெதிரான நாடுகள் அங்கு தாக்குதல் நடத்தினால் என்ன?

சோசி.ஆதவன் சங்கரத்தை
ஃ வியாசர் அவர்களே! தாளும் எழுதுகோலும் இல்லாவிட்டால் எப்படி பதில் சொல்வீர்கள்?
❋ அப்பனே ஆதவா! நீர் எப்படி, எதன் மூலம் கேள்வி கேட்பீரோ அப்படி.

எம்.ராம் உடுப்பிட்டி
ஃ ஒருபெண்ணை விரும்புகிறேன் அவள் கையைப் பிடிக்கலாமா?
❋ அவள் காலில் செருப்பு இல்லாத நேரமாகப் பார்த்து முயற்சி செய்யும்.

வே.சஞ்சீவன் ஓட்டுமடம்
ஃ டியர் வியாசர் சேர்! சிம்ரன் நடிக்கும் அடுத்த படத்தின் அந்த படத்தின் இயக்குநர் உங்களைத் தான் கதாநாயகனாக நியமித்திருக்கிறாராம் உங்களுக்குச் சம்மதம் தானே.
❋ தம்பி சஞ்சீவா! தாங்கள் கேட்டது கனவோ கற்பனையோ நாம் அறியோம். ஆனால் காதலிக்காக கடற்கரை வெளியில் காதலியின் கையை பிடித்துத்துள்ளாத "கதாநாயகன்" நடித்த ஒரேபடம் அதுவாகத்தான் இருக்கும்.

## உமது பதில்கள்ளப் பார்க்கும் போது மாமன், அப்பா, அண்ணன் போன்ற பதவிகளில் இருக்கிறீர். உமது உண்மை நிலை என்ன என்பதை அறியத் தருவீரா?

## வியாசரின் பதில்கள்

நிலவாசன் வண்ணார்பண்ணை
ஃ வியாசர் ஐயா அவர்களே! அன்பு முதுமையானதா இளமையானதா.?
❋ பொதுவானது.

பரந்தாமன் சண்டிலிப்பாய்
ஃ வெற்றிக்கு காரணம் சந்தர்ப்பமா? திறமையா?
❋ சந்தர்ப்பவாதம்

பொ.குணரத்தினம் நாவலர் வீதி
ஃ நம் நாட்டில் சில பெண்களால் எமது கலாசாரம் சீரழிகின்றதே இதைத் தடுக்க முடியாதா வியாசரே?
❋ தடுக்கவே முடியாது எங்கும், எதிலும் புறநடைகள் இருக்கவே செய்கின்றன.

மைதிலி யாழ்ப்பாணம்
ஃ எல்லோர் முன்னிலையிலும் சிகரட் குடிக்கும் இளைஞர்களை திருத்த என்ன வழி கூறுங்கள் பார்க்கலாம்?
❋ மகளே மைதிலி! பிஞ்சில் பழுத்ததை முற்ற வைப்பதற்கு மருந்துண்டா?

லலிதா சண்டிலிப்பாய்
ஃ உமது பதில்களைப் பார்க்கும் போது மாமன், அப்பா, அண்ணன் போன்ற பதவிகளில் இருக்கிறீர். உமது உண்மை நிலை என்ன என்பதை அறியத் தருவீரா?



❋ ஒரே ஒரு பதவி மட்டும் உண்டு துறவி

J.றொபேட் நாவாந்துறை
ஃ அரசு புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை ஐக்கிய இலங்கைக்கு வழிவகுக்குமா?
❋ ஐக்கியமான இலங்கைக்கு வழி வகுக்கும்.

## வாழ்க்கையில் முன்னேற என்ன தொழில் செய்யலாம்?

செந்தூரன் கோப்பாய்
ஃ காதல் இல்லாமல் வாழ்வதும் வாழ்வா! காதல் இல்லாமல் இல்லாமல் சாவதும் சாவா! இது பற்றி உங்கள் கருத்து என்ன?
❋ ஊரும் சதமல்ல , உற்றார் சதமல்ல என்றிருப்பவன் நான்.

மு.நவநீதன் நாவற்குழி
ஃ ஐயா வியா! பின்லேடன் அமெரிக்காவிலாமே பயங்கர வாதத்திற்கெதிரான நாடுகள் அங்கு தாக்குதல் நடத்தினால் என்ன?



❋ "பயங்கரவாதத்தின் தாய் நாடு அழிந்து விடுமே."

அரசி நல்லூர்
ஃ வியாசர் அவர்களே! பயிற்சி முயற்சி இல்லாது செய்யக் கூடிய வேலை எது?
❋ மற்றவர்களைப்பற்றி குறை கூறுவது.

கபிலன் திருநெல்வேலி
ஃ பெண்களிடம் வயதைக் கேட்டால் பதில் எப்படி வரும்?
❋ மகனே கபிலா! குடை வேண்டிக் கொடுத்த கதை உமக்கு தெரியாதா.

றூபன் கல்வியங்காடு
ஃ கணவன்-மனைவி உறவு எப்படி இருக்க வேண்டும்?
❋ ஆத்மார்த்தமானதாக இருத்தல் வேண்டும்.

பரமசிவம் மண்முனை
ஃ உன்ரை மூளையைப் பாவித்து ஒரு வீடுகட்டு என்று மகனைச் சொன்னனான். அவனோ மண் வீட்டைக் கட்டி வைச்சிருக்கிறான். அவனை என்ன செய்யலாம் வியாசரே?
❋ ஒன்றும் செய்யவேண்டாம். சிலரின் மூளைக்குள் "களிமண்" இருக்கிறது என்று சொல்லுவதை நான் முன்பு நம்புவதில்லை. ஆனால் உங்கள் மகனின் செயலின் பின் நம்புகிறேன்.

தி.சிவதர்ஷினி நெல்லண்டை
ஃ தாள் நாணயங்களில் தமது பெயரை எழுதுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
❋ "நாணயம்" இல்லாதவர்கள் தங்கள் பெயரை நாணயத்தில் எழுதுகிறார்கள் அவ்வளவு தான்.

---

## வாசகர் இதயநாதம்

வசந்தத்தில் ஒரு நாள்
வாசக நெஞ்சங்களில்
வலம் வரும் சங்குநாதமே உன்
மலர்மேனி இதழ்களில் இனிமை
அள்ளி வீசுகின்றதே. உன்
சிறப்பை ஆயிரம்
தலைகளையுடைய ஆதிசேஷன்
தனது ஆயிரம் நாவினால்
எடுத்து
உரைத்தாலும் ஈடாகுமா? உன்
சேவை தொடர என்
வாழத்துக்கள்.

*க. கற்பகவல்லி*
*பருத்தித்துறை.*

அறிவை வளர்க்கும் நன் நாளிதழ்
ஆதரவுக் கரத்தை மக்களிற்கு வீசி
இளம் கவிஞர்களிற்கு கவசம் அணிவித்து
ஈன்ற நாட்டின் பெருமை பேசி
உண்மைச் செய்தியை வாரி வழங்கி
எல்லா அம்சமும் உள்ளே அடக்கி
ஏற்றம் அடையும் சங்குநாதமே!
ஐயம் என்பதனை அறியாது
ஒழுக்கத்தை வாழ்விலே கடைப்பிடித்து
ஓராயிரம் ஆண்டுகள் நிலைத்திட்டு
ஔவை சொற்படி நடந்து வான்புகழ்
எய்துவாய்.

*சி.திருச்செந்தூரன்,*
*யா/ நெல்லியடிமத்தியமகாவித்தியாலயம்.*

உன் இசை வாழி, உன் ஒலிபோற்றி, நீ
சுமந்து வரும் ஒவ்வொரு அம்சங்களும்
அதிசயத்தின் அசத்தல்களே.
மக்கள் மனம் உறைந்த, கவிதைக் கலசம்,
மௌனத்தின் தேடல்கள், குறுக்கெழுத்துப் போட்டி
என்பன எம்மவரின் எழுத்தாற்றலையும்,
விவேகத்தையும்
தட்டிக்கொடுக்கும் கருவிகளாகவே அமைகின்றன.
மற்றும் கம்பியூட்டர் கல்வி, கண்ணதாசனின்
அர்த்தமுள்ள இந்துமதம் என்பன மக்களின் அறிவை
விருத்தி அடையச் செய்கின்றது. அது மட்டுமல்லாது
அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம் என்னும் தொடர்
மகாத்மா காந்தியின் வரலாற்றை அறிய உதவி புரிகிறது.

மற்றும் சிறுகதைகள், தொடர்கதைகள், சிறுவர்
அரங்கம், மகளிர் உலகம், எல்லாம் சிறப்பானவையே.
சிறப்பான நாதமே எம் இதயநாதங்களை
வரைவதற்கு ஓர் இடம் தந்ததற்கு என் உளம்
நிறைந்த நன்றிகள்.

*அ.ஜெசிக்கா,*
*சுன்னாகம்.*

[illegible]

*[illegible]*

வண்ணத் தமிழ் அன்னை
வலம்புரி ஈன்றெடுத்த
சங்குநாதமே ........

எம்மத்தியில் செம்மையாய்
உதித்திட்ட
சங்கு நாதமே!

அறிவுக்குப் பயனுள்ள
ஆக்கங்களைத் தரும்
அறிவு மேதையே!........

இது உன்னை உயர்வாய்.
பக்குவமாய்ப் பாதுகாக்கும்
என் வாழ்த்து!

ஓ! சங்கு நாதமே.......
பல்லாண்டு காலம்
நீ ஒலிக்க நான்
வாழத்துகின்றேன்!

*ஆழியூர் சீ.ஏ.யசீகரன்.*

நாதமே உன்னை
திரும்பத் திரும்ப
வாசித்து வாசித்து
உன் ராகத்தை
நான் நெஞ்சினின்று
நீங்காத கானமாய்
நிறுத்திக் கொண்டேன்.
உன்னை நான்
நேசித்து நேசித்து
உனது நெஞ்சத்தையும்
புரிந்து கொண்டேன்.
சங்குநாதமே!
என்றென்றும் நீ வாழி.

*S.K.குணபாலன்,*
*அளவெட்டி.*




## நீங்கள் எப்படி



### வெற்றி பெறுகிறவரா?

1. எந்த வேலையையும் உடனுக்குடன் முடிப்பார்.
2. அடுத்த வேலையை எடுக்கத் தயாராக இருப்பார்.
3. குறைவாகப் பேசுவார்.
4. எந்த சிக்கலுக்கும் ஒரு விடை வைத்திருப்பார்.
5. ''ஒரு பாதை அடைப்பட்டால், அடுத்த பாதை திறக்கும்'' என்று முயற்சி செய்வார்.
6. ''கஷ்டந்தான், ஆனால், முடித்துவிடலாம்'' என்று உறுதியுடன் கூறுவார்.
7. ஒரு நேரத்தில் ஒரு வேலையைத்தான் கவனிப்பார்.
8. பிறர் சொல்லுவதை பொறுமையாகக் கேட்பார்.
9. தவறுகளை ஒப்புக் கொள்ளுவார்.
10. தோல்வியை ஒப்புக்கொண்டு, புதிய முயற்சிக்குத் தயார் ஆவார்.

### தோல்வி அடைபவரா?

1. வேலைகளை முடிக்காமல், குவித்துக் கொண்டு வருவார்.
2. ''இருக்கிற வேலையை இன்னும் முடியவில்லையே'' என்று முணுமுணுப்பார்.
3. பேச்சு அதிகமாக இருக்கும்
4. சிக்கலை மேலும் குழப்புவார்
5. ஆயிரம் பாதை இருந்தாலும், எந்தப் பாதையில் போவது என்று குழம்புவார்.
6. ''முடித்துவிடலாம்! ஆனால். நிரம்பக் கஷ்டம்'' என்று புலம்புவார்.
7. ''நான் எதைத்தான் செய்வது?'' என்று கைகளை பிசைவார்.
8. பிறரைப் பேசவிடமாட்டார். தானே பேசிக்கொண்டிருப்பார்.
9. ''இது என் தவறே அல்ல'' என்று பிறர் மீது பழிபோடுவார்.
10. ''நான் தொலைந்தேன்'' என்று சுருண்டு படுத்துவிடுவார்.

S. நந்தினி

## ஒளிமயமான எதிர்காலத்திற்கு



(சென்றவாரத் தொடர்ச்சி:...)

திருமண வாழ்வில் கட்டாயம் மனதில் கொள்ள வேண்டியது என்னவென்றால் ஒருவர் எடுக்கும் தீர்மானம், பிரயோகிக்கும் சொல், செய்யும் செயல் என்பன மற்றவர் மனது புண்படா வண்ணம் அமைய வேண்டும். தற்செயலாக கணவன் எடுக்கும் தீர்மானத்தினால் மனைவியின் மனம் புண்பட்டு அதனால் தர்க்கம் ஏற்பட வாய்ப்புண்டு. இதன் மூலம் அவர்களது உறவு கெடலாம். அதனால் வாழ்வில் முக்கிய சந்தர்ப்பங்களில் எடுக்கப்படும் முடிவுகள் இருவரது விருப்பம் மற்றும் சம்மதம் என்பவற்றின் அடிப்படையில் எடுக்கப்பட்டால் அது சிறப்பாக அமையும்.


அலுவலகப் பணி முடிந்து வீட்டுக்கு வரும் கணவனை வரவேற்கச் செல்லுதல் உங்கள் கடமை. அவர் உங்களுக்காக என்று ஏதாவது செய்திருந்தால் அதற்கு நன்றி கூறுதல் மற்றும் அவரது பிரச்சினைகளில் அவரோடு பங்கேற்று தைரியப்படுத்துதல் இவையெல்லாம் மனைவிமார் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும். இதன் மூலம் உங்கள் வாழ்வு இன்பமுற வழியமைக்கலாம்.

அதே போல் கணவன் மார்களும், தம் மனைவியின் உணர்வுகளில் அக்கறை கொண்டு குறை கூறாது மனைவி உங்களுக்கு செய்கின்ற உதவிகளுக்கு நன்றி கூறுதல் வேண்டும்.

பிரச்சினைகளை மௌனமாக யோசித்து, நிதானமாக ஒரு முடிவுக்கு வர வேண்டும். இதன் மூலம் தம்பதியினரிடையே காணப்படும் கோபதாபங்கள் விலகி, சிறப்பான, அழகான சந்தோஷமான வாழ்வு அமையும். (முற்றும்)

## இறால் புரியாணி





### தேவையானவை

சுத்தப்படுத்திய இறால் :- 1/4 கிலோ
வெங்காயம் :- 1/4 கிலோ
பச்சை மிளகாய் :- 5
தக்காளி :- 3
உள்ளி :- 10 பல்
இஞ்சி :- ஒரு துண்டு
மிளகாய்த்தூள் :- 3 தேக்கரண்டி
மஞ்சள் தூள் :- சிறிதளவு
கடலை எண்ணெய்
பச்சரிசி :- 400 கிராம்.
கறிவேப்பிலை
உப்பு தேவையான அளவு.

### செய்முறை:-

முதலில் பச்சை அரிசியை பொல பொலவென்று வடித்து வைத்துக் கொள்ளவும். அகலமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றவும். வெங்காயம், பச்சைமிளகாய், தக்காளி நீளவாக்கில் நறுக்கிப் போடவும். கறிவேப்பிலை, சுத்தப்படுத்திய இறால் என்பவற்றைப் போட்டு நன்றாக வதக்கவும். பொன் நிறமாக வதங்கியதும் சிறிதளவு தண்ணீர் விட்டு, மிளகாய்த் தூள், மஞ்சள்த் தூள், தேவையான உப்பு, தட்டிய இஞ்சி, உள்ளி என்பவற்றைப் போடவும். 20 நிமிடம் மூடிவைத்து, பிறகு கிளறவும். மசாலா தடிப்பாக வந்தவுடன் இறக்கி, வடித்து வைத்த சோற்றை அதில் கொட்டி, நெய் ஊற்றி நன்றாகக் கிளறவும்.

இதுவே இறால் புரியாணி, சுவையாக இருக்கும். இதமான சூட்டில் பரிமாறவும்.

லோ. விஜயலட்சுமி

## அழகிய கண்கள் வேண்டுமா?



*புத்தகங்களை 20 நிமிடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகப் படிக்கக் கூடாது. 20 நிமிடங்களுக்கு ஒரு முறை கண்களுக்கு 2 நிமிடம் ஓய்வு கொடுக்க வேண்டும்.

*கண்ணுக்கு ஓய்வு கொடுக்க கண்களை மூடிக்கொள்ளலாம். அல்லது பார்வையை நீண்ட தூரத்திற்குச் செலுத்தலாம். இப்படிச் செய்து வந்தால் கண்கள் உடனடியாகப் புத்துணர்ச்சி பெறுகின்றன.

*புத்தகம் படிக்கும் போதும் தொலைக்காட்சி பார்க்கும் போதும் அவைகள் கண் அருகில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். கண்ணுக்குக் தொலைக்காட்சிக்குமிடையே குறிப்பிட்ட இடை வெளி இருப்பது அவசியம்.

*கம்பியூட்டரில் வேலை செய்பவர்கள் அதிக பிரைட் வைத்துக் கொண்டு வேலை செய்தாலும், கண் பாதிக்க வாய்ப்புண்டு. மல்ரிகலர் படத்தையும் அடிக்கடி திரையில் பார்ப்பதும் நல்லதல்ல.

*தலைவலி தொடர்கதையானால் உடனே கண்மருத்துவரைச் சந்திப்பது அவசியம். காலம் கடந்தால் கூடுதல் செலவாகும்.

க.சாரதா

## நல்ல உணவே நலவாழ்வு

ஆரோக்கியத்தை விரும்பாதவர்கள் உலகில் இல்லவே இல்லை. ஆரோக்கியம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் இன்பமும் மகிழ்ச்சியும் இல்லை. எல்லோருக்குமே அழகாக, ஆரோக்கியமாக, இளமையாக இருக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் இருக்கிறது. இதற்கெல்லாம் ஒரே வழி நல்ல உணவுதான்!



இன்றைய இயந்திரத்தனமான வாழ்க்கை அமைப்பில் பலர் தங்கள் உண்ணும் உணவில் போதிய கவனம் செலுத்துவதே இல்லை. காலை உணவை சிலர் சாப்பிடுவதே இல்லை. பலர் அரைகுறையாகச் சாப்பிடுகிறார்கள். மதிய உணவு, இரவு உணவு எதிலும் கவனம் செலுத்துவதில்லை.

(மறு இதழில் தொடரும்....)

## பெண்களுக்கு பிடித்தமானவை

பெண்களுக்கு மிகப்பிடித்தமானவை சில...

அவை:- பூ, பொட்டு, மூக்குத்தி, கண்மை,வளையல்கள், கொலுசு, மிஞ்சி.

மேலே சொன்னவைகளில் அழகு மட்டுமன்றி, சில அபூர்வ மகிமைகளும் உள்ளன.



### பூக்கள்

வாசனையுள்ள மலர்கள் வாசனைத் திரவியங்களுக்கு நிகரானது. பூக்கள் அழகையும், வாசனையையும் தருவதோடு நின்று விடாமல், தலையில் ஏற்படும் சில நோய்களுக்கு மருந்தாகவும் இருக்கிறது. சாமந்தி போன்ற கனமான பூக்களை தலையில் வைப்பதை, தவிர்க்க வேண்டும். முல்லை, ரோஜா, போன்ற மலர்கள் நல்லது.

### பொட்டு

நெற்றியில் திலகமிடுவதன் மூலம் சில வகை தோஷங்கள் நீங்குவதாக சொல்கிறார்கள். சுமங்கலிகள் நெற்றியில் குங்குமமிடுவதோடு நேர் வகிட்டிலும் குங்குமம் வைக்க வேண்டும். தலை எழுத்தை மாற்றும் சக்தியே குங்குமத்துக்கு உண்டு என்று நம்புகிறார்கள்.

### மூக்குத்தி

தங்க மூக்குத்தி அணிந்தால், சுவாசிக்கும்போது காற்று தங்கத்தை தழுவிக் கொண்டு உடலுக்குள் வருகிறது. அதனால் சுவாச நோய் தடுக்கப்படும் என்கிறார்கள். மூக்குத்தி அணிபவர்கள் 10 முதல் இருபது வயதுக்கு இடையில் மூக்கு குத்திக் கொள்ள வேண்டும்.

### கண் மை

கண்ணுக்கு அழகை கண்மை தருகிறது. கூடவே கண்ணுக்கு குளிர்ச்சியைத் தந்து, கண் பார்வை சக்தியை அதிகப்படுத்துகிறது.

### வளையல்

திருமணமான பெண்கள் வளையல் அணிவதற்கும், இளம் பெண்கள் வளையல் அணிவதற்கும் வேறுபாடுகள் உள்ளன. திருமணமான பெண்கள் கணவனையே வளைய வளைய வர வளையல் நினைவு படுத்தும். கடும் நிறத்திலுள்ள வளையல்கள் தோஷ பரிகாரம் கொண்டவை. சனி திசை பாதிப்பை தரும்போது பெண்கள் நீல நிற வளையல் அணிந்தால், தோஷத்தின் கடுமை குறையும்.

### மிஞ்சி

திருமணமான பெண்கள் மிஞ்சி அணிவார்கள். அதை காலின் இரண்டாவது விரலில் மட்டுமே அணிய வேண்டும். இரண்டாவது விரலில் மிஞ்சி அணிவதால் கர்ப்பப்பை பலமடையும் என்கிறார்கள்.

S.வேணுகா

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்

10

இன்று கஸ்தூரியோ, விபர மறியாத இரு செல்வங்களுடனும் வயிற்றில் வளரும் குழந்தையுடனும் செல்கிறாள். அவளுக்கு அந்த நாடு இருக்கும் திக்கும் தெரியாது, திசையும் தெரியாது. 'கணவன் முன்னால் நடந்தால், மனைவி பின்னால் நடக்கவேண்டும்', என்று மட்டும் அறிந்திருந்தாள் அவள்.

போகும் இடத்திற்குப் பொருத்தமான 'வேஷம்' போட்டாக வேண்டுமே! வெள்ளையர் மத்தியில் மதிப்புடன் வாழ வேண்டுமானால், அவர்களிடம் மரியாதை பெற வேண்டுமானால், மேனாட்டு உடைதான் அணிய வேண்டும் என்று தீர்மானித்தார் மோகன்தாஸ் காந்தி.

கணவர் சொல்லி விட்டார், உண்மைதான். ஆனால் கஸ்தூரியால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நாட்டின் பண்பையே பழிக்கும் நாகரீகம் வேண்டாம் என்று மேனாட்டு மோகம் கொண்ட கணவரிடம் மன்றாடினாள். மனைவிக்கு மந்திரியின் பொறுப்பும் உண்டு என்று அவள் உணர்வு கூறிற்று. அதனால் அப்படி சொன்னாள்.

அவள் சொல்லுவதில் அர்த்தம் இருக்கிறது என்று காந்திக்குத் தோன்றவே, 'பார்ஸீகள் அணிவது மாதிரியாவது சேலை கட்டிக் கொள்ள வேண்டும்' என உத்தரவு போட்டார். நீளக் கைச்சட்டை அணிந்து கொள்ள வேண்டும், காலில் பூட்ஸ் போட்டுக் கொள்ள வேண்டும்' என்னும் கட்டாயப் படுத்தினார்.

கஸ்தூரி முணு முணுத்தாள்.

காந்தி முறைத்துப் பார்த்தார்.

''அப்பப்பா? எத்தனை கண்டிப்பு! எத்தனை மன உறுதி? எத்தனை பிடிவாதம். மூன்றாண்டுகளில் எப்படியெல்லாம் மாறி விட்டார் இவர்.''

இரண்டு கப்பல்கள் தென்னாப்பிரிக்காவை நோக்கிப் புறப்பட்டன. காந்தியின் குடும்பத்துடன் எண்ணூறு இந்தியர்களும் பிரயாணம் செய்தார்கள். அத்தனை பேரும் பிழைப்பைத் தேடிப் போகும் 'கூலிகள்'. அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு ஆசாமியை மட்டும் கண்டு கஸ்தூரி திகிலடைந்தாள். ''ஐயோ இந்தப் பாவி ஏன் வருகிறான்?'' என்று வேதனைப்பட்டாள். அவன் வேறுயாருமல்ல. பள்ளியில் படிக்கும் போது காந்தியைத் தீய வழிகளில் அழைத்துச் சென்று கெடுக்கப் பார்த்தானே, அந்தப் பழைய போக்கிரி மேத்தாதான்! ''அவன் பிழைப்பைத் தேடிப் போகிறானோ, அல்லது யார் பிழைப்பையாவது கெடுக்கப் போகிறானோ, யார் கண்டது?''

கடல் பிரயாணம் கஸ்தூரிக்கு ஒத்துக் கொள்ளவில்லை. கருவுற்றிருந்த நிலையில் அவள் குடல் குமட்டியது. காலைப்பற்றிக் கொண்டிருந்த பூட்ஸ் வேறு கடித்தது. நரக வேதனைதான்! சிறுவர்களுக்கோ ஒரே குதூகலம். எல்லாம் புது அனுபவம். பாவம், அவர்களுடைய பிஞ்சுக் கால்களையும் பூட்ஸ் கடித்தது. கழற்றி வைத்தாலோ தந்தை கடிந்து கொண்டார்.

ஒருநாள் கடல் கொந்தளித்தது. சூறாவளியொன்று சுழன்று சுழன்று பேயாட்டம் ஆடியது. நடுக்கடலில் கப்பல் நடுங்கியது. 'கவிழ்ந்து விடுவோமோ' என்று கதி கலங்கிய பிரயாணிகள், கடவுளின் கருணைக்காகக் காத்து நின்றனர்.

கடவுள் கண் திறந்தார். இருபத்து நான்குமணி நேரம் இடைவிடாமல் அடித்துவிட்டு ஓய்ந்தது புயல். 'எதற்கு இந்தப் புயல் வீசியது? இது ஓர் அபசகுனமோ?'' இது கஸ்தூரியின் கவலை. வரப் போகும் புயலுக்கு இது ஓர் அறிகுறி என்று அவளுக்கு எப்படித் தெரியும்?

பதினெட்டு நாட்கள் பிரயாணத்திற்குப் பிறகு இரு கப்பல்களும் நேட்டால் போய்ச் சேர்ந்தன. ஆனால் டர்பன் துறைமுகத்தில் அவற்றை நுழைய விடவில்லை அதிகார வர்க்கம். புறப்படும்போது பம்பாயில் 'ப்ளேக்' நோய் பரவியிருந்ததால், கப்பல்கள் ஐந்து நாட்கள் வெளியே நிற்கவேண்டும் என்று உத்தரவு வந்தது. ஆனால் நாட்கள் தான் நகர்ந்தன. கப்பல்கள் நகரவில்லை. கஸ்தூரி கணவன் முகத்தைப் பார்த்தாள். அது கவலையுற்றிருந்ததை மட்டும் கவனித்தாள். அதன் காரணத்தை அவளால் அறிய முடியவில்லை.

யார் யாரோ வந்து காந்தியிடம் ஏதேதோ பேசிவிட்டுப் போனார்கள். அவர்கள் பேசிய மொழி அவளுக்குப் புரியவில்லை. கேட்ட கேள்விக்கும் கணவரும் சரியாக பதில் சொல்லவில்லை. எப்படிச் சொல்லுவார்?. சொன்னால்தான் அவளுக்குப் புரியப் போகிறதா? தென்னாபிரிக்காவிலிருந்த வெள்ளையர் ஒன்றுகூடி ஒரு தீர்மானம் போட்டனர். காந்தியின் குடும்பமும் மற்ற பிரயாணிகளும் தங்கள் நாட்டில் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று சர்க்காரிடம் கண்டிப்பாகத் தெரிவித்து விட்டனர்.

''காந்தி நம் விரோதி. நமக்கு எதிராக இந்தியாவில் தீவிரப் பிரசாரம் செய்திருக்கிறார். நம்மை ஒழித்துக் கட்டக்கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். அதற்காகவே நிறைய இந்தியரை அழைத்து வந்து இங்கே குடியேற்றுவதற்கு சதி செய்கிறார். அவர்கள் எல்லோரும் திரும்பிப் போக வேண்டும். இல்லையென்றால் எல்லாரையும் தூக்கிக் கடலில் எறிந்து விடுவோம்!'' நிறவெறி பிடித்தவர்கள் நிலை தடுமாறிப் பேசினர். அதற்கு வெள்ளையரின் துரைத்தனமும் துணை நின்றது.

கப்பல்களின் சொந்தக்காரர் ஓர் இந்திய முஸ்லீம். 'திரும்பிப் போக மாட்டோம்' என்று பதில் அனுப்பி விட்டார் அவர். பிரயாணிகளும் 'இறங்கியே தீருவோம்' என்று பிடிவாதமாக இருந்தனர். காந்தி இருக்கும்போது அவர்களுக்கென்ன பயம்?

இருபத்து மூன்று நாட்கள் உறுதி குலையாமல் நின்றனர். அதிகார வர்க்கத்தின் ஆணவம் ஆட்டம் கொடுத்தது. கடைசியில் அது இறங்கி வந்தது. கப்பலில் இருந்தவர்களும் இறங்க ஆரம்பித்தனர்.

ஒரு வெள்ளைக்காரர் வந்து காந்தியின் காதில் ஏதோ ரகசியம் பேசினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கஸ்தூரிக்கு எல்லாமே மர்மமாக இருந்தது. அவளுக்குக் களைப்பு ஒரு புறம். மனக் கவலை மறுபுறம். தன்னிடமிருந்து எதையோ கணவர் மறைக்கிறார் என்பது தெரிந்தது. அதற்கு மேல் ஒன்றும் புரியவில்லை. காந்தி அவள் அருகில் வந்தார்.

''கஸ்தூரி, நீயும் குழந்தைகளும் ரிக்ஷாவில் போங்கள். என் நண்பர் ருஸ்தும்ஜியின் வீட்டில் நீங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். நான் பிறகு வருகிறேன்.''

''ஏன் நீங்களும் எங்களுடன் வருவதுதானே. புது இடமாயிற்றே. தனியாகப் போவதற்கு..........

''அதெல்லாம் ஒரு பயமில்லை. நல்ல துணையாக அனுப்புகிறேன். ருஸ்தும்ஜியும் அவர் மனைவியும் தங்கமானவர்கள். நீ போ உன் பின்னாலேயே வருகிறேன்........''

''சீக்கிரம் வந்து விடுகிறீர்களா?''

''வருகிறேன், போ....''

கஸ்தூரி ஹரிலாலையும், மணிலாலையும் அழைத்துக் கொண்டு ஒரு ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்தாள். பின்னால் கணவர் வருகிறாரா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தாள்.

கப்பலை விட்டு இறங்கிய காந்தி ஒரு வெள்ளைக்கார பாரிஸ்டர் நண்பருடன் வீதியில் நடந்து வந்தார். மாலை மணி நாலரை இருக்கும் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. அந்த் அரைகுறை இருளில் காந்தியின் தலைப்பாகையை நான்கு ஐந்து சிறுவர்கள் அடையாளம் கண்டு பிடித்து விட்டார்கள்.



''இதோடா காந்தி, அடிடா, உதைடா'' என்று கூச்சலிட்டார்கள். சிறு கூழாங்கற்களை எடுத்து அடித்தார்கள். மள மளவென்று பெருங் கூட்டம் ஒன்று கூடி விட்டது. பெரிய கற்களாக வந்து விழுந்தன. முட்டைகள் பறந்தன. பாரிஸ்டர் ஒரு ரிக்ஷாவை கூப்பிட்டார். ரிக்ஷாவை இழுத்தவன் ஒரு நீக்ரோ. ''காந்திக்கு ரிக்ஷாவை இழுத்தால் நீ ஒழிந்தாய்'' என்று பயமுறுத்தி அவனைத் துரத்தி விட்டது அந்த ஆவேசக் கூட்டம். திரும்பிப் பார்த்தார் காந்தி. பாரிஸ்டரையும் காணோம். அவரையும் எங்கோ இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

காந்தி தனியாக விடப்பட்டார். அவர் தலைப்பாகையைப் பிடித்து வீதியில் புரட்டினான் புன்மதி படைத்த ஒருவன். வெறி தலைக்கேறியிருந்த ஒரு வெள்ளையன் ஓங்கி காந்தியின் முகத்தில் அறைந்தான். அவனைத் தொடர்ந்து பல கைகள் 'பளார் பளார்' என்று அவரைத் தாக்கின. புட்லிபாய் பெற்று வளர்த்த பொன்மேனி புண்ணாகியது. உடல் பூராகவும் ஊமைக் காயங்கள்.

உடலில் பட்ட ஒவ்வொரு அடியும் அவர் உள்ளத்தை உறுதியாக்கிக் கொண்டிருந்தது. அடித்தவர்களை அவர் தூற்றவில்லை. அவர்கள் அறியாமையைக் கண்டு வருந்தினார். அன்பு மலர்ந்தது, அகிம்சை பிறந்தது, ஆன்மா உயர்ந்தது!

''பரமண்டலத்திலிருக்கும் பிதாவே அவர்களை மன்னித்து விடு. பாவம், தாங்கள் என்ன செய்கிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது'' என்று தெய்வ மகன் ஏசுநாதர் அன்று கூறியது போலவே தான் இன்று காந்தியும் கூறினார். அவருக்கு எங்கெங்கோ வலித்தது. கழுத்தில் இருந்த துளசி மாலையை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அதை அணிவித்த அன்னையின் நினைவு வந்தது. 'அம்மா' ......என்றார்.

''இன்னும் உயிர் இருக்கிறது. போடுங்களடா'' என்று ஒரு மிருகம் உறுமிற்று. மறு நிமிடம் பேரிடி ஒன்று தாக்கியது போல் அவர் நெஞ்சில் ஒரு குத்து விழுந்தது.

அவர் கண்கள் இருண்டன. சுற்றிச் சுழன்று, சுருண்டு தரையில் விழப் போனவர் ஒரு வீட்டின் சுவரின் மீது அப்படியே சாய்ந்தார். அங்கிருந்த இரும்புக் கிராதியை கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். கொலையுண்டாலும் கொண்ட கொள்கையை விடமாட்டேன் என்று காட்டுவதே போல.

வீதியில் கணவர் மூர்ச்சையான நிலையில் கிடந்தார். வீட்டில் கணவரைக் காணோமே என்று கஸ்தூரி துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள். யாரிடம் கேட்டாலும் ஒரு விபரமும் தெரியவில்லை அவளுக்கு. தன் நினைவுக்கு வந்த தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள். ''ஸ்ரீ ராமா, என்னைக் கை விட்டு விடாதே! என் கணவர் பரமசாது. அவரை ஒரு தீங்கும் தீண்டாமல் பார்த்துக்கொள். எனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு உன் திருநாமத்தையே சூட்டுகிறேன்'' என்று துயரத்தில் தோய்ந்திருந்த அவள் நெஞ்சம் தொழுதது.

தாய்க்குலம் கண்ணீர் விட்டால் பெண்ணினம் பொறுத்துக் கொண்டிருக்குமா? காந்தி மூர்ச்சையாகிக் கிடந்த அவ்வேளையில் அங்கு எதிர்பாராமல் வந்து சேர்ந்தாள் பொலீஸ் அதிகாரியின் மனைவி திருமதி அலெக்ஸாண்டர். அவளைக் கண்டதும் கூட்டம் மறைந்து விட்டது. ''ஐயோ'' என்று அலறியவள், காந்தியைத் தூக்கிப் பிடித்து, மயக்கத்தைத் தெளிய வைத்து. பொலீசுக்குத் தகவல் கொடுத்தாள். அவர்கள் பாதுகாப்பில் மெள்ள வீடு வந்து சேர்ந்தார் காந்தி.

உருக்குலைந்து, உடலில் ரத்தம் கசிய உள்ளே நுழைந்தவர் அப்படியே அங்கிருந்த கட்டிலில் சாய்ந்து விட்டார். 'நான் பயந்தபடியே நடந்து விட்டதே' என்று பதறிப் போன கஸ்தூரி ஓடோடியும் வந்தாள்.

''ஐயோ'' இதென்ன அநியாயம்? உங்களுக்கு என்ன நேர்ந்தது? எந்தப் பாவிக்கு மனம் வந்தது உங்களைத் தொட்டு அடிக்க..........

'நீ உள்ளே போ, கஸ்தூரி. சாதாரண காயம் தான். யாரோ பயித்தியக்காரர்கள் அடித்து விட்டார்கள். அவர்களை ஒன்றும் சொல்லாதே! இதற்கெல்லாம் காரணம் நிறவெறி தான்! அதை முதலில் ஒழிக்க வேண்டும்...''

''நீங்கள் ஒன்றையும் ஒழிக்க வேண்டாம்! இங்கே பிழைக்கவும் வேண்டாம். உயிர் பிழைத்தால் போதும், கிளம்புங்கள். அடுத்த கப்பலிலேயே ராஜ்கோட்டுக்குப் போய்விடலாம்.

அதற்குள் பொலீஸ் அதிகாரி ஒருவர் உள்ளே நுழைந்தார். ''மிஸ்டர் காந்தி ஐயாம்ஸாரி! நீங்கள் ஒரு நிமிடம் கூட இந்த இடத்தில் இருக்கக் கூடாது. உடனே மாறுவேடம் போட்டுக் கொண்டு தப்பித்துக் கொள்ள வேண்டும். உங்கள் நன்மையைக் கருதிச் சொல்கிறேன்.''

''நானா? எதற்கு? அதெல்லாம் முடியாது. என்னைக் கோழை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?''

''இதோ பாருங்கள். நான் என் கடமையைச்செய்ய வந்திருக்கிறேன். வெளியே என்ன நடக்கிறது என்று இந்த ஜன்னல் வழியே பாருங்கள்.''

காந்தி போய்ப் பார்த்தார். அங்கு ஒரு பயங்கரக் கூட்டம் வீட்டைச் சூழ்ந்து கொண்டிருந்தது. கட்டையும், கல்லும், கத்தியும் தீவட்டியும் கைகளில் ஏந்தி காட்டுமிராண்டிகள் போல் காட்சியளித்தது அந்தக் காலிக் கூட்டம். ''கொண்டு வா காந்தியை! அவரை அடித்துக் கொல்லப் போகிறோம். அவர் வெளியே வராவிட்டால் இந்த வீட்டிற்கே தீ வைப்போம். இரண்டில் ஒன்று பார்த்து விட்டுத்தான் இன்று வீடு திரும்புவோம்'' என்ற கூக்குரல் எழுப்பிக் கொக்கரித்துக் கொண்டிருந்தார்கள். கொலைக்கும் அஞ்சாத அந்தக் கொடும்பாவிகள்!

''இப்போது சொல்லுங்கள் காந்தி. உங்கள் மனைவி மக்களின் உயிர் முக்கியமா? அல்லது உங்கள் கொள்கையும் கௌரவமும் முக்கியமா என்று கேட்டார் பொலீஸ் அதிகாரி.

காந்தி திரும்பிப் பார்த்தார். உள்ளே, கதவிற்குப் பின்னால் சித்தப் பிரமை பிடித்தவள் போல் சிலையாய் நின்று கொண்டிருந்தாள் கஸ்தூரி.

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### ஏன் இவ்வளவு பெத்தே?

பெரியார் ஈ.வெ.ரா பழைய குடியரசு இதழில் தாமே எழுதியிருந்த ஒரு தகவல் இது–

ஆபீசுக்கு எதிர்த்தாற் போல வீடு அவர்கள் நம் ஜாதி இல்லை. அவர்களுக்கும் எங்களுக்கும் ஒரு மாதிரியான முறை – அண்ணன் தம்பி – மாமன் மச்சான் என்று கூப்பிடுவோம்.

அந்த முறையில் எதிர் வீட்டுக்காரன் ஒருவன் எனக்கு மாப்பிள்ளையாக வேணும்'' அவன் மனைவிக்கு நான் அண்ணனாக வேணும்.

அவனுக்கு நாலு குழந்தைகள். கைக்குழந்தை வேறு. மனைவி வயிற்றிலும் ஒரு குழந்தை. கோபம் வந்தால் அவன் பெண்டாட்டியைப் போட்டு அடிப்பான். அவள் 'குய்யோ முறையோ' என அழுவாள்.

ஒரு தடவை அந்தப் பெண் என்னிடம் வந்து இவரிடம் நான் படும் அவஸ்த்தை கொஞ்சநஞ்சமில்லை. எங்காவது ஆத்திலோ குளத்திலோ விழுந்து செத்துப் போயிடலாம் என தோன்றுகிறது. இந்தக் குழந்தைகள் அனாதையாயிடுமே என்று தான் பார்க்கிறேன்' அப்படியென்றாள்.

இத்தனை குழந்தையையும் நீ ஏன் பெத்துகிட்டே? ஒன்று இரண்டோட நிறுத்தியிருக்கலாமே என கேட்டேன்.

''நான் பெத்துக்கிட்டேன், கடவுள் கொடுத்தார். கடவுள் கொடுத்ததை வேண்டாம் என்று சொல்ல நாம் யாரு'' என்று அவள் சொன்னாள்.

எனக்கு ஒரே சிரிப்பாகத்தான் வந்தது.

### கோடீசுவரத் தந்தையும் மகனும்!

ஒரு முறை அமெரிக்கக் கோடீசுவரரான ராக்பெல்லர் பிரான்சு நாட்டுக்குப் போயிருந்தார். பிரான்ஸில் உள்ள ஒரு பிரபல ஓட்டலுக்குச் சென்ற இராக்பெல்லர், ஓட்டல் நிர்வாகியைப் பார்த்து ''வசதிகள் சற்று குறைவாக இருந்தாலும் பரவாயில்லை மலிவான வாடகைக்கு ஒரு அறைகிடைக்குமா?'' என விசாரித்தார்.

வந்திருப்பவர் ராக்பெல்லர் என அறிந்ததும் ஓட்டல் அதிபர் வியப்படைந்தார். அவர் ராக்பெல்லரை நோக்கி ''ஐயா, தங்கள் மகன் இங்கு வரும்போதெல்லாம் எங்கள் ஹோட்டலில் அதிக வசதிகள் நிறைந்த அதிக வாடகையுள்ள அறையில் அல்லவா தங்குகிறார். தாங்களோ? மலிவான அறையைக் கேட்கிறீர்களே?'' எனக் கேட்டார்.

ராக்பெல்லர் சிரித்துக் கொண்டே ''ஐயா, என் மகனுக்கு கோடீசுவரரான ஒரு தந்தை இருக்கிறார். எனக்கு அப்படி ஒன்றுமில்லையே'' என்றார்.

### புகழ்வரத் தாமதமாகும்!

உலகப் புகழ்பெற்ற உருதுக்கவிஞரான இக்பால் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலம்.

இக்பால் அடிக்கடி வகுப்புக்குக் காலதாமதமாகவே வருவார்.

அன்று அவர் காலதாமதமாகவே வகுப்புக்கு வந்தார்.

வகுப்பு ஆசிரியர் அவரை நோக்கி, ''இக்பால் ஏன் எப்போதுமே காலதாமதமாகவே வருகிறாய்?'' என்று கோபத்தோடு கேட்டார்.

''இக்பால் எப்போதுமே தாமதமாகத்தான் வரும்'' என்று புன்னகையோடு பதிலளித்தார் மாணவர் இக்பால்.

இக்பால் என்ற உருதுச் சொல்லுக்கு 'புகழ்' என்று பொருள் உண்டு.

புகழ் ஏற்படுவதற்கு சற்று காலதாமதந்தான் ஆகும் என்ற கருத்தில் தான் இக்பால் அவ்வாறு மொழிந்தார். அவரது சொல்லாற்றலைக் கண்டு ஆசிரியர் வியந்தார்.

# மௌனத்தின் தேடல்கள்

## கனவுகள் கைகூடும்!

கையிலோ புத்தகமும், பேனாவும்
கண்ணிலோ ஏக்கமும், எதிர்பார்ப்பும்
குழந்தாய்.....!
கவலையை மறந்து கல்வியில்
கவனம் வை;
காலம் பதில் சொல்லும்,
கனவுகள் கைகூடும்.

*தி.துவாரகா*
*கொழும்புத்துறை*

## படியம்மா!

சென்னி நிமிர்த்தி சிந்திக்கும்
இளம் பிஞ்சே!
உன்னிப்பாய் படியம்மா
இல்லையேல் உன் வாழ்வில்
இருக்காது விடிவம்மா.

*கு.சிவநேசன்,*
*யாழ். பல்கலைக் கழகம்.*

## சிறகுவிரி சிட்டே!

தூக்கமிழந்த கண்கள்
துணிவிழந்த மனம்
ஏக்கம் எதற்கு
எழுதிவிடு உணர்வை.

யோ.இந்திரன்,
கோண்டாவில்.

## மிளிர்க!

நேற்றலர்ந்த இளம்பிஞ்சே
கற்பனை உணர்ச்சிதனைக்
கவிவரியில் வடிக்கின்ற
இளங்கவிஞர் வரிசையிலே
நீயும் 'ஒருத்தியா?
மிளிர்க என்றும்.

ச.நிரஞ்சனி,
சங்கத்தானை.

## விண்ணப்பம்!

தீர்க்கமான பார்வையுடன்
வெறிக்கும் மகவே!
யார் பறித்தார் சொந்தங்களை
ஆண்டவனுக் கென்றாலும்
அனுப்பு விண்ணப்பம்.

*சி.சுகிர்தா,*
வட்டுக்கோட்டை.

## போர்க்காலம்!

சோதரியே! உனக்கு
வேப்ப மர உச்சியிலே பேய்
என்று சொன்னது அந்தக் காலம்
வேப்ப மரத்தடியில் உன்
கல்விச்சாலை என்று சொல்வது
இந்தக் காலம்

*எஸ்.உமாகவி,*
*கல்வளை*

## தவிப்பு!

அன்புள்ள அம்மாவிற்கு,
கலங்கிய – என் கண்களின்
காத்திருப்பு
காலமெல்லாம் – உன்
முகம் பார்த்திருப்பு
முகவரியைத் தொலைத்த
என் வாழ்வில்
முகாரியின் வாசிப்பு
உதிரத்தில் நீ
வளர்த்த உயிர்ப்பூ
தினம் உனைக்காணா
சோகத்தில் தவிப்பு

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

## அத்திவாரம்!

நீ எழுதி நினைப்பது
வெறும் சொற்
கோலங்களையல்ல
உனது தலையெழுத்தை;
உனது வாழ்க்கையை.

ஞாநி,
யாழ்.பல்கலைக்கழகம்.



## பிஞ்சு மனதினிலே!

கண்ணிலே சோகம்
நெஞ்சிலே பாரம்
சின்னஞ் சிறு வயதினிலே
எண்ணுவது யாதோ?
பாரிலே கற்பதற்கு இன்னும்
விண்ணப்பம் கிடைக்க
வில்லையா?

*யே.அருண்,*
*நெடுந்தீவு மத்தி.*

## படித்துப் படியேறு பாலனே!

படித்துப்படியேற தடைக்குமேல் தடை உனக்கு
கணனித்திரையில் உலகம் படிக்கையிலே
கதிரையை மேசையாக்கி யோகி போல்
படிக்கிறாயோ!
வறுமையிலே நீ பொறுமையாய் படிப்பதால்
வளமான சிந்தனை உனக்கே உரிமையாய்!

மு.தவேந்திரன்,
சண்டிலிப்பாய்.

## பட்டத(டி)ாரி!

சோதரியே:
மரத்தின் கீழிருந்து
வேதனைகளோடு
சோதனைகள் பல
எழுதினாலும்
நீயும் நாளை
வேலையில்லா
பட்டத(டி)ாரி.

*எஸ்.கவிதரன்,*
*சண்டிலிப்பாய்.*

## படிப்பு!

ஏடு தொடக்கி வைத்து
இரு நாளில் இடம்பெயர்ந்து
வீடு தனை இழந்து
வீதிக்கு வந்த இவள்- மரக்
கூடு ஒன்றின் கீழ் -தமிழ்
குருவியெனப் படிக்கின்றாள்;
நாடு நலம் பெற்றால்
நைற்றிங்கேல் ஆகிடுவாள்.

*இ.குலசிங்கம்,*
*நயினாதீவு.*

## கவலைப் படாதே!

சிறுமியே எதை எண்ணி கலங்குகிறாய்
கவலைப்படாதே நடப்பது நடக்கட்டும்
படிப்பை விடாதே படிப்புத்தான் –உனக்கு
உற்ற தோழன் – நீ அவனுடன்
பழகு அவன் உன்னை – கை
விட மாட்டான்.

பா.தர்சினி,
கரணவாய் மத்தி.

## குமுறல்!

இதயக் குமுறல்களை
எழுத்தில் வடித்துவிட
எழுதுகோல் எடுத்து விட்டேன்
எழுத மறுக்கின்றன என் கைகள்

சி.றெஜிவேனியா,
நல்லூர்.

## தவறுகள்!

ஏய் சின்னப் பெண்ணே!
பேனா மையின் எழுத்து
மனித இதயத்தின் தவறுகளை
இனம் காட்டும் என்பதை
நீயும் புரிந்து கொண்டாயா?

*எம்.எக்ஸ்.சுதர்சன்,*
*துறையூர்.*

## எழுதிவிடு!

எழுதுவதை இப்போதே
எழுதிவிடு பெண்ணே,
பின்னாளில் எழுதினால்
பெண்ணுக்கு என்ன
அடங்காத்தனமென்றெண்ணி
அடக்கிவிடுவார்கள் உன்னை.

*என்.கௌரி,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## எழுதிவிடு தேசத்தின் வரலாற்றை!

எழுதுகருவியை பிடித்து விட்டாய்
எழுதிவிடு கண்களில் தெரிவதை
எழுதிவிடு மனதில் தோன்றுவதை
எரியும் எம்தேசத்தின் வரலாற்றை நீ
உறுதியுடன் எழுதிக் காட்டிடு உலகிற்கு

என்.திருச்செல்லம்
சாவகச்சேரி.

## மலராத மொட்டு!

மலராத மொட்டொன்று
மௌனத்துள் புதையுண்டு
விலகாத சோகங்களை
விரக்தியுடன் அசை மீட்கிறதா?

சுபா,
திருநெல்வேலி

## அழியாச் செல்லம்!

யுத்தத்தின் கொடூரத்தால்
அழிக்க முடியா செல்வம்
கல்வி என உணர்ந்துகிறாள்.
இந்தச் சிறுமி.

ந.தாபரன்.
காரைநகர்.

## இழக்க மாட்டோம்!

தரை மட்டங்களாயின் பள்ளி கூடங்கள்
தகர்ந்தன தளபாடங்கள் -ஆயினும்
இழக்க மாட்டோம் தன்னம்பிக்கையை
இழக்கமாட்டோம் எம் கல்வி என்பதை
நிரூபிக்கிறாள் இச்சிறுமி
நிச்சயம் உயர்வாள் இவள்!

*சி.சுரேந்திரன்,*
*நல்லூர்.*

## நீ சொல் என்ன எழுத!

விதியின் கொடுமையை நினைத்து எழுதவா
மதி இழந்து என் பெற்றோரை நினைத்து எழுதவா
கதி கலங்கி நிற்கும் என் நிலையை எண்ணி
எழுதவா
நிதி வேண்டுமென்று நீதியை நிலை நாட்டி
எழுதவா
மதிப்பிட முடியாத சங்கு நாதமே - நீ சொல்
என்ன எழுத?

*சி.ஆரணி,*
*நல்லூர்.*

## கல்வி!

பிஞ்சு வயதினிலே
உறவினரை பிரிந்த சோகம்
பசுமரத்தாணி போல
உன்மனதில் பதிந்ததனால்
கரத்தில் பேனா இருந்தும்
படிக்க மனம் விரும்பாததை
உன்கண்கள்
சொல்லுகின்றதே.

S.ராஜன்,
அல்வாய்.

## சாதனை!

குப்பையிலும் மங்காது குண்டுமணி
வறுமையிலும் சாகாது உன் கல்விவழி
உள்ளத்து உணர்வுகளைக்
கிள்ளித் தெளித்திடும்
எழுது கோல் உன் ஆயுதம்
என்று இவ்வுலகில் சாதனை
படைத்திடு பெண்ணே!

D.மேரின் மரிற்றா,
யா.க.ம.வித்தியாலயம்.

## நம்பியிரு!

ஒளி மிகுந்த எதிர்காலம்
தெரிகிறதா பிஞ்சே
உறுதியுடன் படி
உன் வாழ்வுயரப் பாடுபடு
துன்பம் மற
துலங்கட்டும்
உன் எதிர்காலம்!


S.துஜானி,
திருநெல்வேலி.

## எழுதுகின்றேன்!

தூக்கத்தை
தொலைத்து
ஏக்கத்தைச் சுமந்து
எழுதுகின்றேன்.......
கடிதமல்ல போரினால்
சிதைந்து போன.....என்
கனவுகளை.

எஸ்.மதி.
அல்வாய்.மேற்கு

## மௌனத்தின் தேடல்கள் – 11



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 17.05.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் – 10
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## இழப்பு!

பெற்றோரை இழந்தாய்
உற்றாரை இழந்தாய்
ஆனால் குழந்தாய் நீ
கல்வியை இழக்கவில்லை
அதனால்
உன் வாழ்வு சிறக்குமடி.

*அ.அமெண்டா.*
*சுன்னாகம்.*

## எதிர்காலம் உன் கையில்!

எதைத் தேடுகிறாய்
மகளே..........
கைதவறிப் போன
கடந்த காலத்தையா?
தெளிவாய்த் தெரியா
நிகழ்காலத்தையா?
கனவில் தெரியும்
எதிர்காலத்தையா?
அஞ்சாதே
கற்கின்ற கல்வி
ஒரு நாளும் கைவிடாது
உறுதியுடன் உழை
எதிர்காலம்
உன் கையில்.

*R.மதுவந்தி,*
*நல்லூர்.*

## சிந்தனைச் சிதறல்!

எதை எழுதுவது?
எவ்விதம் எழுதுவது?
இடம் பெயர்வில்
அநாதையான உன் கதையை
வடிக்கையிலே
சிறுமியே உன் –
எழுது கோலில் மை
முடிந்து விட்டதென்ற கவலையா?
உனக்கு

*செ.அச்சுதன்,*
*கொழும்புத்துறை.*

## உணர்வுகள்!

எங்களின்
உணர்வுகளை
எழுத்துருவில்
தந்தாலும்
புரியுமா?
உங்களுக்கு!

க.ஆருஷா,
கந்தர்மடம்.

## துன்ப வாழ்வு!

துள்ளித்திரியும் காலங்கள்
தொலைக்கப்பட்டதை எண்ணி நீயும்
தொலைந்து போன வாழ்வை தினம்
தூரிகை கொண்டு எழுதுகிறாயா?

*J.T.P.*
*நல்லூர்.*

## நீதி கேட்டு........!

கதிரையில் வைத்து
காகிதம் தீட்ட
கண்ணே!உன் விழிகளில்
ஏன் இந்த அவசரம்
சிறார்களுக்கேற்படும்
துஷ்பிரயோகத்தை
உலகுக்கு காட்டவா?

*ஆ.வாகினி*
*உரும்பிராய்.*

## எதை எழுத!

கண்கள் எழுதுகின்றன
கரும்போட்டில்
கை எழுதுகின்றது காகித ஏட்டில்
எதை எழுதுவேன் என்பாட்டில்...?

*கோ.சுரேச்ன்,*
*தம்பளையூர்.*

# கவிதைக் கலசம்




## தொலைந்ததடா தமிழர் பண்பு!

தொலைக்காட்சிப் பெட்டியாலே
தொலைந்ததடா தமிழர் பண்பு
குறுஞ் சினிமா காட்சி யெங்கும்
விறு விறுப்பாய் மின்னலாச்சு
சாலையோர கொட்டகைக்குள்
வாலைகள் கூட்டம் மொய்த்து
தசை நெரிவுக் காட்சி கண்டு
திசை மாறி தியங்கலாச்சு
வேலையொன்றும் தெரியாத மூடரை
வேலையேதும் இல்லா வீணர்
காலை தொட்டதி காலை வரை
கலைக் கொலையிலே தான் கண்
நறுக்கி விட்ட கொடியின் வடுவை
மறுப்பே இன்றி திரையில் காட்டும்
சிறுக்கியர் இடையை வருட
பொறுக்கி எடுத்த நாயகரை
அப்பனோடு ஆச்சி பெத்த
பிள்ளை குட்டி சந்தானம்
ஒப்புடனே கூடிக் குந்தி
வெட்கமின்றி பார்க்குதையோ
முட்டி மோதும் ரசிகர் கூட்டம்
எட்டியெட்டி நோக்குதையா
கட்டிக்காத்த விழுமியங்கள்
பெட்டியாலே போச்சுதையோ
தமிழுக்கு அமுதென்று பேர்
மனுக் குலத்துக்கு சினிமா வீண்
நல்லதை வெளியே தள்ளி
கழிவை ஏந்தி வைத்திருக்கும்
வடி கட்டி போலிந்த
மனுக் குலம் பாழாய் போச்சு.

தி.தவநாதன்,
கவிஞர் மூளாயூர்

## காதல்!

இரு இதயங்களின்
சங்கமிப்பில் உருவாகும்
மகிழ்ச்சிப் பரிமாற்றம்
காதல்!

இரு இதயங்களின்
பாசப் பிணைப்பு
காதல்!

ஒருவர் விழிகளை
ஒருவர் பார்க்கும்
கண்ணாடி,
காதல்!

விழிகளில் சுமை ஏந்தி
கனவுகளில் நனவுலகை
காணுதல்,
காதல்!

துன்ப வெளியை
கடக்க உதவும்
இன்பப்பாலம்



காதல்!

இருமனங்களின்
புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்
கைச்சாத்திடப் படும்
உடன்படிக்கை
காதல்!

ஒருவருக் கொருவர்
கருத்தொருமித்து
கைப்பிடித்தால் - அது
கலியாணம்!

ஒருவரை விட்டு
ஒருவர் பிரிந்து
விட்டால் - அது
காவியம்!

கலியாணம்
காவியம் - அது
காதலின்
இரு முகங்கள்

எம்.சுயன்

## கட்டையால்....!

உதட்டில் ஒரு கட்டை செருகி.....
குறங்கொள்ளிக் கட்டையால் அதைச் சுட்டு...
தினம் தினம் புகையைத் தள்ளி...
இந்தக் கட்டையை அசைக்கேலாது என்று
கொட்டம் பேச...
சுவாசக்கட்டை பழுதாக.....
ஆசுப்பத்திரிக் கட்டில் கட்டையில் படுக்க....
பலகட்டைகள் உனக்குப் பரிகாசமாய் பரிகாரம்
செய்ய....
இயலாமல் உன் கட்டையை விட்டு ஆவி போக.....



பெட்டியில் உன்கட்டை வீடுபோக
சுற்றமென்று பலகட்டைகள் கலங்கி அழ
உன் ஆண்கட்டைகள் உரல் கட்டையில்
சுண்ணம் இடிக்க...
சொந்தக் கட்டைகள் பந்தக் கட்டை பிடிக்க....
வாங்குக்கட்டையிலிருந்து பெட்டிக்
கட்டையை பாடைக் கட்டையில் வைக்க
மனைவிக்கட்டை படலைக்கட்டை
வரை வர.....
உன் கட்டையை வேலிக்கட்டையால்
பலகட்டைகள் சுடலைக்குக் கொண்டு
போக...
அடுக்கிய விறகுக்கட்டையில் பெட்டிக் கட்டையை
வைத்து....
மூடிக்கட்டையில் நெஞ்சாங்கட்டையையும்
வைத்து...
மூத்த கட்டை கொள்ளிக் கட்டையை
மண்டைக் கட்டையில் வைக்க....
கட்டையால் உன் கட்டை அழிந்து
போவதை உணராயோ...?

ந.வினோதரன்,
ஒட்டுவெளியூர்.

## கண்கள்



அடி பெண்ணே நான்
உன்னைக் காதலிக்கவில்லை
உன் பணத்தைக்
காதலிக்கவில்லை
உன் அழகைக்
காதலிக்கவில்லை
உன் இதயத்தைக் கூட
காதலிக்கவில்லை
நான் காதலித்தது
உன் கண்களை மட்டுமே.

ஆதி,
நாவலர் வீதி.

## வரமாய் வா!



எந்நாளும் எனை ஆள
நீ வேண்டும்...
கனிவான முகம் பார்த்து
நான் வாழவேண்டும்
நெருங்கிய நம் இதயம்
சேர வேண்டும்
என் விழியில் எப்போதும்
உனைக் காண வேண்டும்
விழி மூடித் துங்கினாலும்
கனவாக நீ வேண்டும்
மொத்தத்தில் நீ
வரமாக வரவேண்டும்.

செ.ஹேமலதா,
மருதடி வீதி.

## ஊமைக் கேள்விகளாய்.........!

காலை விடியும்
மழலை குளிக்கும்
இலைகள் குளிர்க்கும்
மாலை மயங்கும்-இத்தனைக்கும்
கதிரவன் காரணமானான்!

காலை நேர உணவை
காலை வாரிய பிள்ளை
பள்ளிமுடிந்து
துள்ளி ஓடிவந்த வேளை
''லஞ்ச்'' என்று சொல்லி
கஞ்சி கொடுத்தாள் அன்னை-
இத்தனைக்கும்
அப்பன் காரணமானான்!

காதலன் தற்கொலை!
காதலி தற்கொலை!-இங்கெல்லாம்
ஒருவர் மற்றவர்க்கும்
காரணமானார்!

விறகு வெட்டச் சென்றவர்
கால் இழந்தார்!
வீடு பார்க்கச் சென்றவர்
கோல் ஊன்றி வந்தார்!-இங்கு
எது நடப்பினும்
காரணங்கள் கண்ணெதிரே!
ஆனால்,
காவோலை விழ
குருத்தோலைகள் சிரிக்கும்
காலம் போய்
குருத்தோலைகள் விழ
காவோலைகள் சிலிர்க்கும்
கலியுகக் காலமாச்சு

கொலைகள் மலிந்து
தலைகள் உருண்டு விளையாடும்
இந்நாட்டு நிலைமைதான் என்ன?
ஊமைக் கேள்விபோல் - இன்றும்
விடைகள் இல்லாமல்!

எஸ்.எம்.எஸ்.ஷால்டர்,
சமரபாகு.

## தும்மல்!



மூக்கெனக் கரித்தபோது
தும்மலிற்காய் துடித்தேனடி
தும்மலும் வந்த பின்னே
என்னவள் நீ நினைத்தாய் - என
எண்ணியதே என் மனம்!

இ.பரணீதரன்
பண்ணாகம்.

## தொடங்கியஅன்றே..!

விநாடியாய் கழிந்த
விடுமுறை நாட்கள் இப்போ
விலங்காய் மாறி
வெறுப்பாய் கழிகிறது
அதே நான்தான்,
அதே விடுமுறைதான்,
அதே வாழ்வு தான்
ஆனால்,
இப்போது புதிதாக
என்னுள்ளே நீ



விடுமுறை முடிவதெப்போ?
நானுனைக் காண்பதெப்போ?
நாள்களை ஊதியிங்கு
நகர்த்தும் முறை தெரியின்
தொடங்கிய அன்றே
விடுமுறை முடிந்திருக்கும்.

குகப்பிரியா,
உடுவில்.

## இன்றைய அலுவலகங்கள்!




தொலைபேசி
மணி அழுகின்றது
சிற்றூழியர்
அலுவலகத்தை
மட்டும் - திறந்தபின்
சிற்றுண்டி அகத்தில்
காலை 9.00 மணிக்கு
கடலை உண்கின்றார்...?
அதிகாரிகளும்
எழுதுநர்களும்
குளியலறைகளிலும்
குசினிகளிலும்
பூபாளம் பாடிட
பொது மக்களோ?
வெறும் கதிரைகளுடனும்
வெறும் மேசைகளுடனும்
கதைத்துவிட்டு
காலை 10.30 மணிக்கு
வீடு திரும்பும் நேரத்தில்
ஒரு அதிகாரி
அலுவலகப் பையுடன்
உள்ளே நுழைகின்றார்
எனினும்
சூரியன்
உதிக்க மறந்தாலும்
இவர்கட்கு
அரசு
மாதம் மறக்காமல்
பொதுமக்கள் பணத்தை
சம்பளமாக வழங்குகின்றது.

மாதுங்கன்

## நாளை விடியுமென...!

நாங்கள்
மனிதஜாதி என்பதை
மறந்து விட்டீர்கள்
வாழ்க்கையின் 'சுவையான'
பகுதிகளெல்லாம்
உங்களுக்கு மட்டுமே!
வறுமையின் வலி
கண்ணீரின் உப்பு
சோகத்தின் வடு
மரணத்தின் சுவடு
அத்தனையும்
எங்களுக்குமட்டுமே
தெரியும்!! - ஒரு
சூரியனை தொலைத்துவிட்டு
இருட்டுக்குள்ளிருந்து நாம்
கதறி அழ - நீங்களோ
குப்பிவிளக்கை கொடுக்கக் கூட
குடும்ப அட்டை கேட்கிறீர்கள்
வாக்களித்த நமக்கு

இதுவொரு நல்ல பரிசு!



விளங்குகிறது
விநாடிக்கம்பி விடாமல்
சுற்றிக் கொண்டாலும்
மணிக்கம்பிதானே
மதிக்கப்படுகிறது!
போராடுவது வேர்கள்
புகழ்பெறுவது பூக்கள் என்ற பின்
நாங்கள் அழுது என்ன பயன்?
இந்த வானத்தின் கீழ் - நாம்
வசதியற்றவர் தாம்
இருந்தும் -
எங்கள் திசைகளை
அவர்கள் ஒவ்வொன்றாக எரித்தாலும்
இதோ நாம் இப்போதும்
கைகளை உயர்த்தி
காப்பாற்றிக் கொண்டிருப்பது

கிழக்கை!!

என். தனுசுஜன்,
சண்டிலிப்பாய்.

## என்னால் முடியவில்லை!

உன் நினைவின்றி
என் நாட்கள்
நகர்வதில்லை...
உன்னைப் பார்க்காமல்
என் கண்கள்
உறங்குவதில்லை...
உன் பெயர் சொல்ல
என் வாய்
மறந்ததில்லை
உன்னைக்
காண்கையிலே
கண்களை நான்
இமைத்ததில்லை...
ஆனால் இன்னும்
உன்னிடம் என்
உள்ளத்தை
சொல்லத்தான்
முடியவில்லை...!

R. சிறீ,
கழியூரம்.

# விடியலுக்காக...!

கதிரவனின் இளங்கீற்றுக்கள் பூமித்தாயின் மடியிலே தவழ்ந்து விளையாடத் தொடங்கின. என் மனதைப் போலவே இருண்டிருந்த அறையிலே ஒரு சிறிய ஒற்றை ஜன்னல் ஊடாக ஒளி பாயத் தொடங்கியது. அந்த இளங்காலை வெயில் கூட மேனியை சுடுவது போலிருந்தது. கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்க்கிறேன். ஏழு மணி ஆகிக் கொண்டிருந்தது. அந்தக் கடிகார முட்கள் கூட சோபையிழந்து மெதுவாக நகர்வது போல இருந்தது. "எழும்பி என்னத்தைச் சாதிக்கப் போகிறம்.." மனதிற்குள் எரிச்சலாக இருந்தது. சிரமப்பட்டு எழும்பிவிடுக்க முயல்கிறேன் ஆனாலும் சிரமங்களே தோற்றுப் போக மீண்டும் போர்வைக்குள் முடங்கிக் கொண்டேன்.

எட்டரைக்கு "கோல்" எடுக்கிறதா ஷியாம் சொல்லியிருந்தது நினைவிற்கு வந்தது. பாரிப் போய்விட்ட என் வாழ்க் கையிலே .நீர் தெளிக்கும் ஒரே பொருள் விடயம் இதுதான். ஒவ்வொரு கிழமையும் ஒரு அரை மணித்தியாலம் தொலைவிலிருந்து கேட்கும் ஷியாமின் குரலோசையில்தான் என். வாழ்வே தங்கியிருக்கிறது. முகம் கூடத் தெரியாத அந்தப் புது உறவின் மீது வைத்த நம்பிக்கையில் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்கிறது. அலைகளால் அரிபட்ட மணல் போல என் மனத்தின் மூலையிலும் ஏ அரிப்பு....! காத்திருப்பு என்பது எதற்காக இருந்தாலும் அவஸ்தை தருவது என்பதை உணர்ந்து அனுபவித்தவள் நான். இளமைக் காலத்து இனிய பொழுதுகள் கூட ரம்மியமாகத் தான் கரைந்திருந்தது. நினைக்கும் போதே சர்க்கரை சாப்பிட்டது போல இருக்கும் என் வீட்டு வாழ்க்கை... மனம் ஊமையாக அழுதது. கண்களை இறுக மூடிக் கொள்கிறேன். வாழ்க்கைப் புத்தகத்தின் பக்கங்கள் தானாக முன் நோக்கி நகர்கின்றன. சுருக்கம் விழுந்த முகத்தின் ஊடாகத் தெரியும் அம்மாவின் கருணைப் பார்வை... வட்டக் கருவிழிகளும் பட்டுக் கன்னங்களுமாகத் துள்ளித் திரியும் தங்கையின் துடிதுடிப்பு தோட்டத்தில் கிடைத்த சிறிய வருவாயில் நான்கு வயிறுகளுக்கு உணவு தந்து காத்த அப்பா....! அப்பாவை நினைக்க இதயம் இரண்டாக வெடித்துப் போனது. "என்ர தோட்டம்... இளங் காற்றைத் தந்து தலையசைத்து நிற்கும் பசுமையான வாழைத் தோட்டம், தோட்டத்து மண்ணில் புதைந்து கிடக்கின்ற மணங்களும் ரகசியங்களும். அனுபவித்துப் பார்க்கிறவனுக்குத்தான் புரியும்..." அப்பா எவ்வளவு பெருமையாகச் சொல்லுவார். ஆனால் தோட்டத்து மண்ணில் புதைந்து கிடந்த மிதி வெடிதான் அவர் வாழ்வையே முடமாக்கி விடும் என்று அவர் கனவிலும் நினைத்திருக்க மாட்டார். வீட்டுக்கு சுமையாகிப் போய் முடங்கிக் கிடக்கும் அம்மாவையும் அப்பாவையும் பார்த்தால் மனதிற்கு வேதனையாக இருக்கும்.



இதனை விட எதிர்காலம் என்ற பெரிய பாறையின் முன்னே தவழ்ந்து கொண்டிருக்கும் தங்கையின் வாழ்க்கையும் என்னை காற்றுக்குத் தலையசைக்கும் மரந்தைப் போல் அனைத்திற்கும் தலையசைக்க வைத்து விட்டது.

என் வீட்டு முற்றத்தில் நின்ற என் பிரியமான பவள மல்லிக் கொடிகள், காதல் கதை சொல்லும் பல வண்ண றோஜாக்கள்... அவற்றுக்கிடையில் வட்டமிட்டுத் திரியும் பட்டாம் பூச்சிகள்... என் மேனியை மட்டுமல்ல மனதைக் கூட சிலிர்க்க வைக்கும் என் தாயகக் காற்றின் வருடல்கள்... இதயத்தைத் தொடும் பிள்ளையார் கோவில் மணியோசை...... இவையனைத்தையும் தொலைத்து விட்டு கால் நீட்டக் கூட இடமில்லாத ஒரு கூட்டுக்குள் அடைபடச் சம்மதமின்றி சம்மதிக்க வேண்டியதாயிற்று. பெற்றோரின் எதிர்பார்ப்புக்களுக்காக, தங்கையின் விடியலிற்காக என் கல்விக் கடலுக்கு அணை போட்டு இலட்சிய கனவுகளுக்கு விடை கொடுத்து என்னையே உருக்கிக் கொள்ள தயாராகிக் கொண்டேன் வெளிநாட்டுச் சம்பந்தம் என்று வந்த சர்வதேச வர்த்தகத்தில் நான் கூட ஏற்றுமதிப் பொருளாகி விட்டதை நினைக்க இதயம் சுடுகிறது. என் தாய் மண்ணின் சுகத்திற்குள் இறுகப் பிணைக்கப்பட்டிருந்த நான் இன்று அவற்றையெல்லாம் உடைத்துக் கொண்டு கொழும்பு நகரக் காற்றைச் சுவாசிக்க முடியாமல் சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்.

"பட்டப்படிப்பு பனங்கொட்டை நடக்கூட உதவாது" உற்றார், உறவினர் சொல்லியது என் நினைவுக்கு வந்து மீண்டது; கண்கள் கசிந்தன. அனைவரினதும் கட்டாயத்தின் பெயரில் என் மனதைக் கல்லாக்கிக் கொண்டு வீட்டிலே சுமையாக அன்றி சுமைதாங்கியாய் உருமாற ஊரோ உறவோ தெரியாத வெளிநாட்டுச் சம்பந்தத்திற்கு செவி சாய்த்துக் கொண்டேன். கால்களை இழந்த அப்பா... கண்களில் பார்வை மங்கிப் போன அம்மா... கல்விக் கடலில் கால் தைத்திருக்கும் தங்கை... இவர்களுக்காக என் இதயக் கனவுகளை.... நான் கட்டி வைத்த கற்பனைக் கோபுரங்களைத் தகர்த்து கொழும்பு நகரின்

**சிறுகதை**

ஒரு சிறிய அறைக்குள்... காற்றுக் கூட தங்கி நிற்க இடமில்லாத இருட்டுக் குகைக்குள் அடைபட்டுப் போயிருக்கிறேன். இன்றைக்கு, நாளைக்கு என ஏமாற்றிக் கொண்டிருக்கும் "எம்பசி" அலுவலர்களுடன் போராடுவதும் வாரத்திற்கு ஒரு முறை ஷியாமின் குரல் கேட்க ஏங்கித்தவிக்கும் பொழுதுகளாகவே நானும் வாழ்க்கையுடன் கிளித்தட்டுமறித்துக் கொண்டிருக்கிறேன்.

ஊரினையும், உறவுகளையும், உணர்வுகளையும் இதய பலூனுக்குள் அடைத்து வைத்துக் கொண்டு பறக்க விடவும் முடியாமல் சுருக்கி விடவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். முகம் தெரியாத ஷியாம் என்ற ஒருவரை நம்பி என் கண் முன்னே பெரிய பூதம் போல் பரந்திருக்கும் வெளிநாட்டு வாழ்க்கையில் காலடி வைப்பதை எண்ணிப்பார்க்க பயங்கரமாக மனம் கதறுகிறது. கொழும்பிலே கழிந்து விட்ட ஒரு வருட காலத்தில் ஷியாமைப் பற்றி நல்ல நம்பிக்கை வந்திருந்தாலும் ஒரு மனிதனை வெறும் பேச்சினை வைத்து எடை போடுவது சுலபமில்லைத்தானே. மனித மனங்களும் சுபாவங்களும் எத்தனை காலம் தான் நிலையாக இருக்குமோ என்ற பயம் அடிக்கடி வந்து பிடித்துக் கொள்ளும். பத்திரிகைகளும், தொலைக்காட்சி நாடகங்களும் பார்த்துப் பார்த்தே அத்தகையதொரு மனதினை சமுதாயம் எனக்குப் பெற்றுத் தந்து விட்டது.

"சீத்தா... சீத்தா" யாரோ கதவில் தட்டுவது கேட்கிறது. "சீத்தா உனக்கு. கோல்..." வீட்டுக்காரர் உச்ச ஸ்தாயியில் விளம்பரம் செய்வது கேட்டது. வில்லை விட்டு 'ஷர்' என்ற பாய்ந்த அம்பினைப் போல விரைந்து செல்கிறேன்.

" ஹலோ! நான் சீத்தா கதைக்கிறன்" அநேக நாள் தொலைபேசியில் கதைத்த அனுபவத்துடன் மெதுவாகச் சொன்னேன். சீத்தா நான் ஷியாம் கதைக்கிறேன். எப்படியிருக்கிறாய்... ஆவலாக விசாரித்தான். "எனக்கென்ன... இருக்கிறன் நீங்கள்.." நான் கேட்க அவர் அலுத்துக் கொண்டே "உனக்குத் தெரியும் தானே. சீத்தா வெளிநாட்டு வாழ்க்கைய்யப் பற்றி. இரவிரவா வேலை. இப்ப தான் வீட்ட வந்தனான் போன கிழமை செய்து வைச்ச சாப்பாடு பிரிட்ஜில இருக்கு. இனித்தான் சாப்பிட வேணும்." கவலையாச் சொன்னார். ஓ! இது எங்கள் மண்ணில் பிறந்த ஒவ்வொரு இளைஞனுக்கும் விதிக்கப்பட்ட சாபமோ? மனம் அங்கலாய்த்துக் கொண்டது. வாழ்க்கையை நினைக்க வெறுப்பாக இருந்தது. அரை மணித்தியால உரையாடலின் பின்னர் றிசீவரை வைத்து விட்டு வருகிறேன்.

**சி.நிருத்திகா**

இப்படி எத்தனை நாளைக்குத் தான் அவர் அங்கயும் அம்மாவை யாழ்ப்பாணத்திலயும் நான் இங்கேயுமா...? இது என்ன வாழ்க்கையோ......? "என்னைப் போல வாழ்க்கை வேற எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது" எந்த விதபிடிப்பும் இல்லாமல் ரேடியோவை "ஓண்" பண்ணினேன். "யாருக்காக.... இது யாருக்காக..." காலத்தால் அழியாத கானமாய் ஒலித்துக் கொண்டிருந்தது. சுவரிலே மோதிய பந்தினைப் போல மீண்டும் மீண்டும் வந்தடையும் சோக அலைகளை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. முடிவேதும் இல்லாமற் செல்லும் தொடர்கதையாய் வானத்து வளர்பிறையாய் வளரும் வேதனையை என்னுள்ளேயே அடக்கியபடி காத்திருக்கிறேன் ஒரு விடியலை நோக்கி........!

(முற்றும்)

# மாறிய மனம்

"நிகிதா...... கண்விழித்துப் பார் நான் நேகா வந்திருக்கிறேன்." என தனது நண்பியின் நிலை கண்டு கண்ணீர் விட்டபடி தோழியை வருடினாள்.

நிரந்தரமாக நித்திரை செய்ய இருந்தவளை பலரின் பெரும் முயற்சியினால் ஆபத்தான நிலையிலிருந்து ஓரளவு காப்பாற்ற முடிந்தது. இது கடவுள் செயல்.

ஆனால் அவள் மனநிலை என்ன நிலையில் இருக்கிறது என அறிய வாய்ப்பில்லை. தோழி நேகாவும் நிகிதாவும் சிறு வயது முதல் ஒன்றானவர்கள். தற்போது தோழியின் நிலைகண்டு அதிர்ந்து போனாள் நேகா. ஒரு நாளேனும் நிகிதா இப்படியான நிலையில் இருந்து எவரும் பார்த்ததில்லை. எப்பொழுதும் கலகலப்பாகவே இருப்பாள். குறும்புகள் நிறைய செய்தாலும் நிரந்தரமாக அவளிடம் கோபம் கொள்ள எவராலும் முடிவது இல்லை.

"நிகிதா... பிளீஸ் நிகி என்னைப்பார். நீ என்னை விட்டுப் போக நினைத்தால் நானும் உன் கூடவே வருவேன். என்னை விட்டு போகிறாயா நிகிதா."

நிகிதாவிற்கு மனதில் மெல்ல ஏதோ பட்டது ஒரு குரல் "ஓ..... இந்தக் குரல் நேகாவினுடையது" என்றவுடன் கண்விழிக்க நினைத்தாள் ஆனால் எல்லாமே இருட்டாக இருந்தது. நிகிதாவின் இமைகளின் அசைவைக் கண்ட நேகா மீண்டும், மீண்டும் அழைத்தாள். அவளின் அழைப்பு நிகிதாவை தட்டி எழுப்பியது. மெல்லக் கண் திறந்தாள் நிகிதா.

நாட்கள் பல வைத்திய சாலையிலேயே கழிந்தது. அவளின் அருகிலேயே இருந்து மனம் நோகாமல் கவனித்து வந்தாள் நேகா. தனது உயிர் தோழியின் மறுபிறப்பில் மிகவும் சந்தோசத்தில் துள்ளியவள் நேகாதான்.

எது எப்படி இருப்பினும் துன்பம் என வரும்போது உதவுவது உறவுகளின் நியதி. பெற்றவர், உடன்பிறப்புக்கள், தோழி என அனைவரின் தயங்காத பணிவிடையில் ஒருவாறு உடல்தேறி வீடு வந்து சேர்ந்தாள் நிகிதா. வீடு வந்ததும் நிகிதாவின் மன நிலையில் மாற்றங்கள் தென்பட்டன. யாரைப் பார்த்தாலும் போதும் குற்ற உணர்வில் மனம் சோர்ந்தாள். பேச்சு குறைந்தது. நிகிதாவின் மன வேதனையை அறிந்த நேகா,

என்ன நிகிதா நீ இனியும் இப்படியே இருந்தால் உன் எதிர்காலம் என்னவாக முடியும். வேண்டாம் நிகி உனக்காக இல்லை எனக்காக உன் துன்பங்களை எல்லாம் மூட்டைகட்டிப் போட்டு விடு. பிளீஸ் நிகிதா என் தோழி நிகிதாவை எனக்குக் கொடு. பிளீஸ் உன்னை கெஞ்சிக் கேட்கிறேன்.

என்னால் முடியவில்லையே நேகா. நான், என் எதிர்காலம் எல்லாம் அவரதுதான். அவரே மறுத்த பின் எனக்கு என்ன நேகா எதிர்காலம், வாழ்வு எல்லாம்.

ஏன் நிகிதா உன்னை எண்ணாத ஒருவருக்காக நீ ஏன் உனக்குத் தண்டனை கொடுக்க வேண்டும். நீ விரும்பியது தான் கிடைக்கவில்லை ஒத்துக் கொள்கிறேன். உன்னை விரும்பிய ஒன்றை ஏற்கப் பழகிக்கொள் நிகிதா.

நான் விரும்பியது எதுதான் எனக்குக் கிடைத்தது நேகா. எனக்கு வாழ்வே வெறுத்துவிட்டது. என்னால் முடியவில்லை என தோழியின் மடியில் புரண்டு அழுதாள்.

**சிறுகதை**

மெல்ல அவளது தலையை வருடியபடி "நிகி உனக்கு என்ன குறை. அம்மா, சகோதரர்கள், கல்வி எல்லாம் இருக்கிறது. இவை எல்லாவற்றையும் விடவா காதல் முக்கியம்? நமது செயலால் எமது உறவுகளின் எதிர்காலத்தையும் நாமே கெடுத்து விடக்கூடாது. உனது கல்வியே உன்னை வாழ வைக்கும். பயப்படாமல் வாழ்வை எதிர்கொள்ளப் பழகிக்கொள் நிகிதா.

எனது உறவுகள் என்னை வெறுத்ததால்தானே என்னிடம் அன்பு காட்டிய ஒருவரிடம் என்னை பறிகொடுத்தேன். அதுவும் மோசம் என்னும் போது என்னால் தாங்க முடியவில்லை.உறவுகள் ஒரு போதும் வேசம் போடுவதில்லை நிகிதா. நட்பு வழியில் அன்பு காட்டினால் அதை உன்னால் இனம் கண்டு கொள்ள முடியாமல் போனது துரதிஷ்டம்தான். ஆனால்



உறவுகளை புரிந்து கொள்ள வைப்பது உன் கையில் தான் இருக்கிறது. அவர்களைப் புரிந்து கொள்ள உன் வாழ்வு பூஞ்சோலையாகும். இல்லை நேகா என்னால் எவரையும் புரிந்து கொள்ள முடியவில்லை என்பது உண்மைதான். ஆனால் எனக்கு அன்பு கிடைப்பது குதிரைக் கொம்புதான்.

"நிகிதா உன்னை விட பெற்றோரால் அனாதைகளாக்கப்பட்டு, சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டு ரவுடிகளாகப் பல துரதிஷ்ட செயல்களை புரிபவர்களாக இன்றும் நம் முன்னிலையில் பலர் வாழ்கிறார்கள். அந்தளவில் நீ அதிஷ்டசாலிதான். உனக்கு என்ன குறை.

"நீ என்ன சொல்கிறாய் நேகா"எம்மைப் பொறுத்தவரை எமக்கு எவ்வளவோ வசதிகள் உண்டு. அவற்றைக் கொண்டு திடமான மனதுடன் வாழப்பழக வேண்டும், சமூகத்தில் நல்ல இடத்தில் உட்கார வேண்டும் என்கிறேன்.

"எதையும் சமாளிக்கும் குணம் உன்னிடம் வர வேண்டும். உன்னைப் போன்ற பெண்கள் எத்தனையோ பேர் இப்படி இருக்கிறார்கள். பெண்கள் துவண்டு போவதால் தான் ஆண்களால் மீண்டும் மீண்டும் குற்றம் புரிய முடிகிறது. துள்ளியெழுந்தால் சரணடைவார்கள். அதுவே இன்றைய பெண் சமுதாயத்தின் தேவையாகவும் உள்ளது. ஆனாலும் இப் பிரச்சனையில் உனது அன்புக்குரியவனைக் குறை கூற முடியாதுதானே நிகிதா. நிகிதா மெல்ல தலை நிமிர்ந்து நேகாவின் விழிகளை நேரடியாகச் சந்தித்தாள்.

எங்கே அவனை குறை கூறி விடுவாளோ, குற்றம் சாட்டி விடுவாளோ என ஏங்கியவளுக்கு மனதில் பெரும் மகிழ்ச்சி அதை அறிந்த நேகா "பெண்களின் அறியாமைக் குணம் உன்னையும் விட்டு வைக்காததாலும், குடும்பத்தினரின் அன்பற்ற சூழலுமே உன்னை இந்நிலைக்கு கொண்டு வந்துள்ளது. உனது எழுச்சியில் தான் அவர்களை வெல்ல வேண்டும். நிகி எனக்காக, அதற்காகவே நீ இனி முயற்சி செய். அது போதும்."

"எனக்காக நீ இவ்வளவு செய்கிறாய் நான் உனக்காக என்ன செய்ய முடியும் நேகா."

ஒன்றை மட்டும் செய் நிகி. நீ எனக்காக மீண்டும் தற்கொலை முயற்சி செய்யாமல் எதிர்காலத்தை எதிர்கொண்டு நல்ல முறையில் வாழப் பழகிக்கொள்.

'நேகா ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டாயா' "என்ன... என்ன.... பீடிகை பலமாக இருக்கிறது. பழைய குருடி கதவைத் திறவடியா?"

**பே.சித்ரா**

'இல்லை நேகா என் மனதில் இடம் பிடித்தவர் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது எனக்கு அன்று தான் தெரிய வந்தது. ஆனாலும் என்னால் தாளமுடியவில்லை. பின் இப்போது மனதில் ஒரு குமுறல் வேறு யாருமல்ல உன் உயிர்த் தோழிதானே. அவளுக்காக ஏன் நீ விட்டுக் கொடுக்கக் கூடாது . என்மனமே என்னை இடித்துரைக்கிறது. நேகா அதை இந்தத் தோழிக்காக நீ ஏற்றால் என்ன"

"நிகிதா....... என அதிர்ந்து விட்டாள் நேகா. என்ன உளறுகிறாய்?"

இல்லை நேகா நான் சொல்வது உண்மைதான் என்னிடம் அவர் நேசம் வைக்கவில்லை. உனக்காகவே என் பின்னணியில் இருந்தார் என்பது உண்மை. என் ஆசைமனம் செய்த பிழைக்காகவே தற்போது நான் வருந்துகிறேன் நேகா. அறியாமையால் நான் மோசம் போய்விட்டேன் என்பது உண்மை தான் மனப் பாரம் தாங்காமல் கண்ணீருடன் கூறினாள் நிகிதா.

(13 ஆம் பக்கம் பார்க்க)



# மகளிர் உலகம்

## நீங்கள் எப்படி



### வெற்றி பெறுகிறவரா?

1. எந்த வேலையையும் உடனுக்குடன் முடிப்பார்.
2. அடுத்த வேலையை எடுக்கத் தயாராக இருப்பார்.
3. குறைவாகப் பேசுவார்.
4. எந்த சிக்கலுக்கும் ஒரு விடை வைத்திருப்பார்.
5. ''ஒரு பாதை அடைப்பட்டால், அடுத்த பாதை திறக்கும்'' என்று முயற்சி செய்வார்.
6. ''கஷ்டந்தான், ஆனால், முடித்துவிடலாம்'' என்று உறுதியுடன் கூறுவார்.
7. ஒரு நேரத்தில் ஒரு வேலையைத்தான் கவனிப்பார்.
8. பிறர் சொல்லுவதை பொறுமையாகக் கேட்பார்.
9. தவறுகளை ஒப்புக் கொள்ளுவார்.
10. தோல்வியை ஒப்புக்கொண்டு, புதிய முயற்சிக்குத் தயார் ஆவார்.

### தோல்வி அடைபவரா?

1. வேலைகளை முடிக்காமல், குவித்துக் கொண்டு வருவார்.
2. ''இருக்கிற வேலையை இன்னும் முடியவில்லையே'' என்று முணுமுணுப்பார்.
3. பேச்சு அதிகமாக இருக்கும்
4. சிக்கலை மேலும் குழப்புவார்
5. ஆயிரம் பாதை இருந்தாலும், எந்தப் பாதையில் போவது என்று குழம்புவார்.
6. ''முடித்துவிடலாம்! ஆனால். நிரம்பக் கஷ்டம்'' என்று புலம்புவார்.
7. ''நான் எதைத்தான் செய்வது?'' என்று கைகளை பிசைவார்.
8. பிறரைப் பேசவிடமாட்டார். தானே பேசிக்கொண்டிருப்பார்.
9. ''இது என் தவறே அல்ல'' என்று பிறர் மீது பழிபோடுவார்.
10. ''நான் தொலைந்தேன்'' என்று சுருண்டு படுத்துவிடுவார்.

S. நந்தினி

## ஒளிமயமான எதிர்காலத்திற்கு



(சென்றவாரத் தொடர்ச்சி...)


திருமண வாழ்வில் கட்டாயம் மனதில் கொள்ள வேண்டியது என்னவென்றால் ஒருவர் எடுக்கும் தீர்மானம், பிரயோகிக்கும் சொல், செய்யும் செயல் என்பன மற்றவர் மனது புண்படா வண்ணம் அமைய வேண்டும். தற்செயலாக கணவன் எடுக்கும் தீர்மானத்தினால் மனைவியின் மனம் புண்பட்டு அதனால் தர்க்கம் ஏற்பட வாய்ப்புண்டு. இதன் மூலம் அவர்களது உறவு கெடலாம். அதனால் வாழ்வில் முக்கிய சந்தர்ப்பங்களில் எடுக்கப்படும் முடிவுகள் இருவரது விருப்பம் மற்றும் சம்மதம் என்பவற்றின் அடிப்படையில் எடுக்கப்பட்டால் அது சிறப்பாக அமையும்.


அலுவலகப் பணி முடிந்து வீட்டுக்கு வரும் கணவனை வரவேற்கச் செல்லுதல் உங்கள் கடமை. அவர் உங்களுக்காக என்று ஏதாவது செய்திருந்தால் அதற்கு நன்றி கூறுதல் மற்றும் அவரது பிரச்சினைகளில் அவரோடு பங்கேற்று தைரியப்படுத்துதல் இவையெல்லாம் மனைவிமார் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும். இதன் மூலம் உங்கள் வாழ்வு இன்பமுற வழியமைக்கலாம்.

அதே போல் கணவன்மார்களும், தம் மனைவியின் உணர்வுகளில் அக்கறை கொண்டு குறை கூறாது மனைவி உங்களுக்கு செய்கின்ற உதவிகளுக்கு நன்றி கூறுதல் வேண்டும்.

பிரச்சினைகளை மௌனமாக யோசித்து, நிதானமாக ஒரு முடிவுக்கு வர வேண்டும். இதன் மூலம் தம்பதியினரிடையே காணப்படும் கோபதாபங்கள் விலகி, சிறப்பான, அழகான சந்தோஷமான வாழ்வு அமையும். (முற்றும்)

## இறால் புரியாணி





### தேவையானவை

சுத்தப்படுத்திய இறால் :- 1/4 கிலோ
வெங்காயம் :- 1/4 கிலோ
பச்சை மிளகாய் :- 5
தக்காளி :- 3
உள்ளி :- 10 பல்
இஞ்சி :- ஒரு துண்டு
மிளகாய்த்தூள் :- 3 தேக்கரண்டி
மஞ்சள் தூள் :- சிறிதளவு
கடலை எண்ணெய்
பச்சரிசி :- 400 கிராம்.
கறிவேப்பிலை
உப்பு தேவையான அளவு.

### செய்முறை:-

முதலில் பச்சை அரிசியை பொல பொலவென்று வடித்து வைத்துக் கொள்ளவும். அகலமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றவும். வெங்காயம், பச்சைமிளகாய், தக்காளி நீளவாக்கில் நறுக்கிப் போடவும். கறிவேப்பிலை, சுத்தப்படுத்திய இறால் என்பவற்றைப் போட்டு நன்றாக வதக்கவும். பொன் நிறமாக வதங்கியதும் சிறிதளவு தண்ணீர் விட்டு, மிளகாய்த் தூள், மஞ்சள்த் தூள், தேவையான உப்பு, தட்டிய இஞ்சி, உள்ளி என்பவற்றைப் போடவும். 20 நிமிடம் மூடிவைத்து, பிறகு கிளறவும். மசாலா தடிப்பாக வந்தவுடன் இறக்கி, வடித்து வைத்த சோற்றை அதில் கொட்டி, நெய் ஊற்றி நன்றாகக் கிளறவும்.

இதுவே இறால் புரியாணி, சுவையாக இருக்கும். இதமான சூட்டில் பரிமாறவும்.

லோ. விஜயலட்சுமி

## அழகிய கண்கள் வேண்டுமா?



*புத்தகங்களை 20 நிமிடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகப் படிக்கக் கூடாது. 20 நிமிடங்களுக்கு ஒரு முறை கண்களுக்கு 2 நிமிடம் ஓய்வு கொடுக்க வேண்டும்.

*கண்ணுக்கு ஓய்வு கொடுக்க கண்களை மூடிக்கொள்ளலாம். அல்லது பார்வையை நீண்ட தூரத்திற்குச் செலுத்தலாம். இப்படிச் செய்து வந்தால் கண்கள் உடனடியாகப் புத்துணர்ச்சி பெறுகின்றன.

*புத்தகம் படிக்கும் போதும் தொலைக்காட்சி பார்க்கும் போதும் அவைகள் கண் அருகில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். கண்ணுக்குக் தொலைக்காட்சிக்குமிடையே குறிப்பிட்ட இடைவெளி இருப்பது அவசியம்.

*கம்பியூட்டரில் வேலை செய்பவர்கள் அதிக பிரைட் வைத்துக் கொண்டு வேலை செய்தாலும், கண் பாதிக்க வாய்ப்புண்டு. மல்ரிகலர் படத்தையும் அடிக்கடி திரையில் பார்ப்பதும் நல்லதல்ல.

*தலைவலி தொடர்கதையானால் உடனே கண் மருத்துவரைச் சந்திப்பது அவசியம். காலம் கடந்தால் கூடுதல் செலவாகும்.

க.சாரதா

## நல்ல உணவே நலவாழ்வு



ஆரோக்கியத்தை விரும்பாதவாகள் உலகில் இல்லவே இல்லை. ஆரோக்கியம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் இன்பமும் மகிழ்ச்சியும் இல்லை. எல்லோருக்குமே அழகாக, ஆரோக்கியமாக, இளமையாக இருக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் இருக்கிறது. இதற்கெல்லாம் ஒரே வழி நல்ல உணவுதான்!

இன்றைய இயந்திரத்தனமான வாழ்க்கை அமைப்பில் பலர் தங்கள் உண்ணும் உணவில் போதிய கவனம் செலுத்துவதே இல்லை. காலை உணவை சிலர் சாப்பிடுவதே இல்லை. பலர் அரைகுறையாகச் சாப்பிடுகிறார்கள். மதிய உண்வு, இரவு உணவு எதிலும் கவனம் செலுத்துவதில்லை.

(மறு இதழில் தொடரும்....)

## பெண்களுக்கு பிடித்தமானவை



பெண்களுக்கு மிகப்பிடித்தமானவை சில...

அவை:- பூ, பொட்டு, மூக்குத்தி, கண்மை,வளையல்கள், கொலுசு, மிஞ்சி.

மேலே சொன்னவைகளில் அழகு மட்டுமன்றி, சில அபூர்வ மகிமைகளும் உள்ளன.

### பூக்கள்

வாசனையுள்ள மலர்கள் வாசனைத் திரவியங்களுக்கு நிகரானது. பூக்கள் அழகையும், வாசனையையும் தருவதோடு நின்று விடாமல், தலையில் ஏற்படும் சில நோய்களுக்கு மருந்தாகவும் இருக்கிறது. சாமந்தி போன்ற கனமான பூக்களை தலையில் வைப்பதை, தவிர்க்க வேண்டும். முல்லை, ரோஜா, போன்ற மலர்கள் நல்லது.

### பொட்டு

நெற்றியில் திலகமிடுவதன் மூலம் சில வ்கை தோஷங்கள் நீங்குவதாக சொல்கிறார்கள். சுமங்கலிகள் நெற்றியில் குங்குமமிடுவதோடு நேர் வகிட்டிலும் குங்குமம் வைக்க வேண்டும். தலை எழுத்தை மாற்றும் சக்தியே குங்குமத்துக்கு உண்டு என்று நம்புகிறார்கள்.

### மூக்குத்தி

தங்க மூக்குத்தி அணிந்தால், சுவாசிக்கும்போது காற்று தங்கத்தை தழுவிக் கொண்டு உடலுக்குள் வருகிறது. அதனால் சுவாச நோய் தடுக்கப்படும் என்கிறார்கள். மூக்குத்தி அணிபவர்கள் 10 முதல் இருபது வயதுக்கு இடையில் மூக்கு குத்திக் கொள்ள வேண்டும்.

### கண் மை

கண்ணுக்கு அழகை கண்மை தருகிறது. கூடவே கண்ணுக்கு குளிர்ச்சியைத் தந்து, கண் பார்வை சக்தியை அதிகப்படுத்துகிறது.

### வளையல்

திருமணமான பெண்கள் வளையல் அணிவதற்கும், இளம் பெண்கள் வளையல் அணிவதற்கும் வேறுபாடுகள் உள்ளன. திருமணமான பெண்கள் கணவனையே வளைய வளைய வர வளையல் நினைவு படுத்தும். கடும் நிறத்திலுள்ள வளையல்கள் தோஷ பரிகாரம் கொண்டவை. சனி திசை பாதிப்பை தரும்போது பெண்கள் நீல நிற வளையல் அணிந்தால், தோஷத்தின் கடுமை குறையும்.

### மிஞ்சி

திருமணமான பெண்கள் மிஞ்சி அணிவார்கள். அதை காலின் இரண்டாவது விரலில் மட்டுமே அணிய வேண்டும். இரண்டாவது விரலில் மிஞ்சி அணிவதால் கர்ப்பப்பை பலமடையும் என்கிறார்கள்.

S.வேணுகா

# மரண விளையாட்டு

தொடர்கதை

அங்கம் 11

"எஸ். நீ கூறியது சரிதான். அவர்கள் கடலுக்குள் வீசிய பிறவுண் சுகர் பெட்டியைத் தேட வரும் போது அவர்களை மடக்கலாம். நீ இந்திய கடற்படையில் இருந்து 5 அதிரடி வீரர்களை வரவழைக்க ஏற்பாடுசெய்."

"ஓ.கே சார்" என்று விரைந்து சலூட் அடித்துவிட்டு விட்டு கிளம்பிய உதவிக் கப்டனை பார்த்த கப்டனின் முகம் சாத்தானின் முகமாகியது.

❖ ❖

முகத்திற்கு ஒட்சிசன் வரும் குழாய், காபனீரொட்சைட் வெளியேறும் குழாய் வெளியேறும் முதுகுக்கு பின் 2 ஒட்சிசன் சிலிண்டர்கள் கால்களில் கறுத்த நீண்ட மட்டைகள், டார்ச், நீரில் சுடக்கூடிய லிசே கண்கள், நின்ஜா வகை கத்திகள் என்பவற்றை பொருத்திக்கொண்டு ஜோர்ச், ஜோன்ஸ், டேவிட் ஆகியோர் மிஷின் போர்ட்டில் புறப்பட்டார்கள்.

பெட்டி போடப்பட்ட இடத்திற்கு சிறிது தூரத்தில் இந்திய கடற்படை யின் கப்பல் ஒன்று நிற்பது தெரிந்தது.

"ஜோன்ஸ் இந்திய கடற்படை ரோந்திற்கு வந்துள்ளது போல் தெரிகிறது".

"ஆமாம் இவர்களின் கண்களில் எவ்வாறு மண்ணை தூவுவது" என் றான் டேவிட்.

"நாம் மூவரும் நீருக்குள் இறங்க இவர்கள் மீன் பிடிப்பவர்களை போல் வலை வீசிக் கொண்டு நிற்கட்டும்" என்று இரு படகோட்டிகளையும் கூறினான் ஜோர்ஜ்.

"எஸ் நல்ல யோசனை" என்று கூறியபடி போட்டில் இருந்த நீண்ட இரும்பு செயினை கடலுக்குள் விட்டுவிட்டு "சரி குதியுங்கள்" என்று கூறியபடி பின்புறமாக நீருக்குள் கவிழ்ந்தான் ஜோன்ஸ்.

கால்களை அசைத்தபடி நீருக்குள் நீந்தி பெட்டியை தேட ஆரம்பித்தார்கள். கடுமையான முயற்சியின் பின் டேவிட்டின் கையில் பெட்டி சிக்கியது.

ஜோன்ஸ், ஜோர்ஜ் பெட்டி கிடைத்துவிட்டது என்று கூறி நிமிர்ந்தவன் அதிர்ந்தான். ஷிக் ஷிக் ஷிக் என்று 50 மீற்றர் தூரத்தில் இருந்து நீர்த் துப்பாக்கிகள் 5 விசேட புல்லட்களை துப்பின. அவை சிறு அம்பு வடிவில் பறந்து வந்தன. தம்மை நோக்கி பறந்த சிறு அம்புகளை கண்டு கண்ணிமைக்கும் நேரத்தில் பாறைகளுக்கு பின் பாய்ந்து மறைந்தார்கள் மூவரும்.

ஜோர்ஜ் மெல்ல பதுங்கி இந்திய அதிரடி வீரர்களின் பின் புறமாக வந்தான்.

ஏதோ சத்தம் கேட்டு பாறையை அணுகிய அதிரடி வீரனின் கழுத்தை பாய்ந்து அறுத்தான் ஜோர்ஜ். ஜோர்ச்சை சுடுவதற்கு திரும்பிய அதிரடி வீரன் ஜோன்சின் துப்பாக்கிக்கு பலியானான். சம பலத்தில் இரு அணிகளும் விளங்கின. மறைவை விட்டு வெளியே வந்த மூவரும் நேரடியாக மோதுவதற்கு வியூகம் அமைத்தார்கள்.

❖—❖

நொடிப் பொழுதில் திடீரென்று டேவிட் அதிரடி வீரனின் அடிவயிற்றில் பூகம்பமாய் வெடித்தான். நிலை குலைந்த அதிரடி வீரன் சுதாகரிக்கும் முன்பு கையில் இருந்த கத்தியை நடு நெஞ்சில் செருகினான். ஜோன்சும் ஜோர்ச்சும் மற்றைய இரு அதிரடி வீரர்களையும் பந்தாடிக் கொண்டிருந்தார்கள். ஜோன்சின் நிலை ஆபத்திற்குரியதாய் இருந்தது. இதைக் கண்ணுற்ற டேவிட் ஜோன்சை தாக்கிய அதிரடி வீரனின் ஒட்சிசன் சிலிண்டர்களின் குழாய்களை அறுத்தான். நீர் குமிழிகள் வர அதிரடி வீரன் துடி துடித்து அடங்கினான்.

சதக் என்று மற்றைய அதிரடி வீரன் தலையை தனியே அறுத்தெடுத்தான் ஜோர்ச். "கமோன் பெட்டியை சங்கிலியில் மாட்டுங்கள்" என்று கூறிப் பெட்டியை இழுத்து வந்தான் ஜோன்ஸ். சங்கிலியின் கொழுக்கியில் பெட்டியை மாட்டி விட்டு நீரின் மேற்பரப்பை நோக்கி விரைந்து நீந்தினார்கள்.

இந்தியக் கடற்படையினர் கப்பலில் அனுப்பிய அதிரடி வீரர்களை காணாமல் பதற்றப்பட்ட வண்ணம் இருந்தனர். சிறிது தூரத்தில் ஒரு படகில் தீவிரவாதிகள் பிறவுண் சுகர் பெட்டியை ஏற்றிக்கொண்டு புறப்பட



ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். "இடியட் மீன் பிடிப்பவர்களைப் போல் பாசாங்கு செய்து கொண்டிருந்த போட் தீவிரவாதிகளினுடையது அவர்கள் செல்லு முன் பிடிக்கவேண்டும்" என்று கட்டளையிட்ட கப்பல் கேப்டன் கப்பலை புறப்பட சொல்லி தன் உதவியாளனை அனுப்பினார்.

"டேவிட் இந்தியக் கப்பல் துரத்த ஆரம்பித்து விட்டது. நாம் விரைவாகச் செல்ல வேண்டும்" என்று கூறி போட் செலுத்துபவர்களை விரைவாகச் செலுத்தச் சொன்னான்.

இந்தியக் கடற்படை டோறாவும் தீவிரவாதிகளின் மிஷின் போட்டும் போட்டியிட்ட வண்ணம் சென்று கொண்டிருந்தன. சுடும். தொலை தூரத்திற்க்கு வந்ததும் டோறா சுடத் தொடங்கியது. மிஷின் போட் மேலும் வேகத்தை அதிகரித்து பறக்கத்தொடங்கியது. தோட்டாக்கள் போட்டை உரசிய வண்ணம் நீருக்குள் பாய்ந்து உயிரிழந்தன. டோறா வின் தாக்குதல் உக்கிரமடையத் தொடங்கியது. திடீர் என்று இரு கெலிஹெப்டர்கள் டோறாவை நோக்கி வேகமாகவந்து கொண்டிருந்தன.

வியூகம் அமைத்து தாக்கத் தொடங்கினர். டோறாவின்வேகம் குறைந்து பின்னடையத் தொடங்கியது. மேலே இரு கெலிஹொப்டர்களும் கீழே போட்டுமாகஅணிவகுத்து தீவிர வாதிகளின் தளத்தை அடைந்தன.

பிறவுண் சுகர்ப்பெட்டியை இரு வர் தூக்கிய வண்ணம் ராம் தாஸின் பங்களாவை அடைந்தார்கள்.

ராம் தாஸ் அப்துல்ரகீமுடன் வயர்லெக்ஸில் கதைத்துக்கொண்டிருந்தான்.

அவர்கள் பிறவுண் சுகர்ப் பெட்டியுடன் வந்து விட்டார்கள். நான் அதனை இலங்கையின் பல இடங்களிலும் சப்ளை பண்ண ஏற்பாடு செய்கிறேன்" என்றான் ராம் தாஸ்.

"ஓகே மேலதிக கட்டளைகள் பின்னர் பிறப்பிக்கப்படும்" என்று கூறி அந்த உரையாடல் கட்டாகியது.

"ஹலோ கமிசனர் தேவராஜ் கியர்"

"மிஸ்டர் தேவராஜ் தீவிரவாதிகள் உங்கள் நாட்டின் போதைப் பொருட்களை சப்ளை செய்யப் போவதுடன், எஸ்.எஸ் வாங்கையும் கொள்ளையிடப்போகிறார்கள். எங்களுக்குத் தகவல் கிடைத்ததும் இது சீ.பி.ஐ ஒபிசர்களை அனுப்பினோம். ஆனால் அவர்கள் இருவரையும் கொன்று விட்டு தீவிரவாதிகள் தப்பி விட்டனர்"என்றார் இந்திய சீ.பி.ஐ கெட் ஒபிசர் இளம் பரிதி.

" மிஸ்டர் இளம்பரிதி இந்த தீவிரவாத நாய்கள் முதலும் இரு தாக்குதல்களை மேற்கொண்டு விட்டனர் இனியும் அவர்கள் இங்கு செயற்படுவதை நிச்சயமாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம்.


எமது நாட்டை ஆபத்தில் இருந்து தகுந்த சமயத்தில் காப்பாற்றியதற்கு எங்கள் நாட்டின் சார்பில் நன்றிகளை கூறுகிறேன்".

## மாயவன்


WEL COME மிஸ்டர் தேவராஜ் அது என் கடமை தான். என் கடமையைச் செய்ததற்கு நன்றிகள். வேண்டாம் தீவிரவாதிகளை த்டுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யுங்கள் ஏதாவது உதவி தேவைஎன்றால் தொடர்பு கொள்ளுங்கள்.

"ஓகே மிஸ்டர் இளம்பரிதி" என்று போனை வைத்த பொலிஸ் கமிஷனர் தேவராச் அருகில் நின்ற கிரிதரனை அழைத்து கிரி அந்த தீவிர வாத நாய்கள் மீண்டும் நம்முடன் விளையாடத் தொடங்கிவிட்டார்கள். இம்முறை இருக்கும் என நினைக்கிறேன். நீ எல்லா ஒபிசர்களையும் ஆலோசனை மண்டபத்திற்கு அழை இதோ நான் வருகின்றேன் என்று புறப்பட்டார் தேவராஜ்.

(தொடரும்...)



# கம்ப்யூட்டர்க் கல்வி



## இன்ரநெற்



உலகெங்கும் உள்ள கம்பியூட்டர்களை இணைத்ததன் மூலம் ஏராளமான தகவல்களை தன்னகத்தே கொண்ட ஒரு தகவல் களஞ்சியமாக இன்ரர்நெற் அமைந்திருக்கிறது. இந்த இன்ரர்நெற்றிற்கு யாரும் உரிமை கோர முடியாது. சில சர்வதேச அமைப்புக்கள் இன்ரர்நெற்றை பராமரித்து வருகின்றன. அவற்றில் IETF (Internet Engineering Task Force), IAB (Internet Architecture Board), INTERNIC (Inter Network Information Center) போன்ற அமைப்புக்கள் குறிப்பிடத்தக்கவை.

### உங்கள் கம்பியூட்டரை இன்ரர்நெற்றுடன் இணைப்பது எப்படி?

உங்கள் கம்பியூட்டரை இன்ரர்நெற்றுடன் இணைப்பதற்கு முன்னர், சில அடிப்படை விடயங்களை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். ஒரு கம்பியூட்டரை எவ்வாறு இன்ரர்நெற்றுடன் இணைப்பது, எவ்வாறான சேவைகளைப் பெறலாம், அவற்றை எப்படிப் பெறலாம் என்பன முக்கியமான தகவல்களாகும்.

ஒரு கம்பியூட்டரை இன்ரர்நெற்றுடன் பல வழிகளில் இணைக்கலாம். ஒரு தனியான மின்கம்பி (Wire) மூலம் இணைப்பது நேரடி நெற்வேர்க் இணைப்பு (Direct Network Connction) எனப்படுகிறது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பாரிய வேலைத்தளங்கள் என்பவை இவ்வகையான இணைப்பை பெரிதும் பாவிக்கின்றன. வீட்டிலுள்ள கம்பியூட்டர்கள் பெரும்பாலும் மொடம் (Modem) மூலமான இன்னொரு வகையான இணைப்பு முறையைப் பாவிக்கின்றன. இவற்றைத் தவிர ISDN,T1,T3,ADSL,HDSL என வேறு இணைப்பு முறைகளும் உள்ளன. மொடம் மூலமான இணைப்பு முறையே செலவு குறைவானதும், சாதாரண தேவைகளுக்குப் பொருத்தமானதுமாகும். இந்த இணைப்பு முறையைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

மொடம் என்பது தகவல் பரிமாற்றத்திற்குப் பயன்படும் ஒரு மின் தொடர்புச் சாதனமாகும். ஒரு மொடமானது இன்னொரு மொடத்திடம் மட்டுமே தொடர்பு கொள்ளலாம். இத்தொடர்புக்கு அவை ரெலிபோன் இணைப்பை ஊடகமாகப் பயன்படுத்துகின்றன.

தற்போது ரெலிபோன் இணைப்பிற்குப் பதிலாகத் தொலைக்காட்சி சேவைக்காக பயன்படுத்தும் கேபிளையும் (Cable) ஊடகமாக பயன்படுத்தக் கூடிய கேபிள் மொடம்களும் (Cable Modems) பாவனையில் உள்ளன. கேபிள் மொடம்கள், ரெலிபோன் மொடம்களை விட பல மடங்கு கூடிய தரவுகளை விரைவாக பரிமாறிக் கொள்ளும் சக்தி வாய்ந்தவை.

### இன்ரநெற் - ஓர் அறிமுகம்
### இன்ரநெற்றின் வரலாறு

இவ்வாறான மொடம் ஒன்றினைப் பாவித்து உங்கள் வீட்டிலுள்ள கம்பியூட்டரை இன்ரர்நெற்றுடன் இணைத்துக் கொள்ளலாம். இவ்வாறான இணைப்பைப் பெறுவதற்கு நீங்கள் உங்கள் அருகாமையிலுள்ள இன்ரர்நெற் சேவை வழங்குகிறவர்களை (ISP -Internet Service Providers) நாடினால் அவர்கள் உங்கள் வீட்டிற்கே வந்து இணைப்பை ஏற்படுத்தித் தருவார்கள்.

இனி இன்ரர்நெற் மூலமாக என்னென்ன பயன்களை அடையலாம் என்பதைப் பார்ப்போம்.

### இன்ரர்நெற்றின் பயன்கள்


**1. உலக வலை மையம்**
**(World Wide Web -WWW)**

இன்ரர்நெற் தொடர்பை வைத்திருக்கும் அனைவரும் தமக்குத் தெரிந்த விடயங்களை இந்த வலை மைய்த்தின் மூலமாக மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். இந்த WWW இல் பெருந்தொகையான நல்ல விடயங்கள் உள்ளன. இந்த விடயங்களைப் பார்ப்பதற்கு எங்களுக்கு Browser ஒன்றின் உதவி அவசியமாகிறது. Browser என்பது ஒரு கம்பியூட்டர் புரோகிராம் ஆகும். பலவகையான Browser கள் இன்று பாவனையில் இருந்தாலும் Netscape, Explorer போன்றவை பிரபலமானவை.

**2.மின் அஞ்சல் (E.Mail)**

இந்த மின் அஞ்சல் சேவையைப் பாவித்து இன்ரர்நெற் தொடர்புள்ள அனைவருடனும் மின் கடிதத் தொடர்பை வைத்துக் கொள்ளலாம். இந்த மின் அஞ்சல் சேவையைப் பாவிப்பதற்கு ஒரு E-Mail Software அவசியமாகிறது. Eudora, Netscape Mail, Outlook, Pine என்பன பிரபலமான Software கள் ஆகும்.

இவை தவிர ரெல்நெற் (Telnet), இன்ரர்நெற் தொலைபேசி, இன்ரர்நெற் T.V, இன்ரர்நெற் ரேடியோ, FTP போன்ற வேறு பல விடயங்களும் உள்ளன. இவற்றைப் பற்றிய விளக்கமான, விரிவான தகவல்களை தொடர்ந்து வரும் இதழ்களில் பார்ப்போம். இனி உலக வலை மையத்தைப் பற்றி விரிவாகப்பார்ப்போம்.



### உலக வலை மையம் (World Wide Web- www)

இந்த மையமானது இன்ரர்நெற்றின் பயன்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்றது. இதனை ஒரு உலகத் தகவல் களஞ்சியம் ஏ்னலாம்.

1989ஆம் ஆண்டு சுவிற்சலாந்தில் Tim Bezhers Lee என்பவரால் இந்த www ஆனது உருவாக்கப்பட்டது. இது ஹைபர் ரெக்ஸ்ற் (Hypertext)எனும் ஒரு வகையான கம்பியூட்டர் தகவல் பரிவர்த்தனை முறையைப் பாவித்து உலகம் பூராவும் உள்ள எல்லா இன்ரர்நெற் கம்பியூட்டர்களையும் ஒரு வட்டத்திற்குள் இணைக்கும் ஒரு சக்தி வாய்ந்த கம்பியூட்டர் வலையாகும். நாம் முன்பே குறிப்பிட்டது போல் இன்ரர்நெற்றில் உள்ள தகவல்களைப் பெறுவதற்கு Netscape, Explorer போன்ற Browser களை பாவிக்கிறோம்.

(மறு இதழில் தொடரும்...)

# திட்டமிடுவோம்

# செயற்படுவோம்

எல்லோருமே எளிதாகச் செய்யக் கூடிய விடயங்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று மற்றவர்களிற்காகத் தரப்படும் அறிவுரைகள். மற்றொன்று எமக்காக நாமே போட்டுக் கொள்ளும் தீர்மானம். இவை இரண்டிற்குமிடையில் அதிகளவு வேறுபாடு இல்லை. மற்றவர்களுக்குச் சொல்வது அறிவுரை எமக்கு நாமே சொல்லிக் கொள்வது தீர்மானம்.

ஆலோசனை தருவதற்கு வரம்பு வரையறையே கிடையாது. மூட்டு வலிக்கு, காதுவலிக்கு எனத் தொடங்கி ஒரே மாதத்தில் தேய்ந்து போகும் துடைப்பம் 6 மாதங்களாவது தாக்குப் பிடிக்க நாம் தரும் ஆலோசனைகள் என ஆலோசனைகள் அனுமன் வாலாக நீண்டு கொண்டே செல்கின்றது.

ஆனால் இந்தத் தீர்மானம் தான் சிறிது சிக்கலானது. ஏனெனில் நாம் தானே அவற்றை முழுமையாக நிறைவேற்ற வேண்டியவர்கள். இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்ட வேகத்திலேயே காணாமல் போய் விடுவதற்குப் காரணம் அவை நிறைவேற்றப்படக்கூடியதாக இல்லாமல் இருப்பது தான். எதையும் சொல்வது எளிது, செய்வது கடினம்.

ஒரு முறை ஒரு பெண் தன் மகனை எடிசனிடம் அழைத்துக் கொண்டு போய் ''இவனுக்கு ஒரு குறிக்கோளை அமைத்துத் தாருங்கள்'' என்று கேட்டாள். ''எடிசன் சொன்னார். ''கடிகாரத்தைப் பார்க்கவே பார்க்காதே'' என்ன வியப்பாக இருக்கிறதா? எடிசன் சொன்னதில் விஷயம் இல்லாமலில்லை. நேரத்தைப் பார்த்து எதையும் செய்யாதீர்கள். ஒன்றைச் செய்ய வேண்டுமென்று முடிவெடுத்து விட்டீர்கள் என்றால், உடனேயே செய்ய ஆரம்பித்து விடுங்கள். நாளைக்குச் செய்யலாம்; புது வருடத்தில் செய்யலாம் என்று தள்ளிப் போட்டு விடாதீர்கள் என்பது தான் அவர் சொல்வது. முடிவெடுத்துச் செயற்பட சோம்பல்படும். பலருக்கு தீர்மானம் அவசியம் தேவையானது. தீர்மானம் எடுத்து இயன்றவரை அதனை நிறைவேற்றுவோம் என்று நினைப்பதே வரவேற்கப்படக் கூடியது..

தீர்மானம் என்ன தீர்மானம்.....எல்லாம் தீர்மானித்த படியா



நடந்துவிடுகிறது என்று கேட்பவர்கள் சிலர். மர்.ஃபி என்ற அறிஞரும் இவர்களைப் போலதான் பேசுகிறார். இவருடைய கோட்பாடுகள் எதிர் மறைச் சிந்தனையோடுதான் எழுப்பப்பட்டுள்ளன.

மர்.ஃபியின் முதல் கோட்பாடு ''எதுவும் சரியாக நடக்காது'' (Nothing Works Right). இதனை நடைமுறை வாழ்வில் நாம் அதிகம் அனுபவித்து வருகின்றோம். பாதி குளியலில் தண்ணீர் நின்று விடும், அவசர வேலையில் விருந்தினர்களின் வருகை, பாதி சாப்பாட்டில் குழந்தை தொப்பென்று விழுந்து அலறும். இப்படிப் பல விஷயங்களிலும் தடங்கல் எடுத்த காரியம் சரியாக நடக்காது என்ற மர்.ஃபி சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை. அவை எமக்கே தெரியும். ஆனால் அதற்காகத் தீர்மானமும், திட்டமும் போடாமலேயே இருந்து விடலாமா? எந்தத் தீர்மானத்திலும், செயற்பாட்டிலும் பிரச்சினைகள் வரவே செய்யும். பிரச்சினைகள் இல்லாமல் வாழ்க்கையில்லை. எனவே பிரச்சினைகளை எதிர்பாருங்கள் என்று சொல்ல எழுந்தவைதான் மர்.ஃபியின் கோட்பாடுகள்.

திட்டத்தைப் போடும் போதே அதன் செயன்முறையில் வரக் கூடிய தடங்கல்கள் என்ன? அவற்றை எப்படிச் சமாளிக்கலாம்? என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அந்தத் தடங்கல்களையும் மீறி அவற்றை முடித்துக்காட்டுவோம். என்ற உறுதியைத்தான் நாம் ஒவ்வொரு செயலிலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதைவிட்டு நம்மால் முடியாது. என்று பாதியில் எந்தத் தீர்மானத்தையும் விட்டுவிடக் கூடாது.

நாம் போடும் திட்டம் புதியதாக, பயனுள்ளதாக, கொஞ்சம் கடினமானதாக இருந்தால்தான் அதனைச் செய்யவேண்டுமென்ற ஊக்கம் இருக்கும்.

எதிர்பார்ப்பும் இருக்கும். திட்டமும், தேவையும் கூடவே அவற்றை எப்படியும் செயலாக்கியே தீருவேன் என்ற தீர்மானமும் வேண்டும்.

இனியும் என்ன முறையாக திட்டமிடுங்கள். சரியாக நடைமுறைப்படுத்துங்கள் என்றும் வெற்றி உங்கள் பக்கம்.

**தொகுப்பு எஸ். சுஜாதா**

## பிறந்த நாள் பலன்கள்...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

ஆத்திரமுள்ளவர்களாக இருந்தாலும், மிக எளிதில் சினம் கொள்பவர்களாக இருந்தாலும், கொதிப்படைந்துள்ள மற்றவர்களையும், வெறி பிடித்தவர்களையும் கூட தமது சக்தியால் உடனே கட்டுப்படுத்தி விடுவார்கள். இப்படிப்பட்டவர்களுடன் அடிக்கடி இவர்கள் வாழ்க்கையில் தொடர்புகொள்ளும் நிலை தன்னால் ஏற்படும். இவர்களுள் சிலர் தமது கண்களாலேயே மற்றவர்களைக் கட்டுப்படுத்தி விடும் தன்மை பெற்று விடுவார்கள்.

பணக்காரர் வீட்டில் இவர்கள் பிறந்திருந்தால் மனத்தில் எதுவும் இன்பமில்லை என்று எண்ணும்படி நடந்து கொள்ளுவார்கள். எளிய நிலையில் வரும் வாய்ப்புக்களை நழுவ விட்டு விடுவார்கள். அல்லது வாய்ப்புக்கள் நழுவியபின் துன்பம் கொள்ளுவார்கள்.

மிக எளிய குடும்பங்களில் பிறந்தவர்கள் தமது கௌரவத்துக்கு இழுக்கு ஏற்பட்டாலும் பாதகமில்லை என்று எண்ணும்படி நடந்துகொள்வார்கள். பல விஷயங்களில் இவர்கள் மிகுந்த நம்பிக்கையானவர்களாக இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. தமக்குத் தேவையானவை ஏதாவது ஒரு வழியில் கிடைத்தால் சரியென்றும் இவர்கள் சில சமயம் எண்ணுவது உண்டு.

### உடல் நிலை

பெப்ரவரியில் பிறந்த இவர்களுக்கு வயிற்றின் நரம்புகள் பாதிக்கப்பட்டு, வயிற்று நோயால் துன்பப்படுவார்கள். எளிய மருந்துகளால் இவர்களைக் குணப்படுத்தவே முடியும். மிகக் கவனத்துடன் இல்லா விட்டால், முத்திரப்பைகள், ஆணுறுப்பு அல்லது பெண்ணுறுப்பு பாதிக்கப்படுவதுடன், கால்களிலும் வீக்கம் காணலாம். உடல் குளிர்ச்சியுடன் இருக்கும். மஞ்சள் காமாலை போன்ற நோய் வர வாய்ப்பு உண்டு.

ஏதாவது ஒரு விபத்தில் பற்களை இழந்து விடுவார்கள். கணுக்கால்களிலோ, கால்களின் முட்டிகளிலோ, அடிக்கடி வலி ஏற்படும். அடிக்கடி கால்களில் சுளுக்குப் பிடித்துக்கொள்ளும். கண் நோய்கள் இவர்களைப் பாதிக்கும்.

### வண்ணங்கள்

நீலம், பழுப்பு போன்ற வண்ணங்கள் இவர்களுக்குப் பிடிக்கும்.

பெப்ரவரியில் பிறந்தவர்களில் சிலர்

* ரூஸ்வெல்ட்
* சார்லஸ் டிக்கன்ஸ்
* ஆப்ரகாம் லிங்கன்
* தத்துவ ஞானி டார்வின்
* ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார்
* ராமகிருஷ்ண பரமஹம்சர்
* சத்ரபதி சிவாஜி

(தொடரும்)

**தொகுப்பு: வளவன்**

## மாறிய மனம்........

(10ம் பக்க தொடர்ச்சி)

நிகிதா உண்மை என்று ஒன்று இருக்குமானால் நிச்சயமாக நான் அவனை விரும்பவில்லை. எனவே எம்வாழ்வில் துன்பம் ஏற்படுத்தியது போதும் எனக் கூறிவிடுகிறேன். என்ன துணிவிருந்தால் உன்னிடமே இதைக் கூறுவான்.

''வேண்டாம் நேகா உனக்கு விருப்பம் இல்லாது போனால் அவரை விட்டுவிடு எனக்காக''

''உன் அன்பை அவன் புரிந்து கொள்ளாத போதும் இப்படி அவனுக்காக உருகுவது என்னால் பொறுக்க முடியவில்லை. ''மனம் ஒரு குரங்கு'' என்பார்கள் மீண்டும் மீண்டும் துன்பம் வர நீயே இடம் வைக்காதே என்னைப் பொறுத்தவரை எதுவும் 'டேக். இட் ஈ.ஸி.'

''நேகா உன்னை தோழியாக அடைந்தது என் அதிஷ்டம் அந்த ஒன்றையாவது இறைவன் எனக்கு தந்திருக்கிறான்'' அது போதும். எனது தோழியின் கையை அன்புடன் வருடினாள் நிகிதா.

''நிகிதா இது போதும் எனக்கு. உன் முட்டைப் பற்களை காட்டி சிரி பார்க் கலாம். எங்கே.... எங்கே....

நிகிதாவால் தனது கஷ்டங்களை மறந்து முழுதாக சிரிக்க முடியாது விட்டாலும் தோழியின் கேலியில் சிறிது சிரிக்கலானாள்.

(முற்றும்)

# அழகிய நகரங்களின் நாகரிகங்கள் அழிந்தது எப்படி?

கி.மு.2500 ஆண்டு தொடக்கம் கி.மு.1700 ஆண்டு வரையான காலப்பகுதியின் போது இந்து நதிப் பள்ளத் தாக்கில் காணப்பட்ட நாகரிக வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியது அன்றைய மொகஞ்சதாரோ நகரம். அக் காலத்தில் அகன்ற தெருக்களையும், பல மாடிக் கட்டடங்களையும் சிறந்த வடிகாலமைப்பு வசதிகளையும் அது கொண்டிருந்தது. என்பதற்கான ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மிக உன்னத நிலையிலிருந்த இந் நகரத்திற்கு ஏற்பட்ட முடிவு இன்றுவரை புரிந்து கொள்ள முடியாத ஒரு புதிராகவே இருக்கிறது.

கி.மு.1700 ஆம் ஆண்டளவில் மக்கள் ஏனோ இந் நகரத்தைக் கைவிடத் தொடங்கி விட்டார்கள். தெருக்களில் குப்பைகள் குவிந்தன. இறந்து போன மனிதர்களின் சடலங்கள் புதைக்கப்படாது வீதிகளிற் போடப்பட்டன. அங்கு வாழ்ந்து வந்த மக்கள் அனைவரும் நகரைவிட்டு இடம் பெயர்ந்து வேறு எங்கோ போய்விட்டார்கள். எவரோ அந்நியர்களின் ஆக்கிரமிப்புக் காரணமாகவே மக்கள் இவ்வாறு இடம் பெயர்ந்திருக்க வேண்டுமென ஒரு சில வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். வேறு சில ஆய்வாளர்கள், இந்த நகரத்தை அண்டியவாறு ஓடிய ஆறு தனது பாதையை மாற்றிக் கொண்டதனால் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் நகரை விட்டு வெளியேறியிருக்கலாம் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

நிலம் உவர்த்தன்மை அடைந்ததனால் இங்கு உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாது போயிருக்கக் கூடும். நகர மக்களுக்குப் போதிய உணவை வழங்க முடியாத காரணத்தினால் அரசாங்கம் நகரின்மீது தான் கொண்டிருந்த கட்டுப்பாட்டை இழக்க நேரிட்டது. பல கொள்ளைக் கூட்டங்கள் தோன்றி நகரை விட்டு வெளியேறத் தாமதித்த மக்களைத் தாக்கி அவர்களின் உடைமைகளைக் கொள்ளையிட்டன. தெருக்களிற் கிடந்த மனித உடல்களின் மண்டையோடுகளில் காணப்பட்ட வெட்டுக் காயங்கள் அதனை உறுதி செய்கின்றன.

பண்டைக் காலத்தில் நாகரிகத்தின் சின்னமாக விளங்கிய இந்த மொகஞ்சதாரோ நகரம் படிப்படியாகச் சிறு கிராமமாகத் தேய்வடைந்து இறுதியில் வெறுஞ் சிதைவுகளாக உருமாறியது. இச் சிதைவுகளே பின்னர் 1921 ஆம் ஆண்டில் ஆய்வாளர்களினால் கண்டு பிடிக்கப்பட்டன. **(Just Look at Ancient Cities - By Judith Crosher)**

## உரோமப் பேரரசின் வீழ்ச்சி

மிகப்பெரிய சாம்ராஜ்யமான உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு அரசியல், சமூக மற்றும் பொரு



ளாதாரக் காரணங்களுடன் ஈய, உலோகமும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது என அண்மைக் காலத்து ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளார்கள். அந்தக் காலத்தில் உரோமில் ஈயம் அளவுக்கதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நீர்த் தொட்டிகளும் நீர் விநியோகக் குழாய்களும் ஈயத்தினாலேயே ஆக்கப்பட்டன. பாத்திர உற்பத்திக்கும் ஈயம் பயன்படுத்தப்பட்டது. சில வகையான ஆபரணங்களும் அலங்காரப் பொருள்களும் ஈயத்தினாற்

வலகங்களில் பாவனையிலிருந்த முத்திரைகளும், இலச்சினைகளுங்கூட ஈயத்தினாலேயே செய்யப்பட்டன. தண்ணீர் ஈயத் தொட்டிகளிற் சேமிக்கப்பட்டு ஈயக்குழாய்கள் மூலம் விநியோகிக்கப்பட்டதனால் தண்ணீருடன் கலந்து வந்த ஈய நஞ்சும் உரோமர்களின் உடலிற் கலக்கத் தொடங்கியது. உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களே இதனாற் பெரிதும் பாதிக்கப் பட்டார்கள். ஏனெனில், அவர்கள்

பட்டார்கள். ஏனெனில், அவர்கள் தமது வீடுகளில் உபயோகித்த பாத்திரங்கள் அனைத்தும் ஈயத்தினாலேயே செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாகவே

முன்னர் பல அரசர்கள் மன நோய்க்கு ஆளாகியிருந்தார்கள் எனத் தெரியவருகிறது. உயர் வகுப்பினரின் சராசரி உயிர் வாழுங் காலங்கூட 25 ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்தது.

அக்காலத்தில் உரோமபுரியில் பயன்படுத்தப்பட்ட குடிநீர் அளவுக்கதிகமான காபன் டை ஒக்சைட் வாயுவைக் கொண்டிருந்ததாக ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளார்கள். இந்தக் காபன் டை ஒக்சைடும் ஈயமும் சேர்ந்து நீரிற் கரையக்கூடிய ஈயக் காபனேற்றைத் தோற்றுவித்தன. இது மனிதவுடலை அடைந்ததும் படிப்படியாக எலும்புகளினுட் சென்று கல்சியம் எனும் கனிப் பொருளை அழித்ததனால் பல நோய்கள் ஏற்படலாயின. அகழ்வின் போது மீட்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளில் அளவுக்கதிகமான ஈயம் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை இதனை உறுதி செய்கிறது. இவ்வாறு பல வழிகளிலும் பண்டைய உரோமர்களைப் பாதித்த ஈய உலோகமானது காலப் போக்கில் உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கே அடி கோலியது.

**(World Famous Stories of Metals -By Sadhana Saxena)**

**அ.சோமபாலன், திருநெல்வேலி.**




## அன்னை

அன்னைக்கு நிகரானவர் அகிலத்தில் யாருமிலர்
அன்பொழுகு திருமுகத்தை அளவிடும் தூய்மையது
பெண் இனம் போற்றும் உத்தமியாய் பாரினிலே
பெருமையுடன் எமையீன்ற அன்னைக்கு நிகருண்டோ?
கருவினிலே தான் காத்து களிப்புடனே ஈன்றெடுத்து
உருவாக்கி மனிதனாம் வாழவழிதனைப் பேணி
கட்டி இறுகணைத்து கண்ணுறங்கத் தாலாட்டி
காத்திட்ட தெய்வமே பாரினில் உனக்கு நிகருண்டோ?

சா.ஹரிகரன்

## நம்பமுடியாத உண்மை



நம் நாட்டில் திரைப்படம் பார்க்க வேண்டுமானால் திரை களுக்குச் செல்ல வேண்டும் அதற்காக ஓரிரு நாட்களையே செலவழிக்க வேண்டும்.

''படம் முடிந்து வீடுவரும் வரையில் அச்சச்சோ.......என்றாகி விடும்.

ஆனால் வெளிநாடுகளில் முகத்தில் பொருத்தியபடியே 6 அடித் திரையில் படம் பார்க்கலாமாம். எப்படி? எனக் கேட்கிறீர்களா.

படத்தில் காட்டப்பட்டவாறு மூக்குக் கண்ணாடி போன்ற ஒன்றை முகத்தில் மாட்டி அதற்குத் தேவையான உள்ளங்கை அளவிலான ''செற்றையும் அதனுள் பொருத்தினால் முகத்தில் மாட்டப்பட்ட கண்ணாடியில் 6 அடி உயரத்திரையில் படம் பார்ப்பது போலிருக்குமாம்.

''பைனியர் ரி.வி. 10 ஐ என்ற பெயர் கொண்ட இம் முத்திரையில் கணனி விளையாட்டுக்கள் கூட விளையாடலாமாம்.

இது நமது நாட்டுக்கு வந்தால் எங்கெல்லாமோ போய் படம் பார்க்கலாம் சமையலறையிலும் கூட........

தொகுப்பு:- அன்ரனி நிரோஜிகன்.

## பெருக்கல் புதுமைகள்

37x3=111
37x6=222
37x9=333
37x12=444
37x15=555
37x18=666
37x21=777
37x24=888
37x27=999

(6x6)+6=42
(66x6)+6=402
(666x6)+6=4002
(6666x6)+6=40002
(66666x6)+6=400002

தொகுப்பு:- தி. மயூரகிரி
யாழ் இந்துக் கல்லூரி

## கணிதப் புதிர்

இடமிருந்து வலமாகவோ மேலிருந்து கீழாகவோ மூலை விட்டமாகவோ கூட்ட 34 விடையாக வருமாறு இடைவெளிகளை எண்களால் நிரப்புக.

| | | | |
|---|---|---|---|
| | | | 4 |
| 8 | | | |
| 12 | | | |
| | | | 16 |

விடைகள்


| | | | |
|---|---|---|---|
| 1 | 14 | 15 | 4 |
| 8 | 11 | 10 | 5 |
| 12 | 7 | 6 | 9 |
| 13 | 2 | 3 | 16 |

P.அன்ரன் ஜெயக்குமார்

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத் தயார் தானே?



## புத்திசாலி விறகுவெட்டி



ஓர் ஊரில் விறகு வெட்டி ஒருவன் இருந்தான். ஆனால் அவன் மிகவும் ஏழை. கண்பார்வை அற்றவன். ஒரு கால் நொண்டி. இவன் ஒவ்வொருநாளும் தனக்குப் பழக்கமான பாதையால் காட்டிற்குச் சென்று விறகு வெட்டுவான்.

ஒரு நாள் இவன் காட்டிற்கு சென்றதும் ஒரு பெரிய ஆலமரத்தில் இருந்த தேவதை இவனைக் கண்டு பரிதாபம் அடைந்தது. தேவதை விறகு வெட்டியைப் பார்த்து ''நான் உனக்கு ஒரு வரம் தருகிறேன். 'நீ விரும்பியதைக் கேள்'' என்றாள். விறகு வெட்டியும் சிறிது நேரம் யோசித்துவிட்டு ''நான் எனது வீட்டு மூன்றாவது மாடியில் ஓடிச்சென்று கீழே எனது பிள்ளைக்ள் விளையாடுவதைப் பார்க்க வேண்டும்'' எனக் கூறினான். தேவதையும் ''உனது புத்திசாலித்தனத்தை நான் மெச்சுகிறேன். நீ உனது வீட்டை அடைந்தவுடன் நீ கேட்ட வரம் கிடைக்கும்'' எனக் கூறி மறைந்தாள்.

விறகு வெட்டி தனது வீட்டை அடைந்தவுடன் கண் பார்வை பெற்றான். கால் ஊனமில்லாமல் நின்றான். பணக்காரன் ஆனான். விறகு வெட்டி தனது புத்திசாலித் தனத்தால் எல்லா சுகபோகங் களையும் அடைந்தான்.

ஆக்கம் – ற. நிரோஷினி
யாழ் இந்து மகளிர் கல்லூரி

## விடுகதைகளும் விடைகளும்

1. காலையில் பிறந்தவனுக்கு மாலை வரை ஆயுள். மாலையில் பிறந்தவனுக்கு விடியும் வரை ஆயுள். அவர்கள் யார்?
   சூரியன் - சந்திரன்

2. தட்டும் தாளம் நின்று விட்டால் ஆட்டம் ஏதும் இருக்காது அது என்ன?
   இதயம்

4. நீலமேனி கொண்டான். நிலம் சுற்றி அலைகிறான். அது என்ன?
   கடல்

ந. றோசிகா

## பொன் மொழிகள் - வெற்றி

★ வெற்றியின் சிறந்தபயன் மன்னித்தலே - (தேரோ)
★ உதவுங்கள் வெற்றிக்கு முதல்படி அது - (காங்கிரீ)
★ வெற்றியின் இரகசியம் எடுத்த செயலில் நிலையாக நிற்பது - (கிளேடர்)
★ வெற்றி என்பது குறிக்கோள் அன்று, அது ஒரு பயணமேயாகும் - (ஆர்தர் ஹேவிட்)
★ உறுதியைப் போல் உழைப்பும் இருந்தால் வெற்றி காணுவாய் - (ஷெல்லி)
★ வெற்றி என்பது மதில்மேல் இருக்கும் பூனை அது எந்தப் பக்கம் குதிக்கும் என்று சொல்ல முடியாது. ஒருவேளை அது ஒருபக்கமும் குதிக்காமல் கூட இருந்து விடலாம். (பகவான்)
★ வெற்றி எண்ணத்தைப் பொறுத்தே இருக்கின்றது - (நெப்போலியன்)
★ ஒருவன் தனக்கு அளவற்ற உற்சாகம் இருக்கும் எந்தத் தொழிலும் வெற்றி பெற முடியும் -( சார்லஸ் ஷிவாப்)

ப.சுரேந்திரன்,
திக்கம்.

## எனது செல்லப்பிராணி



1) நான் அன்புடன் வளர்க்கும் செல்லப் பிராணி நாய்.
2) எனது நாயின் பெயர் லக்கி. அதன் நிறம் கறுப்பு.
3) நான் லக்கிக்கு சோறும் பாலும் தயிரும் பருப்பும் உணவாக வைப்பேன்.
4) மாலை வேளைகளில் லக்கியுடன் சந்தோஷமாக விளையாடுவேன்.
5) என்னை அது ஒருவரும் தீண்டாது பாதுகாக்கும்.
6) அது மிகவும் நன்றியுள்ள செல்லப்பிராணி.
7) நான் ஒருபோதும் அதனை மறக்கமாட்டேன்.

செ. அச்சுதன்
கொழும்புத்துறையூர்

## அன்பே கொடை

ரஷ்ய எழுத்தாளரான டால்ஸ்டாய் ஒருநாள் ஏதோ வேலையாக ஓர் ஊர் வழியாகச் சென்று கொண்டிருந்தார். கந்தல் ஆடையுடன் கண்கள் குழி விழுந்து பரிதாபமாகக் காட்சி அளித்த பிச்சைக்காரன் ஒருவன் அவரிடம், ''ஐயா! நான்கு நாளாகப் பட்டினி. இந்த ஏழைக்கு ஏதேனும் பிச்சை போடுங்கள்'' என்று கையை நீட்டினான்.

அந்தப் பிச்சைக் காரனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைத்த டால்ஸ்டாய் தம் சட்டைப் பைகளைத் துழாவினார். உண்மையிலேயே அப்பொழுது அவரிடம் ஒரு காசு கூட இல்லை.



என்ன செய்வது என்று நினைத்த அவர், பிச்சைக் காரனைப் பார்த்து, ''சகோ தரனே! என்னிடம் இப்பொழுது காசு இல்லை, நீ என் வீட்டிற்கு வந்தாலோ அல்லது உன்னை மறுமுறை சந்தித்தாலோ நான் உனக்கு நிறைய பிச்சை போடுகிறேன்'' என்றார்.

இதைக் கேட்ட பிச்சைக்காரன் தழுதழுத்த குரலில் ''ஐயா! யாரும் இதுவரை எனக்கு அளிக் காத பெரிய பிச்சையைத் தாங்கள் எனக்கு அளித் தீர்கள். என்னையும் மனித னாக மதித்துச் சகோதரனே என்று அழைத்தீர்களே, அதுவே எனக்குப் போதும். நன்றி'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

சிறுவர்களே கதையைப் படித்தீர்களா? நீங்கள், அனைவரிடமும் அன்பாக பேசுங்கள், ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுங்கள், எல்லோருக்கும் உதவும் மனப்பாங்கை வளர்த்துக்கொள்ளுங்கள். இவற்றின் மூலம் மற்றவர்களுக்கு மட்டுமன்றி உங்களிற்கும் மகிழ்ச்சி கிட்டும்.

தொகுப்பு:- சுஜா

# நியூ பிரசாந்தியின்

## இவரைத் தெரியுமா - பரிசுப்போட்டி இல - 10

படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

ஹிந்திப்பட முன்னணி நட்சத்திர நடிகர் . இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும்12ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-



'இவரைத்தெரியுமா
போட்டி இல:- 10'
நியூ பிரசாந்தி ஜுவல்லறி
95, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல: — 10**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-..............................

அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 09**
**சரியான விடை**




நடிகை கஜோல்

இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 09 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

**முதற்பரிசு: —** வ.தீபா
இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம்பரிசு: —** மேரி சாலினி சாள்ஸ்
இல 04, ஈச்சமோட்டை வீதி.
யாழ்ப்பாணம்.

**மூன்றாம்பரிசு: —** ச.கஜமுகன்
வழக்கம்பரை,
தொல்புரம்,
சுழிபுரம்.

சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-

*இ.துர்க்கா இணுவில், J. ஜெறோஸ் நாரந்தனை வடக்கு, த.தயாபரன் தெல்லிப்பழை. திருமதி.ஜி.றீற்றா குருநகர், க.புஸ்பராணி பருத்தித்துறை. ச.தமிழினி சுழிபுரம் ந.அருள்வேல் நெல்லியடி, காந்தரூபன் நல்லூர். சோ.மைத்திரி கச்சாய். கா.துளசி அச்சுவேலி. இ.ஜெனா கொக்குவில்.*

| | |
|---|---|
| முதற் பரிசு :- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

# முறையான மூச்சுப் பயிற்சி

மக்களில் பெரும்பாலோர் நுரையீரல்களைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை. விரும்பத்தகாத நிலைகளிலிருந்து மேற்போக்காகச் சுவாசிக்கின்றனர் பலர்.அவர்கள் நுரையீரலை 3-இல் ஒரு பகுதியை தான் உபயோகப்படுத்துகிறார்கள். பிராணாயாமம்நாடி சுத்தி பழகுவதால் நுரையீரல் முழுமையும் பயன்படுத்தப்பட்டு ரத்த சுத்தி அதிகமாகி நோய்த் தடுப்பு சக்தி அதிகமாகிறது. ஆயுள் நீளும்.


பிராணனை அடக்கி ஆள்வதே பிராணாயாமம். இதனை நேராக அடக்கி ஆளமுடியாது. இதன் செயலான சுவாசத்தை நெறிப்படுத்துவதன் மூலமே இதனை அடக்கி நெறிப்படுத்த முடியும். பிராணன் வசப்பட்டால் உயிர், உறுதி, சுகம், ஏற்படும்.

பிரணாயாமத்தில் இரேசகம், பூரகம், கும்பகம் என மூன்று படிகள் உள்ளன. சுவாசத்தை வெளிவிடுவது இரேசகம். சுவாசத்தை உள்ளே நிறுத்துவது கும்பகம். உள்ளே இருப்பது பூரகம்.


பிராணாயாமத்தின் முறைக்குத் தக்கபடி அதைப் பயிலும் வகையும் மாறுபடும். சாதாரணமாகப் பயிலுபவர்கள் சுவாசத்தை இடது நாசி வழியாக 8 வினாடி நேரம் உள்ளே இழுத்து பின்னர் இடது நாசி வழியாக 16 வினாடி நேரம் விடுவார்கள். இதனை நாடிசுத்தி என்கின்றனர். இதில் மூச்சை உள்ளே நிறுத்துவதில்லை.

(தொடரும்)


# பேனா நண்பர்கள்




செ. ஐங்கரன்
வயது:- 11
67, செட்டித்தெரு, நல்லூர்.
வழமையானவை.



கு. மோகனகிருஷ்ணா
வயது:- 13
நவாலி தெற்கு, மானிப்பாய்
பத்திரிகை, வானொலி,
தொலைக்காட்சி



ச. ஜெயக்குமார்
வயது:- 17
18/2 விதானையார் வீதி,
சுண்டுக்குழி
வலம்புரிப் பத்திரிகை வாசிப்பது
வானொலி கேட்பது




யோ. பரணிதரன்
வயது:- 15
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
வானொலி கேட்பது,
பத்திரிகை வாசித்தல், பேனா நட்பு.



பொ.றொபின்சன்
கோவிற்சந்தை.
வாசிகசாலை வீதி
கட்டைவேலி கிழக்கு
கரவெட்டி.
பத்திரிகை , வானொலி ,
தொலைக்காட்சி

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல 11



அனுப்ப வேண்டிய முகவரி:-

**ஸ்ரீ வாணி நகை மாடம்,**

குறுக்கெழுத்துப் போட்டி இல 11
இல. 173, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்:-..............................

விலாசம்:-..............................
..............................
..............................

..............இங்கே வெட்டுக..............................

**இடமிருந்து வலம்:-**

1) சீதை 3) மகிழ்ச்சி 5) இவன் தொழிலில் இலாபம், நட்டமைடைவது இயல்பு 6) மிருகங்களின் தற்பாதுகாப்பு உறுப்புகளில் ஒன்று 9) ஞானம் 10) ஆட்டுக்கடா 11) நீர்வாழ் உயிரினம்

**மேலிருந்து கீழ்:-**

1) ஒரு மதம் 2) உலகில் நன்மை, தீமை ஏற்படுவதற்கு இவற்றின் செயற்பாடுகளே காரணமென்பர் 4) முகம் 6)கட்டடவேலை செய்பவன் 7) முறையீடு 8) மாறுபாடு

குறுக்கெழுத்துப் போட்டி இல 10இற்கான விடைகள் இடமிருந்து வலம்

*1) குவலயம் 3) சம 5) சட 6) தையல் 7) சனசந்தடி 8)நம் 9) முருகு 11) உடை 13) வெரு 15) வாதை 16)தெள் 17) தருமக்கட்டளை 19) பதிகம்.*

குறுக்கெழுத்துப் போட்டி இல 10இற்கான விடைகள் மேலிருந்து கீழ்

*1) குட்சம் 2) வசனநடை 4) மங்கலவெள்ளை 9) முந்தைய 10) குடில் 11) உவாமதி 12) இருதயம் 14) பதம் 18) கரு 19) பக்தை 20) வடதெரு*

பல வாசகர்கள் இக் குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்ற அதிர்ஷ்டசாலிகளின் விபரம்:-

1ஆம் பரிசு:- கே. அரசேஸ்வரன்
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு.
யாழ்ப்பாணம்

2ஆம் பரிசு :- திருமதி.ஏ.ஷர்மிளா
இல.883, நாவலர் றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

3ஆம் பரிசு:- கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை


போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.

*N.உஷா, 17.K.K.S வீதி, இ.பிரசாந் வரணி, இ.பபிராம் மனிப்பாய், இ.லக்ஷனா சங்கத்தானை, வீ.ஜெகதீசன் வட்டுக்கோட்டை, கா.கார்த்திக் வடலியடைப்பு, இ.ஆரணி அல்லாரை, கா.பிரியதர்ஷி உடுவில், ம.கௌரீசன் வேலணை, சோ.கோகுல் கரவெட்டி, செ.செந்தில்குமார் கொட்டடி, தி.கோஷலா திருநெல்வேலி.*

குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''குறுக்கெழுத்துப் போட்டி இல 11'' எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 12.05.2002.


| | |
|---|---|
| முதற் பரிசு :- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |

குறிப்பு:- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை ஸ்ரீவாணி நகை மாடத்தில் பெற்றுக் கொள்ளவும்.





# சீரியஸ் படங்களில் இருந்து விலகி கொமடிக்கு மாறுகிறார் அஜித்!

ராஜாவின் நண்பன் சுந்தர். ஒரு கல்லூரியில் படிப்பவன். அவன் தன்னுடன் படித்த மாணவி லதாவைக் காதலித்தான். அந்தப் பெண்ணும் அவனை காதலித்தாள். ஆனால், அதே கல்லூரியில் படித்து வந்த பவானிக்கு தன் கல்லூரி மாணவர்கள் யார் காதலித்தாலும் பிடிக்காது. அவர்களை அடித்து, அந்தக் காதலர்களை பிரித்து விடுவான். அப்படித்தான் சுந்தரின் காதலை பிரிக்கப் பார்த்தான். உடனே சுந்தர் நண்பன் ராஜாவை சந்தித்து விஷயத்தைக் கூறினான். அந்தைக் கேட்ட ராஜா கோபப்பட்டான். காதல் என்பது எவ் வளவு புனிதமானது. இதை புரியாம, உங்க காதலை தடுக்க அவன் யாரு? என்று கர்ஜித்த ராஜா, பவானியைச் சந்தித்து எச்சரித்தான். அவனது பேச்சுக்கு மரியாதை கொடுக்காமல் எகத்தாளமாகப் பவானி பேச, அவனை அடித்து விரட்டியடித்தான் இதில் அஜித்



முதலத் தடவையாக அக்ஷன் கலந்த கொமடியாக நடித்திருக்கிறார். ராஜா.செரீன் மூவிமேக்கர்ஸ் சார்பில் எஸ். திருவேங்கடம் பிரம்மாண்டமாகத் தயாரிக்கும் ராஜா படத்துக்காக இக்காட்சி மடமானது. ராஜாவாக அஜீத்குமார். பவானியாக சோனு, சுந்தராக ரவி, லதாவாக புதுமுக நடிகை ஒருவர் நடித்தனர். இதில் கதாநாயகிகளாக ஜோதிகா, பிரியங்கா திரிவேதி நடிக்கின்றனர். முக்கிய வேடத்தில் லிவிங்ஸ்டன் நடிக்கிறார். 'ரெட்டை ஜடை வயசு' படத்தில் அஜித்தோடு ஜோடி சேர்ந்த மந்த்ரா இதில் ஒரு பாடலுக்காக ஆடியிருக்கிறார். தமிழ்ல ரீஎண்ட்ரி ஆகறதுக்கு இந்த ஒரு பாடலே போதும் என்கிற அளவுக்கு அடிசுரகளை பண்ணியிருக்கிறாராம் மந்த்ரா...




அரவிந்த் ஒளிப்பதிவு செய்ய, எஸ்.ஏ. ராஜ்குமார் இசை அமைக்கிறார். என்.பிரசன்னகுமார் வசனம் எழுத, கனல் கண்ணன் சண்டைப் பயிற்சி அளிக்கிறார். கதை, திரைக்கதை எழுதி எஸ். எழில் இயக்குகிறார்.



'பெரிய ரவுண்டு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட காயத்ரி ஜெயராம் சுத்தமா வாய்ப்பே இல்லாமல் இருக்கிறார். இதற்கு நடுவே 'ஸ்ரீ' படத்தின் மூன்று கதாநாயகிகளில் ஒருவராக ஒப்பந்தமாயிருக் கிறார். புஷ்பவாசன் இயக்கும் இந்தப்படத்தில் சூர்யாதான் ஹீரோ! ஹீரோவைவிட காயத்ரி உயரம் அதிகமா இருப்பாரே? காதலுக்கு உயரம் பெரிய விஷயமில்லை என்கிறார் இயக்குனர் புஷ்பவாசன். அதுவும் சரிதான்.

காயத்ரி ஜெயராமுக்கும் லாரா தத்தாவுக்கும் ஒரு தொடர்பு உண்டு. என்ன? 2000–ல் நடந்த உலக அழகிப் போட்டியில் முதலிடம் லாரா வுக்கு. அவரோடு போட்டிபோட்டு நான் காவது இடம் வரை போனவர் காயத்ரி!




பேசாத கண்ணும் பேசுமே படத்தில் "மம்தா"

# கஜாலா நடிக்கும் "யூனிவர்சிட்டி"

மாயாபுரி ஸ்கிரீன்ஸ் பட நிறுவனம் தயாரிக்கும் படம் "யுனிவர்சிடி". இப்படத்தில் புதுமுக கதாநாயகன் ஜீவன் நடிக்கிறார். கதாநாயகியாக புதுமுக நாயகி கஜாலா



அறிமுகமாகிறார். மற்றும் விவேக், ரகுவரன், மணிவண்ணன், குயிலி, இளவரசு, துரைப்பாண்டி, கவிதா, சோனியா, மோனோ நடிக்கிறார்கள். கஜாலாவை தமிழுக்கு அழைத்து வந்து ஒப்பந்தம் செய்த முதல் படம் யுனிவர்சிடி. இந்தப் படத்தின் ஒரு கட்ட படப்பிடிப்பு முடிவடைந்த போது அர்ஜுனுக்கு ஜோடியாக 'ஏழுமலை' படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டார். 'யுனிவர்சிடி' படப்பிடிப்பி லிருந்த கஜாலாவை சந்தித்தோம். ரொம்பவும் சந்தோஷத்துடன் இருந்த அவர் "இன்னிக்கி ஆந்திரா வின் கனவுக்கண்ணி என்று எனக்கு பட்டப் பெயர் வைத்து தெருவுக்குட் தெரு ரசிகர் மன்றங்கள் ஆரம்பிச்சிருக் காங்கன்னா பார்த்துக் கங்க. தெலுங்குல நான் அறிமுகமான முதல் படமே நூறாவது நாளுக்கு மேல ஓடி வெற் றி பெற் றது. ஜெகபதி பாபுவுடன் 'நாளெல்லாம் பிரேமா' என் ற படத்தின் மூலம் அறிமுகமானேன். 'அதற்குப் பிறகு ஜூனியர் என்.டி.ஆர். ஜோடியாக நான் நடித்த 'ஸ்டண்ட் நம்பர் 1' என் ற படமும் சூப்பர் ஹிட். இளை ஞர் பட்டாளமே என் னைப் பார்த்து சொக்கிப் போயிட்டாங்க" என் று கண்களை அகல விரித்து சிரிக்கிறார். "அந்த படங்களைப் பார்த்துதான் டைரக்டர் பிரகதீஷும் தயாரிப்பாளர் பாலசுபரமணியும் சேர்ந்து 'யுனிவர்சிடி' படத் துக்காக ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் அதற்குள் அர்ஜுனுடன் 'ஏழுமலை' படம் ஒப்பந்தமாகி அது தான் முத லில் ரிலீசாகப் போகிறது என்கிறார். மும்மையைச் சேர்ந்த கஜாலா, படித்தது 'ப்ளஸ் டு'. வயது இருப தைத் தொட்டிருக்கும் கஜாலாவின் அப் பா மஸ் கட்டில் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறா ராம்.



அநேகமாக... யுனிவர்சிட்டிக்கு அப்புறம் தமிழ் கூறும் நல்லுலகு உஜாலாவுக்கு ஸாரி... கஜாலாவுக்கு மாறினா லும் ஆச்சரிய மில்லை! காரணம்? மும்தாஜ் களை சண்டைக்கு இழுக் கிற மாதிரி சளைக்காமல் கவர்ச்சி காட்டியிருக்கி றார் என்கிறார்கள் யுனிவர்சிட்டி ஆட்கள்! தலைமை ரசிகர் மன் றப் பொருப்பாளரா இருக்க நான் ரெடி!

# இரண்டு கெட்டப்பில் அருண் நடிக்கும் 'ஆரியன்'!

## கதாநாயகியாக ஷாக்சியின் தங்கை அறிமுகம்!



மலையாளட்தில் மோகன் லால் – மீனா நடிட்து வெற் றி பெற் ற 'வர்ணபகிட்டு' படட்தை தயாரிட்தவர் ஜோகுட்டன். மற் றும் பல மலையாள படங்களை தயாரிட்த இவர் முதன் முதலாக தமிழில் ஒரு புதிய படட்தை தயாரிக்கிறார். பி.ஜே.எல். என் ற நிறுவனம் சார்பில் இவர் தயாரிக்கும் படட்திற் கு 'ஆரியன்' என் று பெயரிட் டுள்ளார். இதில் கதாநாயகனாக அருண் நடிக்கிறார். அருண் குமார் என் பதை மாற் றி அருண் என சுருக்கி வைட்துள்ளார். இந்த படட்தில் இரண்டு வித தோற் றடதில (இரண்டு வேடம் அல்ல) நடிப்பதற் காக தியானம், உடற் பயிற் சிகளை கடுமையாக செய்து ஒன் பது கிலோ குறைட்துள்ளார். இவருக்கு ஜோடியாக ஷில்பா ஆனந்ட் அறிமுகமா கிறார். இவர் நடிகை ஷாக்சியின் தங்கை. முதல் படட்திலேயே இரட்டை வேடட்தில் நடிக்கும் அதிர்ஷ்டசாலி இவறாகதானிருப்பார். இவர்களுடன் விவேக், ஆனந்தராஜ், கருணாஸ், ராஜன் பி.தேவ், ராஜீவ் மற் றும் ஒரு முக்கிய வேடட்தில் பிரபல நடிகர் ஒருவரும் நடிக்கவிருக்கி றார். இப்படட்தை. ஷார்வி என் ற மலையாள இயக் குனர் இயக்குகிறார். டைரக்டர் ஐ.வி. சசியின் உதவியாளரான இவர் ஏற் கனவே மலையாளட்தில் திலகன் நாயகனாக நடிட்த 'காந்தியன்', காமெடி நடிகர் ஜெகதீஷ் நடிட்த 'ஸ்பைடர் மேன்' படங்களை இயக்கி தனி சிறப்பு பெற் றவர். மூன் றாவது படமாக தமிழில் இயக்குனராக அறிமுகமாகி றார். இதன் பூஜை 'மே' மாதம் நடைபெறுகிறது. சென் னை, பாண்டிச்சேரி, மலை பிரதேசங்கள் மற் றும் கனடாவிலும் படமாக்கப்படுகிறது.

இசைகார்ட்திக்ராஜா ஒளிப்பதிவு என். அரவிந்ட் எடிட்டிங் சுரேஷ் அர்ஸ் நடனம் பிருந்தா விசேஷமான தொழில்நுட்பட்துடன் இதன் சண்டை காட்சிகள் அமைக்கும் பொறுப்பை ஏற் றுள்ளார் ராக்கி ராஜேஷ். இதற் காக ஆஸ்திரேலியா சண்டை பயிற் சி தொழில்நுட்ப கலைஞருடன் பேச்சுவார்ட்தை நடட்திக் கொண்டிருக்கிறார்களாம்!



ஷேக்ஸ்பியரின் கிளியோபாட்ராவைப் பற் றிச் சொன்னாலே காதல்தான் ஞாபகம் வரும். கிளியோபாட்ராவை மலையாள மண்ணுக்கேட்த மாதிரி மாற்றி படமாக்கிக் கொண்டிருக்கிறார் ஜெயராஜ். படட்துக்கு தலைப்பு என் ன தெரியுமா? 'கண்ணகி'. பிரச்சினைக்குரிய தலைப்பை வைட்திருக்கிறீர்களே என் று கேட்டால் "அதெல்லாம் பிரச்சினை இல்லை" என் கிறார். சரி.. கண்ணகி யாரென் று சொல்லலையே... நந்திதாதாஸ்!



பத்திரிகை. வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2002 இல் அச்சிட்டு